KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 02 October 2026 இதழ்:- 28

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# யாழ்ப்பாணம் வரப் பயந்த கோத்தபாய கொழும்பு நீதிமன்றத்தில் முன்னிலையானார்! வெளியே பெரும் கவனயீர்ப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணத்தில் ஏற்பாட்டாளர்களான லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் போனது தொடர்பான வழக்கில் சாட்சிய மளிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 29 செப்டம்பர் 2026 கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையானார். 2011 ஆம் ஆண்டில் இரு ஏற்பாட்டாளர்கள் காணாமல் போனது தொடர்பான வழக்கில், செப்டம்பர் 29அன்று கொழும்பு (24ம் பக்கம் பார்க்க)



## "கோட்டா கோகம" தாக்குதல்:- மஹிந்தாவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் இல்லை! சட்டமாஅதிபர் தீர்மானம்

# திலீபன் நினைவிடம்:- 1988 முதல் 2026 வரை தொடரும் ஒரு வரலாறு




1987 ஜீலை மாதம் கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் சூழலில் இந்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்திய ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து, இராசையா பார்த்திபன் எனும் இயற் பெயரைக் கொண்ட திலீபன் 1987 செப்டெம்பர் 15ஆம் திகதி நல்லூரில் உணவு மற்றும் நீர் அருந்தாத உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். பன்னிரண்டு நாட்கள் நீடித்த அந்தப் போராட்டத்தின் முடிவில் செப்டெம்பர் 26ஆம் திகதி உயிரிழந்தார். (19ம்பக்கம் பார்க்க)

# மழைக்காக மந்திர நீரைத் தெளிக்கும் நாட்டில் சோதிடர்கள்!

கடந்த வாரம் ஒரு பௌத்த மதகுரு விமானப்படை ஹெலிகாப்டரில் பறந்தபடி நாட்டின் மீது மந்திரித்த நீரைத் தெளித்தார். பருவ மழைக்காக காத்திருந்த நாட்களில் நாட்டில் நிலவிய வறட்சியை நீக்கி மழையை வர்ஷிக்குமாறு வேண்டி மந்திரித்து அந்த நீர் தெளிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (16ம் பக்கம் பார்க்க)


METROPOLITAN CENTRE
KENNEDY & FINCH
3840 FINCH AVE E, SCARBOROUGH, ON M1T 3T4
OCT 3, 2026 | SATURDAY @ 6 PM
Title Sponsor
Vijaya Jewellery
TICKET AVAILABLE HERE
Scarborough
Cell Tell Mobility
2611 Eglinton Ave East
416-266-6818
Sun City Supermarket
2761 Markham Rd
(416) 724-6666
Gunaams Supermarket
145 Morningside Ave Unit 33
(416) 283-9998
Cell Tell Mobility
Birchmount Road / Finch
2950 Birchmount Rd Unit# 5C
(416) 495-7776
Kennedy & Ellesmere
Samy & Sons
416-298-1598
Ruby & Ruby Saree Palace Inc.
2843 Lawrence Ave Est
416-264-7833
Markham & Steeles
New Ranganas Jewellery
6055 Steeles Ave E Unit C102
(647) 947-2864
Vijaya Jewellery
3341 Markham Rd #127,
(437) 833-3197
NEW ROYAL FASHIONS
6055 Steeles Ave E
(416) 519-1119
Sprin Florist Canada
3011 Markham Rd
416-893-2624
Majestic City
Designs 2 Prints LTD
Tel: 647-858-2290
GTA Square Mall
Winners Lotto Centre
Tel: 416-291-9990
Eraa plaza (Neilson / Finch)
Sai Elanthulir Fashion
Jewellery & Money Transfer
Tel: 416-471-1002
Tapscott Rd / Finch ave
MS Convenience
416-332-0961
5633 Finch Ave E units 5
Middlefield Rd & Steeles Ave
Pasumai Market
2-2002 Middlefield Rd, Markham,
(905) 472-5525
Etobicoke (Kipling & Steeles)
A S A Financial Service
(in Uthayas Supermarket)
Tel:416-742-1425
AJAX (Harwood & Taunton Rd)
New Spiceland Restaurant
905-426-4445
Mukesh
Playback Singer
Varsha S krishnan
Zee Tamil Title Winner
Santhosh Subramanian
Playback Singer
Magisha
Super Singer
Venkat
Tabla
Manikandan
Keybordist
Old is gold
நெஞ்சம் மறப்பதில்லை
Thalalaya Live Band
SCAN NOW
GET 20% OFF YOUR TICKET!
Amazing Electric Motors Ltd.
Kenney Nithiy
Service Center Manager
Tel: (416) 291-7242
1-877-291-7242
Cell: (416) 540-8875
Fax: (416) 623-8258
VIBRANT HOSPITALITY GROUP
STANDARD MORTGAGES INC.
RAJ SUBRAYAM
CEO
416-993-2638
SHIVAS CHICKEN
WHOLE SALE CANADA INC
416-910-3244
186 Bartley Dr. #12A, Toronto, ON
TICKETS $30 | $50 AND VIP
More Info 416-564-9642 | 416-566-0790
H & ME
(416) 894-9309
YOUR NEXT MOVE STARTS HERE
Real Estate + Mortgage Guidance in One Call
CALL ME WITH CONFIDENCE
SIVA NAGAMANY
KT GROUP
BEHIND ME MEDIA
Guna Selliah
Insurance Broker
416.317.6500
நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
North Toronto
CREMATORIUM
Royal Fashions
BRIDAL JEWELLERY RENTAL
Ocean Accounting Tax Consultants
Accounting Services for Personal and Smalll Business
416-285-6900
Spring
For All Moments of Life
416-893-2624
647 218 6222
TSA
MEAT STORE
437-886-2597
647-328-8880
Canadian Tamils' Business Directory
TAMILS' GUIDE
Athavan Publications Inc.
Tel: 416.615.4646
Senthi Chelliah
President & CEO
www.tamilsguide.com
Our Services
Oasis
ONLINE: 416-623-8110
YUGAM
RADIO
Ravi: 416-898-7284
Ruby: 416-670-6522
JRB
universal inc
R.R.Rajkumar
647-289-6164

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# கனடாவில் புதிய வகை தொலைபேசி மோசடி!

கனடாவின் வடக்கு ஒன்டாரியோ பிராந் தியத்தில் பிரபல 'ரோஜர்ஸ்' தொலைத் தொடர்பு நிறுவனத்தின் பெயரில் இடம் பெற்று வரும் புதிய வகை 'பொருட் களைத் திருப்பி அனுப்பும் மோசடி' காரணமாகப் பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கான டொலர்களை இழந்து வருகின்றனர்.

இம்மாநிலத்தின் சட்பரி நகரைச் சேர்ந்த ஜோன் லேண்ட்ரி எனும் பெண், இம்மோசடிச் கும்பலின் வலையில் விழுந்து தற்சமயம் ரோஜர்ஸ் நிறுவனத் திற்கு சுமார் 17.000 கனடிய டொலர் களைக் கடனாகச் செலுத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்.

ரோஜர்ஸ் நிறுவனத்திலிருந்து பேசுவ தாகக் கூறி ஜோன் லேண்ட்ரியைத் தொடர்பு கொண்ட மோசடி நபர்கள், மிகக் குறைந்த விலையில் கவர்ச்சிகர மான கைப்பேசிச் சலுகையை வழங்கு வதாகக் கூறியுள்ளனர்.

அதனை நம்பி அவர் புதிய தொலை பேசியையும் அதன் சாதனங்களையும் ஆர்டர் செய்துள்ளார். இரண்டு நாட் களில் அப்பொருட்கள் அவரது வீட்டி ற்கு வந்து சேர்ந்து ள்ளன.

எனினும் உடனடியாக மீண்டும் அவ ரைத் தொடர்புகொண்ட மோசடி நபர் கள், 'உங்களுக்குத் தவறான கைப்பேசி அனுப்பப்பட்டு விட்டது, அதைத் திருப்பி அனுப்ப வேண்டும்' எனக் கூறி, போலி முகவரிச் சீட்டை வழங்கி அப் பொருளைத் திரும்பப் பெற்றுள்ளனர்.

பின்னர், புதிய கைப்பேசியை ஆர்டர் செய்யுமாறும், முந்தைய தொகைக்கு மீளளிப்பு வழங்கப்படும் என்றும் அவரை நம்ப வைத்துள்ளனர்.

இவ்வாறாகத் தொடர்ச்சியாக 6 முறை அதேசெயல்முறையைச் செய்ய வைத்து இறுதியில் அவருக்கு எந்தக் கைப்பேசி யும் கிடைக்காமல் சுமார் 17.000 டொலர் களுக்கான கட்டணப் பட்டியலை அவர் தலையில் சுமத்தியுள்ளனர்.

இது குறித்துத் தெரிவித்த ரோஜர்ஸ் நிறுவனம், இத்தகைய மோசடிகளி லிருந்து வாடிக்கையாளர்களைப் பாது காக்க இணையத்தளம், மின்னஞ்சல் மற்றும் பொதிகளில் எச்சரிக்கைச் செய்தி களை வழங்கி வருவதாகவும், பாதிக்கப் பட்ட பெண்ணின் கோரிக்கையை அடுத்து சேவைக் கட்டணங்களை ரத்து செய்து தொடர்ந்து அவருடன் பேசி வருவதாகவும் தெரிவித்துள்ளது.

அதேவேளை கடந்த சில வாரங்களில் மட்டும் இவ்வாறான சம்பவங்கள் குறித்துச் சுமார் 20 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சட்பரி பொலிஸ் பேச்சாளர் கெய்ட்லின் டன் உறுதிப்படு த்தியுள்ளார்.

# கோட்டாவின் ரிட் மனு விசாரணைக்கு முன்பே நிராகரிப்பு!

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளின் ஒரு பகுதியாக, பயங்கரவாதத் தடைச் சட்ட த்தின் (PTA) கீழ் தன்னைக் கைது செய் வதையோ அல்லது தடுத்து வைப்ப தையோ தடுக்கும் உத்தரவைப் பிறப் பிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய் திருந்த ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மனு தொடர்பான சமர்ப்பிப்புகளைப் பரிசீலித்த பின்னர், அதனை விசார ணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே நிராகரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் ரோஹாந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் சரத் திஸாநாயக்க ஆகியோர் அடங்கிய இருவர் கொண்ட நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பிக்கப் பட்டது.

2019ஆம் ஆண்டு இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்கு



தல்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளைத் தீவிரப்படுத்தி வரும் நிலையில், விசாரணைகள் தொடர்பில் தமக்கு எதிராக கைது நடவடிக்கைகளோ அல் லது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கும் உத்தரவுகளோ பிறப்பிக்கப்படலாம் என்ற அச்சத்தில் கோத்தபாயவினால் பாதுகாப்பு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# தியாகதீபம் திலீபனின் சிலை விடயத்தில் தமிழரசு மீது சேறு பூசினால் தமிழ்த்தேசிய முன்னணியின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துவோம்!





தேதி: 15.09.2026

கௌரவ முதல்வர்,
யாழ்ப்பாண மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

**தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்காக Fibre உருவச் சிலையைத் தற்காலிகமாக நிறுவுவதற்கான விசேட பிரேரணையை சபையில் சமர்ப்பித்தல் தொடர்பாக.**

கௌரவ முதல்வர் அவர்களுக்கு,

தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னிட்டு, யாழ்ப்பாணம் தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் Fibre-ஆல் செய்யப்பட்ட உருவச் சிலையை நினைவேந்தலை முன்னிட்டு தற்காலிகமாக நிறுவுவதற்கு அனுமதி வழங்குவது தொடர்பான விசேட பிரேரணை ஒன்றை இன்றைய சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

இன்றைய சபைக் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளுமாறும் உரிய அனுமதியை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறும் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.

இப்படிக்கு,

சே. மதுசிகன்
மாநகர சபை உறுப்பினர்
யாழ்ப்பாண மாநகர சபை

தியாக தீபத்தின் சிலை அகற்றப்பட்ட விடயத்தில் தமிழரசு கட்சியின் மீது தமிழ் தேசிய மக்கள் முன்னணி தொடர்ந்து சேறு பூசல்களில் ஈடுபட்டால் அவர்களின் இரட்டை வேடங்களை அம்பலப்படுத்துவோம் என யாழ். மாநகர சபை முதல்வர் வி.மதிவதனி எச்சரித்துள்ளார்.

நல்லூர் நினைவாலயத்தில் இருந்த தியாக தீபத்தின் சிலை 27 செப் 2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண பொலிஸாரினால் பெயர்த்து எடுத்து செல்லப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்திற்கு தமிழரசு கட்சியின் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் மற்றும் மாநகர சபை முதல்வர் உள்ளிட்டோரும் காரணம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

அது தொடர்பில் யாழ் .மாநகர முதல்வர் வி.மதிவதனி பிரதி முதல்வர் இமானுவேல் தயாளன் மற்றும் மாநகர சபை உறுப்பினர் மயூரன் ஆகியோர் இணைந்து மாநகர சபையில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பினை நடாத்தி இருந்தனர். குறித்த ஊடக சந்திப்பில் முதல்வர் மேலும் தெரிவிக்கையில்,

தியாக தீபத்தின் நினைவேந்தல் நிகழ்வில் சிலை வைப்பதற்கு அனுமதி என சிலையை அங்கு வைத்து விட்டு கடிதம் மூலம் கோரினார். தியாக தீபத்தின் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ் மக்களின் உணர்வுசார்ந்த விடயமென்பதால் அதனை பொருட்படுத்தாமல் கட்சியிடம் கதைத்து விட்டு அனுமதி வழங்கியிருந்தோம்.

அந்த கோரிக்கை கடிதத்தில் கூட தற்காலிகமாக சிலையை வைப்பதற்கென்றே அனுமதி கேட்கப்பட்டிருந்தது. அதற்கு சபையின் ஒரு சிலரைத் தவிர ஏனைய அனைவரதும் ஆதரவுடன் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக பொலிஸார் எங்களிடமும் வந்து சில விடயங்களை கேட்டறிந்திருந்தனர். அதே போன்று சபையின் அனுமதி கோரி கடிதம் வழங்கிய உறுப்பினரிடம் விளக்கம் கேட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில், நினைவேந்தல் நிகழ்வுகள் 26ஆம் திகதியுடன் நிறைவடைந்ததை அடுத்து சிலை தொடர்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் அந்த விடயத்தை பொருட்படுத்தாமல் இருந்த நிலையில் அங்கு வந்த பொலிஸார் சிலையை அகற்றிச் சென்றிருக்கின்றனர்.

உண்மையில் இந்தச் சிலை அகற்றுகிற விடயம் குறித்து பொலிஸார் எங்களுக்கு எதுவும் தெரிவிக்கவும் இல்லை. சிலையை அகற்றுங்கள் என பொலிஸாரிடம் நாங்கள் கோரவும் இல்லை.

இருந்த போதிலும் பொலிஸார் சிலையை எடுத்துச் சென்றுள்ளனர். ஈழத் தமிழ் மக்களுக்காக தன்னுயிரையே தியாகம் செய்த தியாகியின் சிலையை பொலிஸார் எடுத்துச் சென்றமை எங்களுக்கும் மிக மனவருத்தத்தையே ஏற்படுத்தி இருந்தது.

இவ்வாறான நிலையில் சிலை அகற்றுவதற்கு நாங்களும் எங்களுடைய கட்சியும் துணை போயுள்ளதாக சேறு பூசுகின்ற வகையில் ஊடகங்கள் முன்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்திருக்கின்றனர்

அவர்களின் அரசியல் நோக்க குற்றச்சாட்டுக்களையும் சேறு பூசல்களையும் நாங்கள் அடியோடு நிராகரிக்கிறோம். எங்கள் மீது குற்றச்சாட்டை முன் வைக்க முன்னதாக இந்த விடயத்தில் தாங்கள் எப்படி நடந்து கொண்டனர் என்பதை பரிசீலித்து பார்க்க வேண்டும்.

தங்கள் மீது உள்ள தவறை மறைப்பதற்காக எங்களைக் குற்றஞ்சாட்டி தங்களை புனிதர்களாக்கி கொள்ளும் அரசியலை அவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லை ஏனெனில் அவர்களின் இரட்டை வேடங்களை நாங்களும் அம்பலப்படுத்த தயாராகவே உள்ளோம் என்றார்.

# என்னுடையதோ கட்சியினதோ கோரிக்கையின் பேரில் சிலை அகற்றப்பட்டது என்பது மிகக் கீழ்த்தரமான அரசியல் காழ்புணர்ச்சி!

என்னுடையதோ கட்சியின் கோரிக்கையின் பெயரிலோ, அல்லது தூண்டுதலின் பெயரிலோ சிலை அகற்றப்பட்டது என்பது ஒரு அபாண்டமான, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடு என தமிழரசு கட்சியின் தலைவரும் வடமாகாண சபையின் அவைத்தலைவருமான சி.வீ.கே சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவாலயத்தில் காணப்பட்ட தியாக தீபத்தின் சிலை கடந்த 27 செப் 2026 ஞாயிற்றுக்கிழமை அகற்றப்பட்டது. குறித்த சிலையை அகற்றுவதற்கு தமிழரசு கட்சியும் அதன் தலைமையும் ஒரு காரணம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் குற்றம் சாட்டியிருந்தார்.

அது தொடர்பில் தமிழரசு கட்சியினர் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பினை யாழ்ப்பாணத்தில் நடாத்திய போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்

நானும் தமிழ் அரசு கட்சியும் சிலை வைப்பிற்கு எதிரானவர்களாகவும், பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு நாங்கள் துணை போனதாகவும், எங்களுடைய கோரிக்கையின் அடிப்படையில் தான் பொலிஸார் நடவடிக்கை எடுத்ததாக அபாண்டமான குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறாக நாங்கள் சிலை வைத்தமைக்கு எதிரானவர்கள் என்ற ஒரு கருத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் முன்வைத்த விடயத்தை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

என்னுடைய கோரிக்கையின் பெயரிலோ அல்லது தூண்டுதலின் பெயரிலோ சிலை அகற்றப்பட்டது என்பது ஒரு அபாண்டமான, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடு.

நினைவேந்தல் விடயங்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், தாங்கள் தான் எல்லாம் செய்யலாம், தங்களுக்கு தான் நினைவேந்தல்கள் குத்தகை தரப்பட்டது போன்று தாங்கள் தான் எல்லாம் என தாமாகவே பிரகடனப்படுத்தி நினைவேந்தல் குழுக்கள் என உருவாக்கி நினைவேந்தல்களை செய்கிறார்கள்

தமிழ் தேசிய கட்சி என்று கூறக்கூடிய தமிழரசு கட்சி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப், டெலோ போன்ற கட்சிகள் இல்லாமல். தனியே தமது கட்சி ஏகபோகம் என ஏனையவர்களை களங்கப்படுத்தி, செயல்படுவது ஒரு அரசியல் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடு. இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தியாகி திலீபனின் அஞ்சலியை வைத்து நாங்கள் யாரும் அரசியல் செய்கிறது நாகரிகமான விஷயம் அல்ல என்பதும், அப்படி நடக்கிறது என்ற கவலையையும் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இதற்கு மேல ஒன்றும் நான் சொல்ல விரும்பவில்லை. நானோ அல்லது எங்கள் கட்சியோ பொலிஸாருக்கு சொல்லி தான் இந்த சிலையை அகற்றினார்கள் என்று சொல்கிறார்கள். அவ்வளவு சக்தி வாய்ந்தவர்களா நாம் எனவே மக்கள் இவர்களின் அரசியல் காழ்ப்புணர்ச்சியை புரிந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்



இரண்டு தடவைகள் எம்.பி ஆக இருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ அல்லது தேசியப் பட்டியல் எம்பி ஆக இருந்த கஜேந்திரனோ இதுவரை தமது பன்முக படுத்தப்பட்ட நிதிகளை ஒதுக்கவில்லை, குழப்புதல் வேலையை மட்டுமே சிறப்பாக செய்கின்றனர். தெளிவாக தெரிகிறது யாருடைய நிகழ்ச்சி நிரலில் யாருடைய தேவைக்காக அவர்கள் செயற்படுகிறார்கள்?

தியாகி திலீபன் அவர்களின் நினைவு வாரம் 2018 ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருந்த போது என்று நினைக்கிறேன். தியாகி திலீபன் அவர்களின் நினைவுதினத்தை நடாத்த தடை போட்டிருந்த நேரம். இருந்த இடம் தெரியாமல் இருந்தவர்கள் தான் இந்த கஜேந்திரகுமார், கஜேந்திரன், சுகாஸ் இன்று தியாகி திலீபன் நினைவு தூபியில் நின்று தங்களை கடும் தேசியவாதிகளாக காட்டுவதற்கு படமெடுத்து போட்டு சீன் போடுறார்கள்.

அந்த நேரம் நீதிமன்றம் சென்று வழக்காடி வென்று நினைவுதினம் நடத்த வழி வகுத்தவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இன்றைய பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அவர்களும் சக சட்டத்தரணிகளும். அது மட்டுமல்லாமல் அந்த நினைவு தூபியை சுற்றி வேலி அமைப்பதற்கு அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் சிறிதரனும் தான் நிதி ஒதுக்கினார்கள் என்பது பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றார்.

# AI 100 கோடி உயிரிழப்பை ஏற்படுத்தும் நிகழ்வுகள் சாத்தியம் - பில்கேட்ஸ் எச்சரிக்கை



செயற்கை நுண்ணறிவு (AI) தவறான நபர்களின் கைகளில் சென்றால், மிகப் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகளை உருவாக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்ததாக மாறியுள்ளதாக Microsoft இணை நிறுவனர் பில் கேட்ஸ் எச்சரித்துள்ளார்.

AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 100 கோடி உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடிய அளவிலான பேரழிவு நிகழ்வுகள் சாத்தியமாகலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக தீங்கிழைக்கும் நோக்கத்துடன் செயல்படும் நபர்கள் அதிநவீன யுஐ கருவிகளைப் பயன்படுத்துவது தொடர்பில் தாம் கவலை கொண்டுள்ளதாக பில் கேட்ஸ் தெரிவித்துள்ளார். இதன் மூலம் சைபர் தாக்குதல்கள் உள்ளிட்ட பல்வேறு பெரிய அளவிலான அச்சுறுத்தல்கள் உருவாகக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

AI நிறுவனங்கள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்வது மாத்திரம் போதுமானதாக இருக்காது எனத் தெரிவித்துள்ள பில் கேட்ஸ், செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டை பாதுகாப்பான முறையில் நிர்வகிப்பதற்காக அரசாங்கங்களால் சட்டங்கள், கண்காணிப்பு கட்டமைப்புகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் பில் கேட்ஸ், மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# மிக இளம் வயதில் கிராண்ட்மாஸ்டர் என்ற பெருமையைப் பெற்ற தமிழ் மாணவி





பிரித்தானிய வாழ் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 11 வயது சிறுமி போதனா சிவானந்தன், வரலாற்றிலேயே மிக இளம் வயது பெண் கிராண்ட் மாஸ்டர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

உஸ்பெகிஸ்தானில் செஸ் ஒலிம்பியாட் 46வது சீசன் நடந்தது. இந்த போட்டியில், இங்கிலாந்து சார்பில் இந்திய வம்சாவளி மாணவி போதனா சிவானந்தன் பங்கேற்றார். மிக இளம் வயதிலேயே சர்வதேச போட்டியில் இங்கிலாந்தை பிரதிநிதித்துவம் செய்யும் போதனாவை கிராண்ட் மாஸ்டராக சர்வதேச செஸ் கூட்டமைப்பு அங்கீகரித்துள்ளது.

ஒலிம்பியாட் போட்டியில் தனது சிறப்பான ஆட்டத்தைத் தொடர்ந்து, இந்த மைல்கல்லை எட்டினார். இது குறித்து போதனா சிவானந்தன் கூறுகையில்,

எனக்கு மகிழ்ச்சி, இத்தோடு நின்றுவிடாமல், தொடர்ந்து முன்னேறி வரலாறு படைக்கவும் விரும்புகிறேன்'' என்றார். போதனா சிவானந்தன் லண்டனில் பிறந்து வளர்ந்தார். ஹாரோவில் வசிக்கிறார். அவரது பெற்றோர் இந்தியாவின் திருச்சியை சேர்ந்தவர்கள், பிரிட்டனுக்கு குடிபெயர்ந்துள்ளனர்.

தனது 11 வது வயதில் இந்த வரலாற்றுச் சாதனையை நிகழ்த்திய போதனா சிவானந்தன் தனது 5வது வயதில் செஸ் விளையாடப் பழகிக்கொண்டவர்.

ஆன்லைன் வாயிலாக தன்னை தயார்படுத்தி போட்டிகளில் பங்கேற்றவர். கடந்த 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பிரிட்டிஷ் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில், 60 வயதான கிராண்ட் மாஸ்டர் பீட்டர் வெல்ஸைத் தோற்கடித்து சாதனை படைத்தார்.

10 வயது, ஐந்து மாதம் மற்றும் மூன்று நாட்களில், ஒரு கிராண்ட்மாஸ்டரைத் தோற்கடித்த மிக இளம் வயது பெண் வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றார். இதன் மூலம், இதற்கு முன்பு அமெரிக்க வீராங்கனை கரிசா யிப் வைத்திருந்த சாதனையை முறியடித்து இருக்கிறார். வாழ்த்துக்கள் போதனா.

# முதிய தமிழ் பெண்மணியிடம் காலில் விழுந்து நடித்து 20,000 டொலர் தங்க நகை பறிப்பு





கனடாவில் நடைப்பயிற்சி மேற்கொண்ட 78 வயதான முதிய பெண்மணி ஒருவரிடம் கவனத்தை திசைதிருப்பி 20,000 டாலர் பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஜீலை 28 ஆம் திகதி மாலை 6 மணியளவில் சிங்குவாக்கூசி வீதி மற்றும் பொவைர்ட் டிரைவ் வெஸ்ட் பகுதிக்கு அருகிலுள்ள குடியிருப்பு வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட முதிய பெண்மணியின் மகன் ராகவேந்திராகுமார் தெரிவிக்கையில், ஆங்கிலம் சரியாகப் பேசத் தெரியாத தனது தாயார், தம்மை நெருங்கிய பெண்ணை அண்டை வீட்டுக்காரர் என்று நினைத்துள்ளார்.

அப்போது அந்தப் பெண், நம்பிக்கையைச் சம்பாதிப்பதற்காக முதியவரின் கால்களைத் தொட்டு வணங்குவது போல நடித்து, அவரைக் கட்டியணைத்துள்ளார்.

அந்த சில விநாடிகளில் முதியவர் அணிந்திருந்த உண்மையான தங்கச் சங்கிலி மற்றும் தங்கக் காப்புகளைக் கழற்றிக் கொண்டு அவருக்குத் தெரியாமல் ஒரு போலிச் சங்கிலியைக் கழுத்தில் மாட்டி விட்டுத் தப்பியோடியுள்ளார்.

பின்னர் அருகில் நின்ற வெள்ளை நிற 'செவ்ரோலெட் எக்வினாக்ஸ்ரக எஸ்.யு.வி காரில் சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் வெறுமனே பண மதிப்புடையவை மட்டுமல்ல, உணர்வுப்பூர்வமானவை என்றும் ராகவேந்திரா குமார் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

எனது தந்தை ஒரு பொற்கொல்லர், 1971 ஆம் ஆண்டு திருமணம் நடந்தபோது எனது தாயாருக்காக அவரே தன் கையால் இந்த நகைகளைச் செய்து பரிசளித்தார். எனது தந்தை 2008 இல் காலமானார். இதனால் இந்த நகைகள் எனது தாயாருக்கு மிகவும் உணர்வு பூர்வமானவை' என அவர் குறிப்பிட்டார்.

இச்சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த இதய நோயாளியான தனது தாயார், நடுங்கியவாறு வீட்டிற்கு வந்து சுமார் 30 நிமிடங்கள் பேச்சற்று இருந்ததாகவும், இந்த பயத்தின் காரணமாக தற்போது அவர் வெளியில் நடைப்பயிற்சி செல்வதையே நிறுத்தி விட்டு வீட்டின் பின்புறத்தில் மட்டும் நடப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். பொலிசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வெடுக்குநாறி மலையில் மேலே சிவன்! கீழே புத்தர்!





நெடுங்கேணி வெடுக்குநாரி ஆதிசிவன் ஆலய வளாகத்தில் திடீரென புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கு பௌத்த பிக்குகள் எடுத்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.

26 செப் 2026 புரட்டாசிச் சனிக் கிழமையை முன்னிட்டு வெடுக்குநாரி ஆலயத்தில் பெருந்திரளான இந்து பக்தர்கள் வருகை தந்து ஆதி சிவனுக்கு பூஜை வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில், பௌத்த பிக்கு ஒருவர் தலைமையில் வருகை தந்த குழுவினர் ஆதி சிவன் ஆலய வளாகத்தில் புத்தர் சிலை ஒன்றை வைத்து பௌத்த மத வழிபாடுகளுக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க முயன்றமை அப்பகுதியில் பதட்ட நிலையை தோற்றுவித்தது. சம்பவ இடத்தில் பெருமளவிலான பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப் பட்டனர். ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு, அவர்களின் பெயர் மற்றும் விவரங் களை முழுமையாகப் பதிந்த பின்னரே பொலிஸாரால் உள்ளே செல்ல அனு மதிக்கப்படுகின்றனர். எனினும் பிக்கு களால் கொண்டு வரப்பட்ட புத்தர் சிலையை எதிர்ப்பின் காரணமாக மலைக்கு கீழே வைத்த பிக்கு தலைமையிலான குழுவினர் அதற்கு பூஜை வழிபாடுகளை மேற் கொண்டனர்.

இரண்டு தரப்பும் வழிபடலாம் என்ற உத்தவை நீதிமன்றம் ஏற்கனவே விடுத்திருந்தது. அந்த வகையில் சைவ மக்கள் காலை 6.00 – மணியளவில் ஆலயத்திற்கு விஜயம் செய்து தமது வழிபாடுகளில் ஈடுபட்டனர். அத்துடன் கல்கமுவே சந்தபோதி தேரர் தலைமையிலான பௌத்த மக்களும் காலை 9.00 மணிக்கு பின்னர் வழிபாடுகளை மேற் கொள்வதற்காகச் அங்கு சென்றனர்.

பௌத்ததேரர் புத்தரின் சிலை ஒன்றை எடுத்து வந்ததுடன் அதனை மலையடிவாரத்தில் வைத்து விசேட பிரித் ஓதல் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார். பின்னர் அவை நிறைவடைந்ததும் புத்தர் சிலையை மீண்டும் எடுத்துச் சென்றார்.

# ரணிலின் பாதுகாப்பு அதிகாரி மீது தாக்குதல் நடத்திய ஒளிப்பதிவாளர் கைது!



கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பு அதிகாரியின் மீது கமராவைக் கொண்டு தாக்கிய ஒளிப்பதிவாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கத்தின் 166 இலட்சம் ரூபா நிதியைத் தவறாகப் பயன்படுத்தி பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொண்டமை தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு கடந்த 30 செப் 2026 புதன்கிழமை கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதியான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் அவரது மனைவி மைத்திரி விக்ரமசிங்க ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். நீதிமன்ற விசாரணைகள் நிறைவடைந்த பின்னர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீண்டும் நீதிமன்றத்தை விட்டு வெளியேறிய வேளையில் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகில் வைத்து இச்சம்பவம் பதிவாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பிரபுக்கள் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஏ. எச். மகேஷ் ரஞ்சன் என்பவரின் தலையில், ஊடக நிறுவனமொன்றின் ஒளிப்பதிவாளர் தனது கமராவைக் கொண்டு தாக்கியுள்ளார். இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் அருகிலிருந்த ஏனைய ஊடகவியலாளர்களின் கமராவிலும் பதிவாகியிருந்ததோடு, குறித்த காணொளியும் சமூக ஊடகங்களிலும் பரவலாகப் பகிரப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் சார்ஜன்ட் ஏ. எச். மகேஷ் ரஞ்சன், பொலிஸில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து நாரஹேன்பிட்டிய பகுதியில் உள்ள பொலிஸ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்திருந்த நிலையில், சம்பவத்தன்று பொலிஸாரால் விடுக்கப்பட்ட அழைப்பாணைக்கமைய 01 ஒக் 2026 வியாழக்கிழமை சட்டத்தரணி ஒருவருடன் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் முன்னிலையான குறித்த ஒளிப்பதிவாளரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பில் கொம்பனித்தெரு பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சீமேந்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 187 ஏக்கர் காணி இராணுவத்தினரால் விடுவிப்பு



இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 187.56 ஏக்கர் காணி உத்தியோகபூர்வமாக விடுவிப்பதற்கான ஆவணம் பலாலி பாதுகாப்புப் படைகளின் சிவில் விவகாரங்களுக்கான சிரேஷ்ட அதிகாரி கேணல் WMAM நிசங்கவினால், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் நேற்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் அமையவுள்ள முதலீட்டு வலயத்திற்கு அரச காணி 351.23 ஏக்கர் வழங்குவதற்கு ஜனாதிபதி அங்கீகாரத்துடன் ஒதுக்கப்பட்டு, அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு முதலீட்டு வலயத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 351.23 ஏக்கர் காணிப் பரப்பிற்குள், உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்ட 187.56 ஏக்கர் காணியும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை வலி.வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகளை விடுவிக்கிறோம் என கூறி தமிழ் மக்களை அனுர அரசாங்கம் ஏமாற்றி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# கோட்டை நீதிவான் பசன் அமரசேனவுக்கு கொலை அச்சுறுத்தல்!



கொழும்பு கோட்டை நீதிவான் பசன் அமரசேனவுக்கு மரண அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்ட இந்த விசாரணை தொடர்பில், குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை (29) கோட்டை நீதிவான் பசன் அமரசேனவிடம் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்துள்ளனர்.

நீதிவானுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு கிடைத்த கடிதம் தொடர்பில், நீதிவான் பசான் அமரசேன பொலிஸ் மா அதிபருக்கு வழங்கிய அறிவித்தலுக்கு அமையவே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இச்சம்பவம் குறித்து பொலிஸ் மா அதிபர், ஜனாதிபதியின் செயலாளருக்கும் அறிவித்துள்ளதாக நீதிமன்ற உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனக்கு கொலை அச்சுறுத்தல் உள்ளதாகக் கிடைத்த கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு நீதிவான் பசான் அமரசேன பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பிய கடிதம் யுடியுப் தளத்தில் வெளியாகியமை தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது தொடர்பிலும் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தகவலை வெளியிட்ட யுடியுப் தளம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் அதிகாரிகளிடமிருந்தும் வாக்கு மூலங்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இச்சம்பவத்தையடுத்து, கொழும்பு கோட்டை நீதிவான் பசன் அமரசேனவின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

# ஞானசார தேரருக்கு பிடியாணை!



இஸ்லாம் மார்க்கத்தை அவமதித்து கருத்து வெளியிட்டதாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதை அடுத்து, பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை உடனடியாகக் கைது செய்யக் கொழும்பு மேல் நீதிமன்றம் 30 செப் 2026 புதன்கிழமை பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பிரதிவாதியான ஞானசார தேரர் நீதிமன்றில் முன்னிலையாகி இருக்கவில்லை.

இஸ்லாமிய மார்க்கத்தையும் முஸ்லிம் சமூகத்தின் மத நம்பிக்கைகளையும் அவமதிக்கும் வகையில் வெளிப்படையாகக் கருத்துக்களைத் தெரிவித்தமை தொடர்பாகவே ஞானசார தேரருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாதமையினால், அவரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு பொலிஸாருக்கு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு முன்னர் வழங்கப்பட்ட ஜனாதிபதி பொதுமன்னிப்பு இரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை நடைமுறைப்படுத்துமாறு கோரி சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உத்தரவு ஒன்றைக் கோரியுள்ளார்.

குறிப்பிட்ட உத்தரவைப் பெறுவதற்காகத் சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனு, நீதிபதிகள் மாயாதுன்ன கொரியா மற்றும் லக்மாலி கருணாநாயக்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வின் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த விவகாரம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஞானசார தேரர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. அவருக்குப் பதிலாக முன்னலையான ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட, உடல்நலக்குறைவு காரணமாக தேரர் ஓய்வெடுத்து வருவதாக நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார். அத்துடன் சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள மனுவை ஆராய்ந்து கருத்துக்களை முன்வைப்பதற்கு மேலதிக கால அவகாசம் வழங்குமாறும் அவர் கோரினார்.

எனினும், சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி சஜித் பண்டார, இது ஒரு குற்றவியல் வழக்குக்கு தொடர்பான விவகாரம் என்பதைச் சுட்டிக்காட்டியதுடன், குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறினால் பிடியாணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் கோரினார்.

குறித்த மனுவை ஆராய்ந்து கருத்துக்களை முன்வைக்க அவகாசம் கோரி ஞானசார தேரரின் சட்டத்தரணி விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, நீதிமன்றம் விசாரணையைச் சிறிது நேரம் ஒத்திவைத்து மேற்படி பிடியாணையைப் பிறப்பித்துள்ளது.

இதேவேளை ஞானசார தேரருக்கு ஆதரவாக 50 இலட்சம் இல்லை 100 இலட்சம் கையெழுத்துகளைச் சேகரித்தாலும் எந்தப் பயனும் ஏற்படாது. அவர் சட்டரீதியாக சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும். இந்த நாட்டில் மீண்டும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரிக்கும் வகையிலான செயற்பாடுகளுக்கு இடமளிக்கக்கூடாது என ஞானசார தேரருக்கு சட்டரீதியாக பொது மன்னிப்பு கோரும் கையெழுத்து சேகரிப்பு வேலைத்திட்டத்துக்கு அநுராதபுரத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் இந்த நாட்டில் மக்களை இனவாதம் ரீதியாக எவ்வளவு தூரம் தூண்டி விட்டுள்ளார் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். மீண்டும் சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களைத் தூண்டிவிட வேண்டாம். இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட வேண்டாம்.பிக்குகள் என்ற வகையில் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

# புகலிடத்திலிருந்து அதிகார பீடம் வரை!



1991ஆம் ஆண்டு இலங்கையின் உள்நாட்டுப் போரினால் நிலைகுலைந்த குடும்பம் ஒன்றின் கைக் குழந்தையாகத் தாயகத்தை விட்டு வெளியேறி நோர்வேயில் தஞ்சமடைந்த கம்சாயினி (கம்சி) குணரத்தினம், இன்று அந்த நாட்டின் போக்குவரத்து அமைச்சராகப் பொறுப்பேற்றிருப்பது வெறும் தனிநபர் சாதனை மட்டுமல்ல, உலகெங்கும் பரந்து வாழும் புலம்பெயர் ஈழத் தமிழ்ச் சமூகத்தின் ஜனநாயக வலிமை பெறுதலின் மிக முக்கிய அடையாளமாகும்.

38 வயதேயான ஒரு யாழ்ப்பாணத்துப் பெண், நோர்வே நாட்டின் தொழிலாளர் கட்சியின் சார்பில் போட்டியிட்டு, ஒஸ்லோவின் பிரதிமேயராகப் பணியாற்றி, தற்போது நாட்டின் உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்துத் துறையைக் கண்காணிக்கும் உயரிய அமைச்சரவை அமைச்சுப் பொறுப்புக்கு உயர்ந்திருப்பது புலம் பெயர் சமூகங்களின் வளர்ச்சிப் பாதையில் ஒரு புதிய மைல்கல்.

இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்த தமிழர்கள் பிரிட்டன், கனடா, நோர்வே, பிரான்ஸ் போன்ற மேற்குலக நாடுகளில் வெறும் அகதிகளாகவோ அல்லது பொருளாதாரத் தேவைகளுக்கான உழைப்பாளர் களாகவோ மட்டும் தங்களைச் சுருக்கிக் கொள்ளவில்லை. மாறாக தங்களுக்கு அடைக்கலம் தந்த நாடுகளின் ஜனநாயகக் கட்டமைப்புகளுக்குள் தங்களை ஆழமாகப் பிணைத்துக் கொண்டு, அந்த நாடுகளின் முக்கிய அரசியல் தளங்களில் தவிர்க்க முடியாத சக்திகளாக உருவெடுத்து வருகின்றனர்.

கனடாவில் ஹரி ஆனந்தசங்கரி அமைச்சரானதும் பிரிட்டன் பாராளுமன்றத்தில் உமா குமரனின் பிரவேசமும், தற்போது நோர்வேயில் கம்சாயினியின் அமைச்சுப் பொறுப்பும் உணர்த்தும் செய்தி ஒன்றே. அதாவது, ஈழத் தமிழர்கள் தஞ்சம் புகுந்த மண்ணில் ஜனநாயகப் பங்கேற்பின் மூலம் தங்களது தகுதியையும் உழைப்பையும் நிரூபித்து வருகின்றனர்.

இந்த வளர்ச்சி இரண்டு முக்கிய அம்சங்களை நமக்கு உணர்த்துகிறது. ஒரு அகதிக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பெண்ணுக்கு, நாட்டின் உயரிய அரசியல் பதவிகளை அடைவதற்கான சமவாய்ப்பையும் ஜனநாயக சுதந்திரத்தையும் நோர்வே போன்ற மேலைநாடுகள் வழங்குகின்றன. இது அந்த நாடுகளின் ஜனநாயக வெளியின் விசாலத்துக்கு பிரகாசமான சான்றாகும்

புலம்பெயர் சமூகம் தாய்நிலத்தின் அரசியலுக்காகக் குரல் கொடுப்பதோடு நின்றுவிடாமல், தாங்கள் வாழும் நாட்டின் மக்களுக்கான சேவை மற்றும் தேசியக் கொள்கை முடிவுகளில் பங்குபெறும் முதிர்ச்சியை அடைந்துள்ளது.

கம்சாயினி குணரத்தினத்தின் இந்த வெற்றி, உலகெங்கிலும் வாழும் புலம்பெயர் தமிழ் இளைஞர்களுக்குப் புதிய நம்பிக்கையையும் ஊக்கத்தையும் அளிக்கிறது. தாய் நிலத்தில் மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகவும், புலம்பெயர்ந்த நாடுகளில் தமக்கான அங்கீகாரத்திற்காகவும் குரல் கொடுத்து வரும் ஈழத் தமிழ்ச் சமூகம், இனி வரும் காலங்களில் சர்வதேச அரசியல் அரங்கில் இன்னும் பல உயரிய மைல்கற்களை எட்டும் என்பதற்கு இந்த நியமனமே சான்று.

# உண்மைகள் உறங்கலாமோ?







முதல் முதலாக தியாக தீபம் திலீபன் அவர்களுக்கு சிலை வைச்சது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் CVK.சிவஞானம் அவர்கள்.

நீண்ட காலத்துக்கு பின்பு நீதிமன்றில் போராடி நினைவு நாளை அனுஷ்டிக்க அனுமதியை பெற்றது தமிழரசு கட்சி பொது செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் அவர்கள்.!

நீண்ட காலத்துக்கு பிறகு தியாகி திலீபன் நினைவிடத்தில் உள்ள சுற்று வட்டத்தை அமைக்க பாரளுமன்ற பன்முக நிதி ஒதுக்கியது அன்றைய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோரே. ஆனால் அவர்கள் துளியேனும் சொந்தம் கொண்டாடியதில்லை ஆனால் இந்த சைக்கோ சைக்கிள் ரீம் பண்ணுற கூத்து இருக்கே தாங்க முடியவில்லையடா சாமி!

தியாக தீபம் திலீபனுக்கு நாம் செய்யிற உண்மையான அஞ்சலி எண்டது, சும்மா பேஸ்புக்கில கண்ணீர் வடிக்கிறதும், போஸ்டர் ஒட்டுறதும் இல்லை. உந்தப் போலித் தேசியவாதிகளின்ர முகமூடிகளைக் கிழிச்செறிஞ்சுட்டு, எந்த இலட்சியத்துக்காக அந்தப் புனிதன் உருகி உருகி உயிரை விட்டானோ, அந்த வழியில நாமும் நேர்மையா இயங்குறது தான்! உண்மையை உறங்கவிடக் கூடாது!

# "கோட்டா கோகம" தாக்குதல்:- மஹிந்தாவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் இல்லை! - சட்டமாஅதிபர் தீர்மானம்



அரகலய' போராட்டத்தில் கடந்த 2022மே மாதம் இடம் பெற்ற 'கோட்டாகோகம' போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட பலத்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட மாட்டாது என சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார்.

இத்தாக்குதல் நடத்தப்பட்ட காலக் கட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ தனது சகோதரரான அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் பிரதமராகப் பதவியில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

போராட்டகாரர்களில் பலருக்கும் பலத்த காயங்களை ஏற்படுத்திய இத் தாக்குதலுக்காக முன்னாள் பிரதமரைச் குற்றச் சாட்டுவதற்குப் புலனாய்வார்களால் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்கள் போதாது என சட்டமா அதிபர் கருதியதாலேயே அவருக்கு எதிராக குற்றப்பத்தரிகையை தாக்கல் செய்யாதிருக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமருக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டுக்களும் பதிவு செய்யப்பட மாட்டாது என்ற போதிலும், சம்பவ இடத்திலிருந்த நேரடி சாட்சிகளின் வாக்குமூலங்கள், சூழ்நிலைச் சாட்சியங்கள் மற்றும் தாக்குதல் இடத்திலிருந்து பெறப்பட்ட காணொளிகளின் நிபுணத்துவப் பகுப்பாய்வு ஆகியவற்றின் அடிப்படையில், ஏனைய 34 சந்தேக நபர்களுக்கு எதிராகக் குற்றஞ்சாட்டுகளைச் சமர்ப்பிக்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனினும் குற்றம் சாட்டப்பட்டவர்களில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, அரசியல் செயற்பாட்டாளர் டான் பிரியசாத் மற்றும் முன்னாள் தொழிற்சங்கத் தலைவர் வசந்த ஹடபாங்கொட ஆகிய மூவர் இதற்கிடையில் மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்த மூவரை தவிர்த்து எஞ்சியுள்ள 31 சந்தேக நபர்களுக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஒரேயொரு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது. சட்ட விரோதக் கூட்டத்தில் உறுப்பினர்களாக இருந்தமை, கொலை முயற்சி மற்றும் பலத்த காயங்களை ஏற்படுத்தியமை உள்ளிட்ட 327 குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது சுமத்தப்படவுள்ளன.

இவ்வழக்கை விசாரிப்பதற்காக மேல் நீதிமன்ற மூவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் ஒன்றை நியமிக்குமாறு தலைமை நீதிபதி பிரீத்தி பத்ம சுரசேனவிடம், சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

## நாமலுக்கு பிணை வழங்க நீதிமன்றம் உத்தரவு!

சர்ச்சைக்குரிய கிரிஷ் கொடுக்கல் வாங்கல் வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிரிஷ் கொடுக்கல் வாங்கல் மற்றும் எயார்பஸ் விவகாரம் தொடர்பான வழக்குகளுக்காக நாமல் ராஜபக்ஷ 29 செப் 2026 காலை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

அதன்படி முன்னதாக எயார்பஸ் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழக்கில் அவரை எதிர்வரும் ஒக்டோபர் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனைத் தொடர்ந்து லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 'கிரிஷ்' வழக்கில் நான்காவது சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ள நாமல் ராஜபக்ஷவை எதிர்வரும் ஒக்டோபர் 6 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால் 30 செப் 2026 மீண்டும் நீதிமன்றம் அழைக்கப்பட்ட நாமல் எயார்பஸ் கொடுக்கல் வாங்கல் தொடர்பான நிதி மோசடி குற்றச்சாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரான நாமல் ராஜபக்ஷவை 5 இலட்சம் ரூபா காசுப் பிணையிலும் தலா 30 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்க நீதவான் பசன் அமரசேன உத்தரவிட்டார். அத்துடன், அவரது வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# 22வது அரசியல் சட்டத் திருத்தம்:- சிதறாத அநுர அணியின் 158! வீதியில் தனித்து விடப்பட்ட சஜித்!

எதிர்க்கட்சிகள், வழக்கறிஞர் அமைப்புகள் உட்பட பல பொது அமைப்புகளுமாக சுமார் 60க்கும் மேலான எதிர்ப்பு மனுக்களை உட்படுத்திய 22வது அரசியல் திருத்தம் நாடாளுமன்றத்தில் சிறப்பு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொடர்ந்து சேவையில் வைத்திருந்து தேர்தல்களற்ற ஒற்றையாட்சி முறையை தொடர்வதற்காகவே இத்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டதென்பது எதிர்த்தரப்பினரின் பதில் வாதம். இதில் எது நடைமுறைப்படுத்தப்படும் என்பதை தெரிந்து

**நெவில் சமரக்கூனை பின்கதவால் பிரதம நீதியரசராக நியமித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், சுஷிரானி பண்டாரநாயக்கவை தமது தேவை கலந்த விருப்புக்காக பிரதம நீதியரசராக நியமித்த மகிந்த ராஜபக்சவும் அவர்களை பதவி நீக்கம் செய்யும் ,ம்பீச்மென்ற் பிரேரணையை தாங்களே முன்னெடுத்தது அண்மைக் கால வரலாறு. ஒழுங்கீன நீதிச்சேவையை நிகழ்த்திய அந்த அரசியல் வம்சத்தில் வந்தவர்கள், நீதியரசர்களின் வயதெல்லையை அதிகரிக்கும் சட்டத் திருத்தத்தை எதிர்த்துக் கோசுஷமிட்டது அவர்களது முன்னோர்களின் வரலாற்றை மறைக்க முனைந்த ஒரு கூத்து.**

அநுர குமர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் 158 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒட்டு மொத்தமாக இதனை ஆதரித்து வாக்களித்தனர். ஆளும் தரப்புக்குள் பிளவு இருப்பதாகவும், இவர்களுள் சிலர் நாமல் ராஜபக்ச

கொள்ள சில வருடங்கள் காத்திருக்க வேண்டும். நீதிமன்றம் தீர்ப்பளித்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமென அநுர தரப்பு மீண்டும் மீண்டும் கூறி வந்தது. அவ்வாறான தீர்ப்பு தங்களுக்கு வழங்கப்படுமென்ற

உயர்பீடத்தைக் கேட்டபோதும் அது கிடைக்கவில்லை. ஜனாதிபதி பிரேமதாச நீதிமன்ற வழக்கொன்றில் தமக்கு சாதகமாக நடந்து கொள்ளுமாறு அந்த மாவட்ட நீதிபதியிடம் கேட்டபோதுஅது மறுக்கப்பட்டதன் எதிரொலியே அவரது இல்லம் தாக்கப் பட்டதற்கான காரணமென நாடாளுமன்றத்தில் பலர் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இலங்கையின் 43வது பிரதம நீதியரசராக 2011 மே மாதம் பதவியேற்றவர் சுஷிரானி பண்டாரநாயக்க (இவர் சிறிமாவோ பண்டாரநாயக்க குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்ல). இவரை இப்பதவிக்கு பலரது எதிர்ப்புகளுக்கு மத்தியில் தமது சொந்த விருப்பத்துக நியமித்தவர் அப்போதைய ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச. 2012ம் ஆண்டில் டிவி நெகும என்ற காணிச் சட்டத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்ற மகிந்த விரும்பினார். அதற்கு ஒன்பது மாகாண சபைகளும் சம்மதமளிக்க வேண்டும். அப்போது வட மாகாண சபை இயங்கவில்லை. அதன் ஆளுனராகவிருந்த முன்னாள் இராணுவத்தளபதி சந்திரசிறி ஒப்பமிட்டது சட்டத்துக்கு முரணானது என தமிழரசுக் கட்சி எம்.பி. மாவை சேனாதிராஜா தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

பிரதம நீதியரசர் சுஷிரானி பண்டார

பிரதம நீதியரசராக பதவி வகித்த சரத் என்.சில்வாவின் தனிப்பட்ட வாழ்க்கை, சில வழக்குகளில் அரசியல் சாயம் கலந்து அவர் வழங்கிய தீர்ப்புகள். முன்னுக்குப் பின் முரணாக தொழில் முறைமையில் அவர் கடைப் பிடித்த நடைமுறை என்பவை அவ்வேளையில் ஊடகங்களிலும் நாடாளுமன்றத்திலும் பொதுவெளிகளிலும் தாராளமாக விமர்சிக்கப்பட்டது.

கடந்த சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளாக இலங்கையின் நீதித்துறையும், நீதிபரிபாலன சேவையும், அரசியலும் எவ்வாறு ,ரண்டறக் கலந்து ஒழுங்கீன

**கட்டுரையாளர்:-**
**பனங்காட்டான்**

மாக, சட்டத்துக்குப் புறம்பாக இயங்கின என்பதற்கான ஒரு குறுக்கு வெட்டுப் பார்வையை மேலே சுட்டிக் காட்டப்பட்ட சம்பவங்கள் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. அரசியல் யாப்பில் எந்த மாற்றங்களையோ திருத்தங்களையோ மேற்கொள்ளாது ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் தங்கள் அரசியல் செல்நெறியில் எவ்வாறு செயற் பட்டனர் என்பதை ,தனூடாக அறிந்து கொள்ளலாம்.

இப்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள 22வது அரசியல் திருத்தம் இவ்வாறான செயற்பாடுகளுக்கானதல்ல. நீதியரசர்களின் வயதெல்லையை கூட்டுவதோடு வேறு சில அம்சங்களையும் உள்ளடக்கியது. இதனை ஜனாதிபதி அநுர குமரவும் நீதியமைச்சர் ஹர்ச நாணயக்காரவும் மற்றும் பல அமைச்சர்களும் பல தடவை தெரிவித்துள்ளனர் (இவ்வாறு உறுதிபடக் கூறியதால் அவ்வாறு தான் சகலதும் இடம் பெறுமென்று அரசியலில் எவராலும் உறுதிகூற முடியாது). முறைப்படி அரசியல் சட்டத்திருத்தத்தை தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து எதிர்மனுக்களை நீதிமன்றத்தில் எதிர் கொண்டு, உயர்நீதிமன்ற நீதியரசர்களின் தீர்ப்புக்கு ,ணங்க, சிறப்புப் பெரும்பான்மையுடன் இச்சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வெளிப்பார்வைக்கு ஜனநாயக

வுடன் இணைந்து கூட்டாக படம் எடுத்ததாகவும் பரபரப்பான செய்திகள் வெளிவந்து மக்கள் மத்தியில் ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியதாயினும் வாக்கெடுப்பில் எல்லாமே பிசுபிசுத்துப் போனது.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக கடந்த தேர்தலில் 159 பேர் தெரிவாகினர். இவர்களுள் சபாநாயகரை தவிர்த்துப் பார்க்கில் மிகுதி 158. இந்த 158 எண்ணிக்கை 24ம் திகதி அரசியல் திருத்தச்சட்ட வாக்களிப்பின 'போது நிரூபிக்கப்படுமென்று பிரதமர் ஹரிணி அமரசூரிய சவால் பாணியில் கூறியது அவ்வாறே நிறைவேறியுள்ளது.

இதனை எதிர்த்தவர்கள் 63 பேர். இவர்களில் 40 பேர் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள். மிகுதி 23க்குள் தமிழரசுக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சியை உட்படுத்திய ஜனநாயக முன்னணி என்பவை அடக்கம்.

இத்திருத்தச் சட்டத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவையில்லையென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததால் தமக்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் இதனை நிறைவேற்றுவது ஆட்சித் தரப்புக்கு சுலபமாகி விட்டது. உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதெல்லையை நீடிப்பதற்கு இச்சட்டத் திருத்தம் இடமளிக்கிறது. பிரதம நீதியரசராக பதவி வகிப்பவர் 67 வயதை பூர்த்தி செய்யும் போது அல்லது ஆறு வருட சேவையை நிறைவு செய்யும்போது - இதில் எது முதலாவதாக வருகிறதோ அப்போது அவர் ஓய்வு பெறவேண்டும்.

பல வருடங்களாக தேக்கநிலையிலுள்ள வழக்குகளை விரைவாக விசாரித்து முடிக்கவும், அனுபவமுள்ள நீதிபதிகளின் சேவையை பெறவுமே இச் சட்டத் திருத்தம் அவசியமானது என்பது ஆட்சித்தரப்பினரின் வாதம். தங்களுக்குத் தேவையான நீதிபதிகளை

நம்பிக்கை இவர்களுக்கு இருக்கின்றதென்று இந்த மாதம் 6ம் திகதி இந்தப் பத்தியில் நான் கூறியிருந்தேன். அதனை உயர் நீதிமன்ற தீர்ப்பு உண்மையாக்கியுள்ளது. இதனால் எந்தப் பிரச்சனையுமின்றி திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவது ஆட்சியினருக்கு இலகுவாயிற்று.

இதனை எழுதும் போது கடந்த நாற்பது ஆண்டுகளுக்குள் ஆட்சியிலிருந்தவர்கள் நீதிபரிபாலன சபையையும், பிரதம நீதியரசர்களையும் எவ்வாறு தம்மிஷ்டப்படி ஆட்டிப் படைத்தார்கள் என்பதை ஒரு தடவை மீள்நினைவுக்கு உட்படுத்த வேண்டும்.

1977 தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன

1978ம் ஆண்டு ஜனாதிபதியாக தம்மைத்தாமே நியமித்துக் கொண்டார். தமது தனிப்பட்ட சட்டத்தரணியான நெவில் சமரக்கூனை பிரதம நீதியரசராக நியமித்து அவரது முன்னிலையில் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்தார். நெவில் சமரக்கூன் ஒருபோதும் மாநகர நீதிபதியாகக் கூட பதவி வகிக்காதவர். 1984ம் ஆண்டு மார்ச் மாதம் கொழும்பில் ராஜா சின்னத்துரை என்ற பெயர் கொண்ட தனியார் கல்விக்கூடம் ஒன்றின் நிகழ்வில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் நடவடிக்கைகளை இவர் விமர்சனம் செய்தது பாரதூரமான விடயமாக மாறியது. இதனால் அவரை பதவி நீக்கும் (இம்பீச்மென்ற்) பிரேரணையை ஜெயவர்த்தன முன்னெடுத்தார். நெவில் சமரக்கூன் தமது பிரதம நீதியரசர் பதவியை திடுதிப்பென ராஜினாமா செய்து விட்டு ஆஸ்திரேலியாவுக்கு ஓடி விட்டார்.

மூன்றாண்டுகள் மட்டுமே ஜனாதிபதியாகவிருந்த ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் கொழும்பில் மாவட்ட நீதிபதி ஒருவரின் இல்லம் இனம் தெரியாதவர்களால் தாக்குதலுக்குள்ளானது. அந்த நீதிபதி தமக்கு பாதுகாப்பு கேட்டு காவற்துறை

நாயக்க தலைமையிலான நீதியரசர்கள் குழாம் இந்த மனுவுக்கு சாதகமாக தீர்ப்பளித்ததால் மகிந்த ராஜபக்சவின் விருப்பம் நிறைவேறவில்லை. இதன் எதிர்விளைவாக சுஷிரானி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவி நீக்கும் இம்பீச்மென்ற் பிரேரணை கொண்டு வரப்பட்டு 2013 ஜனவரியில் அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.




அவ்வேளை சட்டமா அதிபராகவிருந்த மொஹான் பீரிசை பிரதம நீதியரசராக்கி தமது விருப்புகளை எந்தப் பிரச்சனையுமின்றி மகிந்த நிறைவேற்றிக் கொண்டார். அடுத்து ஜனாதிபதியாக வந்த மைத்திரிபால சிறிசேன 2015 ஜனவரியில் தமக்கான அதிகாரங்களைப் பயன்படுத்தி சுஷிரானி பண்டாரநாயக்கவை மீண்டும் பிரதம நீதியரசராக நியமித்தார். ஒரு நாள் மட்டும் அப்பதவியை வகித்த அவர் மறுநாள் ஓய்வு பெற்று சென்று விட்டார்.

இப்பதவியை மீண்டும் தமக்குத் தந்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு தாம் பணியாற்ற தயார் என்று மொஹான் பீரிஸ் தெரிவித்திருந்தாராயினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரை மகிந்தவின் ஆளாகக் கருதி அப்பதவிக்கு நியமிக்கவில்லை. இதற்கு இடைப்பட்ட காலத்தில்

விழுமியம் நேர்த்தியாகக் கடைப்பிடிக்கப்பட்டதாக இதனைச் சொல்லலாம்.

ஆனால் கடந்த நாலரை தசாப்தத்தில் நீதித்துறையையும், நீதிபரிபாலனத்தையும், பிரதம நீதியரசர் நியமனத்தையும் தங்களின் சுயவிருப்பத்துக்கு இணங்க நடைமுறைப்படுத்திய, ஒழுங்கற்ற அரசியல் வம்சத்தில் வந்தவர்கள், 22வது அரசியல் திருத்தத்தை எதிர்த்தது வேடிக்கையானது. இது பொது மக்களின் ஞாபகசக்தியை சோதிப்பதாகவும் அமைந்திருந்தது.

இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து ரணில் விக்கிரமசிங்க உட்பட அனைத்து எதிர்க்கட்சிகளையும் இணைத்து பேரணி நடத்தப் போவதாக அறிவித்திருந்தார் சஜித் பிரேமதா. ஆனால் அவர் எதிர்பார்த்த எவரும் அதில் பங்கு பற்றாது அவர் தனித்து வீதியில் விடப்பட்டது, அவரது அரசியல் வங்குரோத்துக்கு அவரே வழி வகுத்தது போல் காட்சி கொடுத்துள்ளது.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

26 செப்டம்பர் 2026 முதல் 02 ஒக்டோபர் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## நினைவழியா நினைவுகள்



### திருமதி சத்தியபாமா கௌரி குகன்

ஹட்டன் நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர் களது நினைவழியாத நினைவு நாள் 28 செப்டம்பர் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைஞ்சலி



### திருமதி பாக்கியம் தனிநாயகம்

அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் தனிநாயகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 03 ஒக்டோபர் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, செஞ்சோலை பாரதி ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பாக்கியம் தனிநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு, செஞ்சோலை, பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



### திரு பாலசுப்பிரமணியம் ஐயாத்துரை

வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் முல்கைம் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்டிருந்த பாலா என்று அன்பாக அழைக்கப்படும் திருபாலசுப்பிரமணியம் ஐயாத்துரை அவர்களது ஆத்மசாந்திக்காக 28 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை அன்னாரது குடும்பத்தினர் சார்பாக கனடாவில் வசிக்கும் அவரது சஆகோதரி ராணி அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார் திரு பாலசுப்பிரமணியம் ஐயாத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2026 விநாயகர் சதுர்த்தி தினமான திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.



# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



14 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை ஆவணி சதுர்த்தி தினத்தன்று வேலணை கிழக்கைச் சேர்ந்த செல்வன் இன்பநாயகம் ஜெயந்தன் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது பெற்றோர்களும் சகோதரங்களும் இணைந்து அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



17 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



26 செப்டம்பர் 2026 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி டிலக்சினி நிரஞ்சன் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி டிலக்சினி நிரஞ்சன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



27 செப்டம்பர் 2026 ஞாயிற்றுக்கிழமை சாமியான் அரசடி கரவெட்டியைச் சேர்ந்தவர்களான திரு திருமதி இராஜதுரை மாணிக்கம் இணையரது நினைவாக கனடாவில் வாழும் அவர்களது பிள்ளைகள் மஹாலய விரத உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



28 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் முல்கைம் ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த பாலா என்று அன்பாக அழைக்கப்படும் திரு பாலசுப்பிரமணியம் ஐயாத்துரை அவர்களது ஆத்ம சாந்திக்காக கனடாவில் வசிக்கும் அன்னாரது சகோதரி திருமதி ராணி ஜெகதீஸ்வரன் அவர்கள் அன்னாரது குடும்பத்தினர் சார்பாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



28 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை ஹட்டன் நவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களது நினைவழியாத நினைவு நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



# திலீபன் இனியும் எத்தனை ஆண்டுகளுக்கு பசியோடு இருக்க வேண்டும்?

26 செப்டம்பர் 2026 தீபன் உயிர்நீத்து 39 ஆண்டுகள் ஆகி விட்டன. அன்றைய நிகழ்வுகளும் உட்பட கடந்த 39 ஆண்டுகால அவருடைய நினைவு மேடைகளில் பெரும்பாலும் ஒரு வசனம் திரும்பத் திரும்ப கூறப் படுவதுண்டு. திலீபன் இப்பொழுதும் பசியுடன் இருக்கிறான்தாகத்துடன் இருக்கிறான் என்பதே அந்த வசனம் ஆகும்.இது திலீபனின் நினைவுகளை உணர்ச்சிகரமாக மகிமைப்படுத்தும் ஒரு வசனம்.

ஏன் தமிழ் மக்கள் அதை திரும்பத் திரும்ப கூறுகிறார்கள்? ஏனென்றால் திலீபன் எந்த விடுதலைக்காகப் போராடினாரோ, அந்த விடுதலை இன்றுவரை தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்ற பொருளில்தான் அவ்வாறு கூறப்படுகிறது.

அது உண்மை. கடந்த 39 ஆண்டு கால யதார்த்தம். இடையில் ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் 24 ஆண்டுகளுக்கு ஒரு கருநிலை நிலவியது. அதுவும் இப்பொழுது இல்லை. எனவே திலீபன் இப்பொழுதும் பசியுடன் இருக்கிறார் என்பது தான் கள யதார்த்தம்.



வெடுக்குநாறி மலையிலும் குருந்தூர் மலையிலும் திலீபன் இப்பொழுதும் பசியுடன் இருக்கிறான். தையிட்டி விகாரையில் திலீபன் இப்பொழுதும் பசியுடன் இருக்கிறான். மயிலிட்டியில் பலாலியில் காணிக்காகப் போராடும் மக்கள் மத்தியில் திலீபன் இப்பொழுதும் பசியுடன் இருக்கிறான். கிழக்கில், மயிலத்த மடுமாதவணையில் போராடிக் கொண்டிருக்கும் பண்ணையாளர் மத்தியில் திலீபன் இப்பொழுதும் பசியோடு இருக்கிறான். அங்கே மேய்ச்சல் தரையில்லாமல் பசியோடு மெலிந்திருக்கும் பசுக்கள் மத்தியில் திலீபன் இப்பொழுதும் பசியோடு இருக்கிறான்.

17ஆண்டுகள் ஆன பின்னரும் விடுவிக்கப்படாத அரசியல் கைதிகளின் மத்தியில் திலீபன் இப்பொழுதும் பசியோடு இருக்கிறான். பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் புதுப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருக்கும் ஓர் அரசியல் களத்தில் திலீபன் இப்பொழுதும் பசியோடு இருக்கிறான். ஆம் திலீபன் இப்பொழுதும் பசியோடும் தாகத்தோடும் தான் இருக்கிறான்.

அது மட்டுமல்ல தமிழ் கிராமங்களில் அனேகமானவை ஆளில்லா வீடுகளைக் கொண்ட கிராமங்களாக மாறியுள்ளன. மேலும் இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் நாட்டில் இப்போதுள்ள அரசியல்வாதிகளை அல்லது தொழில் முனைவோரையோ அல்லது அறிஞர்களையோ, அல்லது சான்றோரையோ, அல்லது பிரபல்யமானவர்களையோ முன்னுதாரணமாகப் பார்க்கவில்லை. மாறாக புலப்பெயர்ச்சியைத் தான் அவர்கள் முன்னுதாரணமாகப் பார்க்கின்றார்கள்.

இந்த அடிப்படையில் கூறின் ஆளில்லாத பாழடைந்த வீடுகள் எல்லா வற்றிலுமே திலீபன் இப்பொழுதும் பசியோடுதான் இருக்கிறான். நாட்டை விட்டு எப்பொழுது வெளியேறலாம் என்று தவிக்கும் இளைய தலைமுறையினர் மத்தியில் திலீபன் இப்பொழுதும் பசியோடுதான் இருக்கிறான்.

இவ்வாறு திலீபன் அல்லது பார்த்திபன் இப்பொழுதும் பசியோடு தான் இருக்கிறான் தாகத்தோடு தான் இருக்கிறான் என்று தான் என்று கடந்த 39 ஆண்டுகளாக தமிழ்மக்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். திலீபன் பிரதிநிதித்துவப் படுத்திய ஆயுதப் போராட்டத்தின் விளைவாகக் கட்டி எழுப்பப்பட்ட கருநிலை அரசு தோற்கடிக்கப்பட்ட பின்னரான கடந்த 17 ஆண்டுகளாகவும் தமிழ்மக்கள் அதைத் தான் திரும்பத்திரும்பக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

இனியும் எத்தனை ஆண்டுகள் தமிழ் மக்கள் அவ்வாறு கூறப்போகிறார்கள் ? திலீபன் பசி எப்போது தீரும்? திலீபனின் தாகம் எப்பொழுது அடங்கும்? திலீபனின் பசியையும் தாகத்தையும் தீர்க்கவல்ல ஒரு தீர்வை தமிழ் மக்கள் எப்பொழுது வென்றெடுக்கப் போகிறார்கள்? அல்லது அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் கேட்டால்.அந்த தீர்வுக்காக தமிழ் மக்கள் எப்பொழுது போராடப் போகிறார்கள்?

திலீபனை அன்னை பூபதியை நினைவு கூர்வது என்பது அவர்களின் தியாகத்தை நினைவு கூர்வது மட்டுமல்ல, அந்த தியாகத்திற்குப் பின்னால் இருந்த அரசியலை நினைவு கூர்வது மட்டுமல்ல, அப்படிப்பட்ட தியாகங்களைச் செய்வதற்கு கடந்த 17 ஆண்டுகளாக யாரும் தயாரில்லை என்பதையும் நினைவு கூர்வது தான். திலீபனுக்கு முன்னரான மிதவாத அரசியலிலும் அவ்வாறு உயிரைத் தியாகம் செய்யும் உண்ணாவிரதிகள் இருக்கவில்லை. திலீபனுக்குப் பின்னர் அன்னை பூபதி தன் உயிரைத் தியாகம் செய்தார். அதன் பின், அதாவது ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னரான கடந்த 17 ஆண்டுகளிலும்கூட அவ்வாறு தமது உயிரைத் தியாகம் செய்வதற்கு எந்த ஒரு அகிம்சைப் போராளியும் தயாராக இல்லை.

இதை இப்படி எழுதுவதன் நோக்கம், இந்தக் கட்டுரையானது தமிழ் மக்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்றோ அல்லது தீக்குளிக்க வேண்டும் என்றோ கேட்கின்றது என்பதல்ல. அகிம்சைப் போராட்டம் என்பது தன்னைத் தானே வருத்துவது தான். வன்முறைப் போராட்டமானது எதிரியை வருத்தும். ஆனால் அறவழிப் போராட்டமானது தன்னைத் தானே வருத்தும். அறவழிப் போராளி தன்னைத் தானே வருத்துவதன் மூலம் தான்சார்ந்த மக்கள் மத்தியில் கொதிப்பை, நொதிப்பை, கொந்தளிப்பை ஏற்படுத்துவார்.

அதாவது தங்களுக்காக ஒரு போராளி தீக்குளிக்கும் போது அல்லது தங்களுக்காக ஒரு போராளி அணுவணுவாகச் சாகும் போது, அது அவர் எந்த மக்களைப் பிரதிபலிக்கிறாரோ, அந்த மக்கள் மத்தியில் நொதிப்பை, கொந்தளிப்பை,கொதிப்பை ஏற்படுத்தும். அதன் இறுதி விளைவாக கொதித்தெழும் மக்கள் அந்தப் போராட்டத்தை முன்னுக்கு நகர்த்துவார்கள். இதுதான் அகிம்சையின் அரசியல்.

அகிம்சையோ ஹிம்சையோ எந்தப் போராட்டமானாலும் அதில் போராளி தன்னைத் அர்ப்பணிக்க தன்னை முழுமையாக இழக்கத் தயாராக இருந்தால் தான் மக்களின் நன்மதிப்பை அபிமானத்தை வென்றெடுக்கலாம். அறவழிப் போராளி தன்னை இழக்கத் தயாராகப் போராடும்போது அது அவர் எந்த மக்களின் விடுதலைக்காக தன்னை தியாகம் செய்ய முன்வருகிறாரோ, அந்த மக்கள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தும்.அதாவது மக்களைத் திரட்டும். மக்களை எழுச்சி அடையச் செய்யும்.

திலீபனின் இறுதி நாட்களில் அந்த எழுச்சி ஏற்பட்டது. ஒரு பச்சை இலை சிறிது சிறிதாக உலர்ந்து காய்ந்து சருகாவது போல 12 நாட்களாக உயிர் உலர்ந்து இறந்த பொழுது அவரைச் சூழ்ந்திருந்த மக்கள் மத்தியில் கொதிப்பும் கொந்தளிப்பும் ஏற்பட்டது. திலீபனின் இறுதி உரைகளிலும் அதைக் காண முடிகிறது. மக்கள் எழுச்சியைத் தான் அவர் விரும்பினார். மக்கள் எழுச்சி தான் விடுதலைக்கு வழி வகுக்கும் என்றும் அவர் நம்பினார். எனவே அகிம்சையின் இறுதி விளைவு மக்கள் எழுச்சி தான் மக்கள் திரட்சிதான்.

திலீபனின் உண்ணாவிரதம் தமிழ் மக்களை கொதிக்க வைத்தது, கொந்தளிக்க வைத்தது. இந்திய-இலங்கை உடன்படிக்கை, இந்திய அமைதி காக்கும் படையின் பிரசன்னம் போன்றவற்றுக்கு எதிராக தமிழ் மக்களின் கூட்டு உளவியலைத் திருப்பியது. இந்திய அமைதி காக்கும் படையினரை கும்பம் வைத்து, கற்பூரம் கொளுத்தி, ஆரத்தி எடுத்து வரவேற்ற மக்களின் கூட்டு உளவியலை மாற்றியதில் திலீபனின் 12 நாட்களுக்கும் பெரிய பங்கு உண்டு.அதன் அடுத்த கட்டமாக ஒரு போர் அரங்கு திறக்கப்பட்டது.

அறவழிப் போராட்டங்களில் இறுதி விளைவு மக்களை நொதிக்கச் செய்வது தான் மக்களைத் திரட்டுவது தான். அதை திலீபன் தனது கடைசி உரைகளில் சுட்டிப்பாகக் குறிப்பிட்டிருந்தார். எனவே திலீபனின் பசியைப் போக்கவும், தாகத்தைத் தீர்க்கவும் ஒரே வழி திலீபனின் இறுதி உரைகளில் கூறப்படுவது போல தமிழ் மக்களை எழுச்சி கொள்ள வைப்பது தான். தமிழ் மக்களை ஆகப்பெரிய திரட்சியாக மாற்றுவதுதான்.

கடந்த 17 ஆண்டுகளாக தமிழ்த் தேசிய சக்திகள் அதனைப் பொருத்தமான விதத்தில் செய்யத் தவறி விட்டன. ஆங்காங்கே தொடர்ச்சியற்ற சிறிய மற்றும் பெரிய மக்கள் திரட்சிகள், எழுச்சிகள் ஏற்பட்டிருந்தாலும் கூட, அவை தொடர்ச்சியானவை அல்ல. கொழும்புக்கு அல்லது ஏனைய தரப்புகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்துபவை அல்ல.

எனவே திலீபனின் நினைவுகளை மகிமைப்படுத்துவது என்பது மக்களைத் திரட்டியுறச் செய்வது மக்களை எழுச்சி கொள்ள வைப்பது. ஆனால் அதைச் செய்ய ஏன் தமிழ்த் தேசிய சக்திகளால் முடியவில்லை? ஏனென்றால் உள்ளதில் பெரிய கட்சி தன்னைத் தானே திரட்ட முடியாமல் நீதிமன்றத்தில் நிற்கின்றது. ஏனைய கட்சிகள் பெரிய கட்சியின் இடத்தை நிரப்பும் அளவுக்கு வளர முடியாதவைகளாகக் காணப்படுகின்றன.

அதாவது தமிழ்த் தேசிய கட்சிகளாலும் செயற்பாட்டாளர்களாலும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட முடியவில்லை. ஆக மொத்தம் கடந்த 17 ஆண்டுகால தமிழ்த்தேசிய அரசியல் எனப்படுவது திருப்பகரமான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய மக்கள் எழுச்சிக்களையோ மக்கள் போராட்டங்களையோ உற்பத்தி செய்ய முடியாத ஒன்றாகக் காணப்படுகிறது.

இது என்னுடைய கூற்று அல்ல. கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு முன் சிங்கள அரசியல் செயற்பாட்டாளர் ஆகிய ஒரு கத்தோலிக்க மதகுரு கூறியது. அவர் அப்பொழுது சொன்னார், 12 ஆண்டுகளாக தமிழ் மக்கள் திருப்பகரமான மாற்றத்தை ஏற்படுத்த முடியாதவர்களாக காணப்படுகிறார்கள் என்று. அதற்கு பின்னரான கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நிலைமை அப்படித் தான் இருந்தது. இப்பொழுதும் நிலைமை அதுதான். பார்த்திபன் இப்பொழுதும் பசியோடு தான் இருக்கிறான். தாகத்தோடு இருக்கிறான் என்று தமிழ்மக்கள் இன்னும் எவ்வளவு காலத்துக்குச் சொல்லிக் கொண்டிருக்கப் போகிறார்கள்?



# அரசியலில் இருக்கும் இடம் அறிந்தால் தானே போகுமிடம் அறிய முடியும்



கடந்த காலத்தை அதிகம் பேசியாகி விட்டது. அடுத்தது என்ன என்று சொல்லுங்கள். இப்படி கேட்பவர்கள் பலர். அவர்கள் கேட்பதில் தவறில்லை தான். அடுத்தது என்ன என்று சொல்வதற்குத் தானே புத்திஜீவிகள் தேவை. அரைத்த மாவை அரைப்பதற்கு எதற்கு ஆய்வாளர்களும் சிந்தனையாளர்களும்? ஆனால் பிரச்சினையோ - அடுத்தது என்ன என்று கேட்டால் பதிலளிக்க வல்லவர்கள் யார்?

அடுத்தது என்ன என்னும் கேள்விக்கு பதிலை காண வேண்டும் என்றால், முதலில் நாங்கள் எங்கிருக்கின்றோம் என்பதை கண்டு கொள்ள வேண்டும் அல்லவா! இருக்கும் இடம் அறிந்தால் தானே போகுமிடம் தொடர்பில் யோசிக்க முடியும். அடுத்த கட்டத்திற்கு செல்வது எவ்வாறு என்னும் கேள்விக்கு பலரும் பதிலளிக்க முற்படுகின்றனர். கடந்த காலத்தை காய்த்தல் உவத்தலின்றி நோக்க வேண்டும் - அப்போது தான் நமது தவறுகளை அறிந்து கொள்ள முடியும். இப்படிக் கூறுவோர் உண்டு.

தமிழ் சமூகத்திற்குள்ளேயே ஏராளம் பிரச்சினைகள் உண்டு. முதலில் அதனை ஈவிரக்கமின்றி பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் கூறுவோர் உண்டு. போஸ் மோட்டம் என்னும் சொல்லுடன் சிலர் ஆரம்பத்திலேயே தங்களது வித்துவத்தை காண்பித்திருந்தனர். ஆனால் ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும். போஸ்மோட்டம் என்பது மரணத்திற்கான காரணங்களை கண்டறிவது ஆனால் மரணத்திற்கான காரணங்களை கண்டாலும் கூட, ஒருவர் இறந்துவிட்டார் என்பதுதான் உண்மை. எனவே ஒரு சமூகத்தின் வீழ்ச்சியை, பிரேத பரிசோதனை செய்வதால் மட்டும், அந்தச் சமூகம் வீழ்ச்சியிலிருந்து எழுந்துவிடப் போவதில்லை. ஏனெனில், அந்த சமூகம், அழித்தவைகள் அனைத்துமே, அழிந்தவைகள்தான். இழந்தவைகள் இழந்தவைகள் தான். போன வாய்ப்புக்கள் போனவைகள் தான்.

எனவே பிரச்சினை சமூகத்தை போஸ் மோட்டம் செய்வதல்ல மாறாக புதிதாக சிந்திப்பது. புதிதாக சிந்திப்பதற்குத்தான் கடந்தகால படிப்பினைகள் தேவைப்படுகின்றன. தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரையில், போகிற போக்கில் கூறப்படும் அறிவுரைகள்தான் அதிகம். உதாரணமாக வரலாறு வழிகாட்டும் என்போர் உண்டு? உண்மையிலேயே வரலாறு வழிகாட்டுமா? அப்படியானால் இவ்வளவு காலமும் அந்த வரலாறு ஏன் உங்களுக்கு வழிகாட்டவில்லை? ஏன் தொடர்ந்தும் அரசியலில் தோற்றுக் கொண்டே இருக்கின்றீர்கள்?

ஆனால் உண்மை என்ன? வரலாறு என்பது ஒரு சடம். வரலாறு எவருக்கும் வழி காட்டுவதில்லை. ஆனால் மனிதன் விரும்பினால் தான் வரலாற்றிலிருந்து அவன் பாடங்களை படிக்க முடியும். உதாரணமாக, உங்களிடம் ஒரு வரலாற்று நூல் இருக்கின்றது — ஆனால், அதனை நீங்கள் உங்களுடைய அலமாரியில் பாதுகாப்பாக வைத்திருக்கின்றீர்கள் - ஒரு நாள் கூட அதனை நீங்கள் வாசிக்க முற்பட்டதில்லை — அப்படியானால் அந்த வரலாறு உங்களுக்கு எப்படி வழிகாட்டும்? எனவே தான் நான் கூறுகின்றேன், வரலாறு தானாக எவருக்கும் வழிகாட்டுவதில்லை. மனிதனால் தான் வரலாறு ஆக்கப்படுகின்றது பின்னர் மனிதனால தான் அது படிக்கப்படுகின்றது. எனவே வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ள விரும்பினால் மட்டும் தான் வரலாறு வழிகாட்டி. ஏனெனில் வரலாறு மனிதனை உருவாக்குவதில்லை மனிதனே வரலாற்றை படைக்கின்றான். இதனை, பிரெஞ்சு அறிஞர் வால்டேயரின் வார்த்தையில் கூறுவதனால், வரலாறு அதனளவில் மீண்டும் நிகழ்வதில்லை மனிதர்கள் தான் அதனை மீண்டும் நிகழ்த்துகின்றார்கள். மனிதர்கள் மீண்டும் நிகழ்த்தும் வரலாற்றிலிருந்து, அவர்களே கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. அப்படிக் கற்றுக் கொண்டு தவறுகளை திருத்தித், திருத்தி, முன்னேறுவது ஒன்று தான் மனிதனுக்கு முன்னாலுள்ள பணி.

இந்த அடிப்படையில், ஈழத் தமிழர்களின் இன்றைய அரசியல் நிலைமை என்பது ஈழத் தமிழர்களின் கூட்டுச் செயற்பாடுகளின், கூட்டு விளைவாகும். இதில் அனைவருக்குமே பொறுப்புண்டு. சிலருக்கு அதிகமான காலத்திற்கான பொறுப்பும், சிலருக்கு குறிப்பிட்ட காலப் பொறுப்பு என்று வேண்டுமனால் வகைப்படுத்திக் கொள்ளலாம். விடுதலைப் புலிகள் அமைப்பு தன்னால் தனித்து அனைத்தையும் அடைய முடியும் என்று கூறி, மற்றையவர்கள் அனைவரையும் ஓரங்கட்டியதால், அவர்கள் மீது அதிக குற்றம் சுமத்தப்படுவது இயல்பானதுதான் ஆனால் அதற்காக மற்றவர்களுக்கு எந்தவொரு பொறுப்பும் இல்லை என்பதாகிவிடாது. அன்றைய சூழலில் ஒவ்வொன்றையும் திட்டமிட்டவர்கள் அனைவரும், தாங்கள் சாதிக்கப் போவதாகவும், தாங்கள் செய்வது சரியென்றும் நம்பியே செய்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தவாறு எதுவும் நடக்கவில்லை. ஏன் நடக்கவில்லை என்பது தான் படிப்பினை. அதிலிருந்து கற்றுக் கொள்வது தான் வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்வது.

இந்த உலகில் நீங்கள் எந்தளவு உண்மையாக இருக்கின்றீர்கள் எந்தளவு உறுதியாக இருக்கின்றீர்கள் எந்தளவு அர்பணிக்கின்றீர்கள் எந்தளவு தியாகம் செய்கின்றீர்கள் - இவற்றால் எல்லாம் ஒரு இயக்கம் வெற்றியை பெற்றுவிட முடியாது. ஏனெனில் தியாகங்கள் என்பதும், உண்மை என்பதும் எங்களுக்கு மட்டும் தான். எங்களுடைய தியாகத்தை மற்றவர்கள் தியாகம் என்று புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு எந்த அவசியமும் இல்லை. எங்களுடைய உண்மையை, மற்றவர்கள், உண்மையென்று நம்ப வேண்டிய அவசியம் இல்லை.

ஏனெனில் அவரவர் நீதிமன்றத்தில் ஒவ்வொன்றுக்கும் வேறு வேறு தீர்ப்புக்கள் உண்டு. ஆனால் எல்லோருக்கும் ஒரு விடயம் உண்டு. அது தான் அவரவருக்கான நலன். அந்த நலன்களை நிறுத்துப் பார்த்துத்தான் அவர்கள் எங்களை எடை போடுவார்கள். இந்த இடத்தை சரியாக புரிந்து கொண்டிருந்தால் ஈழத் தமிழினம் இத்தனை இழப்புக்களை கண்டிருக்க வேண்டி ஏற்பட்டிருக்காது. சில எண்ணிக்கையானவர்களின் மரணத்துடனேயே, இந்த யுத்தத்தை முடித்திருந்திருக்கலாம். எப்போதும் ஒரு கேள்வி குறுக்கிடுவதுண்டு. இன்று பலரும் சுயவிமர்சனம் தேவை என்று கூறும் போதெல்லாம் அவர்கள் தங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி இருக்கிறதல்லவா! (இது விடுதலைப் புலிகளை ஆதரித்து செய்யப்பட்டவர்களுக்குத் தான் அதிகம் பொருத்தமானது) எந்த அடிப்படையில், எந்தத் துனிவில் இந்தப் பிராந்தியத்தில் ஒரு தனி நாட்டை அடைய முடியுமென்று நம்பினீர்கள்? அந்த நம்பிக்கை தொடர்பில் நீங்கள் ஒரு முறை கூட சந்தேகப்படவில்லையா? விடுதலைப் புலிகள் வன்னியை மையப்படுத்தி ஒரு நடைமுறை அரசாங்கத்தை இயக்கிக் கொண்டிருந்த போது, புத்திஜீவிகள், சிந்தனையாளர்கள், இலக்கியவாதிகள் என்னும் அடையாளத்தோடு இருந்த


கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -




ஏராளமானவர்கள் விடுதலைப் புலிகளின் வெற்றியை மட்டுமே கற்பனை செய்திருந்தனர். அவர்களில் பலர் அவர்களுடைய கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இருந்தனர். உலகின் மிகப் பெரிய மனித வெடிகுண்டுத் தொழிற்சாலையிலிருந்து வருகிறோம் என்று பெருமிதப்பட்ட அறிவுஜீவிகளும் இருந்தனர்.

ஆனால் நிலைமை மோசமானால், கையை மீறிப் போனால், விடுதலைப் புலிகளை காப்பாற்றுவதற்கு இந்த உலகில் எந்தவொரு நாடும் இல்லை என்பதை உணர முடியாதவர்களாகத் தானே அனைவரும் இருந்திருக்கின்றனர் - ஏன்? எங்கு போனது உங்களுடைய மேதமை? மேற்குலக தாராளவாத ஜனநாயகம் வழங்கிய செழிப்பான சூலுக்குள் வாழ்ந்தும் கூட, புலம்பெயர் அறிவாளிகளால் ஏன் இவற்றை புரிந்து கொள்ள முடியாமல் போனது? ஒரு கட்சி அரசியலை முன்னெடுத்த விடுதலைப் புலிகளால் ஒரு வெற்றியை பெற முடியுமென்று எப்படி நம்ப முடிந்தது? அன்றைய சூழலில், புத்திஜீவிகளாக, சிந்தனையாளர்களா இருந்தவர்களால் எவ்வாறு விடுதலைப் புலிகளோடு முற்றிலுமாக ஒத்துப் போக முடிந்தது. எவ்வாறு அவர்களை ஊக்குவிக்க முடிந்தது?

இறுதியிலாவது தம்பி அல்லது அண்ணன் நீங்கள் போகும் பாதை தவறு, நிறுத்துங்கள் உங்கள் ஆட்டத்தை என்றல்லவா அறிவுத்தியிருக்க வேண்டும். ஆனால் அப்படி ஏதும் நடந்ததாக அறிய முடியவில்லையே. நடந்திருந்தால் வெளியில் வந்து கூறுங்கள். இப்படியெல்லாம் அமைதியாக ஆதரித்து விட்டு, பின்னர், பிரபாகரனையும் அவரது தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், மட்டுமே குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது சரியானதாக இருக்க முடியுமா?

என்னைப் போன்ற மாணவர்கள் அவ்வாறு தவறுதலாக சித்திருந்தால், அது ஒரு பெருந் தவறல்ல ஏனெனில் எனக்கு விடங்கள் விளங்கயிருக்கவில்லை ஏனெனில் அன்றைய சூழலில் பிராந்திய, சர்வதேச அரசியல் தொடர்பில் - குறிப்பாக இந்தியா தொடர்பில் போதிய புரிதல் என்னிடம் இருந்திருக்கவில்லை.

ஏன் இதனை கூறுகின்றேன் என்றால், இப்போதும் அதே தவறைத் தானே, படித்தவர்கள் என்போர், புத்திஜீவிகள் என்போர், பல்கலைக்கழக அறிவுஜீவிகள் என்போர் செய்து கொண்டிருக்கின்றனர். ஒரு கட்சியை பார்த்து மற்றைய கட்சியினர் ஓட்டுக் குழு,

(18ம் பக்கம் பார்க்க)

# பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டில் முதன் முறையாக பெண் கடற்படை அதிகாரிகள் கைது

போரின் இறுதிக்கட்டத்தில் திருகோணமலை பகுதியில் வெள்ளை வேனில் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு தமிழ்ப் பெண்கள், கிழக்கு பிராந்தியத்தின் உயர் கடற்படை செயற்பாட்டு தலைமையகத்தில் இருந்த நிலத்தடி சித்திரவதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில், பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கூட்டு கொள்ளைகள் தொடர்பான விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பெண் கடற்படை அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் பொலிஸாருக்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே கிடைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நபர்களைக் கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட சித்திரவதைகளை மேற்கொண்டு காணாமலாக்கிய குற்றச்சாட்டில் கடற்படை பெண் அதிகாரிகள் கைது செய்யப்பட்ட சம்பவம் இலங்கையில் பதிவாகியிருப்பது இதுவே முதல் முறையாகும்.

திருகோணமலை, கிண்ணியா வீதியில் உள்ள பாலையூற்று பகுதியில் வசித்து வந்த உறவுமுறைச் சகோதரிகளான மேரி டெல்ஷியா மற்றும் சசிகுமார் தேன்மொழி ஆகிய இருவரும் 2008 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டு கொடூரமான கன்சைட் நிலத்தடி சிறையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த சம்பவம் தொடர்பில் லெப்டினன் கமாண்டர் கோதாகொட ஹேவாவிதாரண தீபிகா சந்தமாலி மற்றும் இளநிலை அதிகாரி மிஹிந் துகுலசூரியகே அருணி தினூஷா காவுஸ் ஆகிய இரு கடற்படை அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இந்த சம்பவம் தொடர்பான முறைப்பாடுகள் பல ஆண்டுகளுக்கு முன்னரே கிடைத்துள்ளன. மேலும், அந்தக் காலப்பகுதியில் குறித்த பெண் அதிகாரிகளிடம் பல சந்தர்ப்பங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக நீதிமன்றத் திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

### நீதவானிடம் இரகசிய வாக்குமூலம்

தமிழ்ப் பெண்கள் இருவரையும் கடத்திச் சென்று காணாமலாக்கிய சம்பவம் தொடர்பில் மேலும் சில கடற்படை அதிகாரிகளும் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

மேரி டெல்சியா மற்றும் தேன்மொழி ஆகிய இருவரும் 2008.05.13 அன்று இந்த வழக்கின் 6, 7, 13 மற்றும் 14 ஆம் இலக்க சந்தேகநபர்கள் மற்றும் சந்தேகநபர்களான பெண்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும், இதுவரை அந்த இரு பெண்களும் காணாமல் போயுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதனுடன் கடற்படையின் சிறப்பு புலனாய்வுப் பிரிவுக்கும் தொடர்பு இருப்பதாகவும், பாதிக்கப்பட்ட குறித்த இரு பெண்களும் கன்சைட் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது என 2018 ஆம் ஆண்டு திருகோணமலை



நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாட்சியாளரின் பெயர் குறிப்பிடப்படாமல் பொலிஸாரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ள ஏனைய சந்தேகநபர்களான கடற்படை அதிகாரிகள் மில்ல விதானச்சிகே கோசல சமிந்த மற்றும் பொல்வத்த விதானலாகே சம்பத் ஜனக குமார ஆகியோராவர்

தமிழ் பெண்கள் இருவரும் கன்சைட் நிலத்தடி முகாமின் சிறை அறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அவர்களை தினூஷா காவுஸ் மற்றும் தீபிகா சந்தமாலி ஆகியோரே தடுத்து வைத்திருந்ததாகவும், அப்போது தனது அடையாளத்தை வெளிப்படுத்தாத கைதி ஒருவரும் சாட்சியமளித்துள்ளதாக குற்றப் புலனாய்வாளர்கள் திருகோணமலை நீதவானிடம் சமர்ப்பித்துள்ள மற்றுமொரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நேரில் கண்ட சாட்சி

தமிழ்ப் பெண்கள் இருவர் அங்கு இருந்ததாகவும், அந்த இருவரும் அக்கா மற்றும் தங்கை என குறிப்பிடப்பட்டதாகவும், அவர்கள் தனித் தனியான சிறை அறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. லொக்கு குமார, பொடி குமார, ரத்நாயக்க லசந்த, ரணசிங்க சேர், சின்னா, முரளி, காமினி, பண்டார ஆகியோரும், தர்ஷன சேர், அபேகோன், அமரசிங்க, உபுல் ஆகியோரும், பெண் கடற்படை அதிகாரிகளான சந்தமாலி மற்றும் காவுஸ் ஆகியோரும் அந்த சந்தேகநபர்களின் பாதுகாப்புப் பணியில் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தமாலி மற்றும் காவுஸ் ஆகிய இருவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களின் பாதுகாப்புப் பணியில் இருந்ததாகவும், மேற்குறிப்பிடப்பட்ட இரு பெண்களும் இரண்டு நாட்களுக்குப் பின்னர் சிறை அறைகளிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டதாகவும், அதன் பின்னர் அவர்கள் மீண்டும் அழைத்து வரப்படவில்லை என்றும்...'' அந்தக் கைதி வழங்கியுள்ள நீண்ட வாக்கு மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளை வேனில் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்த இரு தமிழ் பெண்களின் சகோதரர்கள் மற்றும் சில உறவினர்களும் அதே காலப் பகுதியில் கன்சைட் நிலத்தடி சிறையில் தடுத்து வைக்கப்பட்டு, கடுமையான உடல் மற்றும் மன ரீதியான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக விசாரணையாளர்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சித்திரவதை முகாமின் விபரங்கள்

இந்த இரண்டு கடற்படை பெண் அதிகாரிகளும், கன்சைட் நிலத்தடி சித்திரவதை முகாமுக்குப் பொறுப்பாக இருந்த கமாண்டர் (ஓய்வு பெற்ற) ரியர் அட்மிரல் டி.கே.பி. தசநாயக்கவின் கீழ் பணியாற்றியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவரது உத்தரவின் கீழ் இயங்கிய கடற்படையின் சிறப்பு புலனாய்வுப் பிரிவினரால், கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளில் இருந்து கப்பம் பெறுவதற்காக கடத்திவரப்பட்ட தமிழர்களையும், போர்க்காலத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்களையும் காவலில் வைத்துப் பாதுகாக்கும் பணி இந்த இரு பெண் அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டிருந்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேலும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கன்சைட் நிலத்தடி சிறைகளை கொண்ட வளாகம் தொடர்பில் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இந்த சந்தேகநபர்களான பெண் அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மேலும் பல குற்றச் செயல்கள் மற்றும் சில நபர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான தகவல்களும் கண்டறியப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் முக்கியமான ஒரு சம்பவமாக, அலவ்வ பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் அலவ்வ வைத்தியசாலையில் தங்கவைக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், 2010 ஜூலை 26 ஆம் திகதி அதிகாலை காணாமல் போனதாக பொலிஸார் தெரிவித்திருந்த, கேகாலை மல்வத்த கந்த, எகிரியகல பகுதியில் வசித்து வந்த ஒரு பிள்ளையின் தந்தையான கனேராளாலகே சாந்த சமரவீர தொடர்பான விசாரணை காணப்படுகிறது.

அவர் வைத்தியசாலையில் இருந்த போது சிலரால் கடத்திச் செல்லப்பட்டு கடற்படைக் குழுவொன்றிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், கன்சைட் நிலத்தடி சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனை உறுதிப்படுத்தும் பல்வேறு சாட்சியங்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அவ்வப்போது நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

போரின் இறுதிக் காலப்பகுதியில் கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து தந்தை மகன் நால்வர் உள்ளிட்ட பதினொரு ஆண்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவமும், அவர்கள் கன்சைட் சித்திரவதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த குற்றச்செயல் தொடர்பில் வழக்குத் தொடரப்பட்டுள்ளவர்களில் முன்னாள் கடற்படைத் தளபதிகளான அட்மிரல் ஒப் த ப்ளீட் வசந்த கரன்னாகொட மற்றும் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன ஆகியோரும் அடங்குகின்றனர்.

### பெண் கடற்படை அதிகாரிகளின் பாலியல் சித்திரவதை

16 ஆண்டுகளுக்கு முன்னர் சாந்த சமரவீர காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இந்த வாரம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட அருணி தினூஷா காவுஸ் மற்றும் தீபிகா சந்தமாலி ஆகிய இரு பெண் கடற்படை அதிகாரிகளும், கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரும், முன்னாள் சிறப்பு புலனாய்வுப் பணிப்பாளருமான கமாண்டர் (ஓய்வுபெற்ற) ரியர் அட்மிரல் டி.கே.பி. தசநாயக்க, கமாண்டர் சுமித் ரணசிங்க உள்ளிட்ட குழுவினருடன் இணைந்து மேலும் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டார்களா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, குற்றப் புலனாய்வு விசாரணைகள் குறித்து அறிந்த, தனது பெயரை வெளியிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களான குறித்த இரு பெண் அதிகாரிகளும், தங்களை கன்சைட் நிலத்தடி சித்திரவதை முகாமின் சிறைகளிலிருந்து வெளியே அழைத்து வந்து பாலியல் வன் கொடுமைக்கு உட்படுத்தியதாகவும், சரத்தை கழற்றி சுய இன்பத்தில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்தி, 'கடுமையான பாலியல் துன்புறுத்தலுக்கும் அவமானத்திற்கும்' உள்ளாக்கியதாகவும் கைதிகளின் அதிர்ச்சியூட்டும் வாக்குமூலங்களை மேற் கோள்காட்டி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஒரு தூக்குத் தண்டனையும் தமிழ் - முஸ்லிம் உறவும்!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



இனத்தால் மதத்தால் மொழியால் இப்பொழுதும் பிளவுண்டிருக்கும் ஒரு சிறிய தீவை ஒரு மரண தண்டனை தற்காலிகமாகவேனும் ஒன்றிணைத்திருக்கிறதா? அதுவும் கனடாவில் வசிக்கும் ஈழத் தமிழ்ப் பெண் பிள்ளையான மைத்திரேயி இராம கிருஷ்ணனுக்கு எதிராக சிங்கள முகநூல் உலாவிகள் இனத் துவேசத்தைக் கக்கிக் கொண்டிருக்கும் ஒரு கால கட்டத்தில்?



மட்டக்களப்பைச் சேர்ந்த அனோஜன் என்ற தமிழருக்கு சவுதி அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தண்டனையானது இனங் கடந்து மதங்கடந்து இலங்கையில் உள்ளவர்களை ஒன்றிணைத்திருக்கிறது. அந்த மரண தண்டனையை நிறுத்த வேண்டும் என்று மனசாட்சி உள்ள எல்லாருமே சவுதி அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அனோஜன் பிறந்த கிராமத்தைச் சேர்ந்த முஸ்லிம்களும் உட்பட முஸ்லிம்கள் மத்தியில் உள்ள படித்தவர்கள், மதகுருக்கள்,சமூகச் செயற்பாட்டாளர்கள்,சட்டச் செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள்...என்று வெவ்வேறு தரப்புகளைச் சேர்ந்தவர்கள் வழங்கப்பட்ட மரண தண்டனையை நீக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

தமிழ் பேசும் முஸ்லிம்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான கட்சிகள் இந்த விடயத்தில் ஒரே நிலைப்பாட்டோடு காணப்படுகின்றன. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எல்லா கட்சிகளுமே இந்த விடயத்தில் ஒரே நிலைப்பாட்டோடு காணப்படுகின்றன. அவை தமிழ்த் தேசியவாத கட்சிகளாக இருந்தாலும் சரி தமிழ் தேசிய வாதத்துக்குள் வராத கட்சிகளாக இருந்தாலும்சரி அனைவரும் இந்த விடயத்தில் ஒன்றாகத் திரண்டு நிற்கிறார்கள்.

அப்படித் தான் சிங்கள மக்கள் மத்தியிலும் மரண தண்டனையை நீக்கக் கோரி இலங்கைத் தீவில் உள்ள பெரும்பாலானவர்கள் ஒன்றாகத் திரண்டிருப்பது மிக அரிதான ஒரு நிகழ்வு. அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் இது விடயத்தில் ஏறக்குறைய ஒரே நிலைப்பாட்டோடு காணப்படுகின்றன.

எனினும் அது தற்காலிகமானது என்பதைத் தான், சஜித்தை அனோஜனின் தாயார் சந்தித்தபின் வெளிவந்த செய்திகளின் மீதான வாதப் பிரதிவாதங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அனோஜனின் உறவினர்களும் அவர்களுக்கு உதவும் செயற்பாட்டாளர்களும் சஜித் பிரேமதாசாவை சந்தித்த போது சஜித் அனோஜனோடு தொலைபேசியில் உரையாடியதாகவும் அந்த உரையாடலை ஸ்பீக்கரில் விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த உரையாடலில் அனோஜன் தெரிவிக்கும் கருத்துக்கள் சர்ச்சைக்குரியவை. அதைவிட சர்ச்சைக்குரியது, அப்படிப்பட்ட ஒரு உரையாடலை பகிரங்க வெளியில் விட்டது. நாட்டின் உயர் நிலை அரசியல்வாதிகளில் ஒருவராகிய சஜித் பிரேமதாச இந்த விடயத்தில் மேலும் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டிருக்க வேண்டுமா? எதுவாயினும் சஜித் பிரேமதாச அனோஜனுக்கு நல்லது செய்ய முயற்சித்தார் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஒரு மரணத் தீர்ப்புக்கு எதிராக இச்சிறிய தீவில் உள்ள நான்கு மதப் பிரிவினரும் ஒன்றிணைந்திருப்பதை வரவேற்கலாம். இந்த விடயம் ஒரு மரண தண்டனை



என்பதற்குமப்பால் ஒரு மத நிந்தனை என்பதற்குமப்பால்,இலங்கைத் தீவில் வாழும் தமிழ், முஸ்லிம் ஆகிய இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான எதிர்கால உறவுகளைத் தீர்மானிக்கும் ஒரு விடயமும் என்பது தான் இதன் பாரதூரத்தன்மை ஆகும். இதில் அனோஜனுக்கு கிடைக்கக் கூடிய கடுமையான தண்டனையானது இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான எதிர்கால உறவில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தக் கூடியது. எனவே அனோஜனின் விடயத்தில் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதலாவதாக அனோஜனை பத்திரமாக வெளியே எடுக்க வேண்டும். ஆகக் குறைந்தது அவருடைய தண்டனையின் கடுமையை குறைக்க வேண்டும். அது பெருமளவுக்கு அரசியல் ராஜதந்திர நடவடிக்கை தான். அறம் சார்ந்த எதிர்ப்புக்கள் அல்லது அறம் சார்ந்த கோரிக்கைகள் ஒரு கட்டத்துக்கு மேல் வேலை செய்யாது. எனவே அதை அதற்குரிய தளத்தில் அதற்குரிய பக்குவத்தோடு அணுக வேண்டும்.அப்படி அணுகினால்தான் அனோஜனை தூக்குக் கயிற்றில் இருந்து காப்பாற்றலாம். அரசியல் செய்திகளை வாசி

சவுதி அரேபிய மன்னர் ஆட்சி அனோஜனுக்கு விதித்த தண்டனை சரியா பிழையா போன்ற விவாதங்களை தனியே வைத்துக் கொள்ளலாம். சவுதி அரேபியாவின் ஆள் புல எல்லைக்குள் அனோஜன் தொழில் புரிகிறார். எனவே அங்கே தற்காலிகமாக வாழ்கிறார். இந்த அடிப்படையில் அவர் அந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டவர். அந்த சட்ட திட்டங்களின் மனிதாபிமான பரிமாணங்கள் குறித்து தனியாக ஆராயலாம். ஆனால் இப்பொழுது நடைமுறையில் உள்ள சவுதி அரேபிய சட்டங்களின்படி அவர் கையாளப்படுகிறார். எனவே அங்கே சட்டம் நீதி என்பவற்றை பரிபாலிக்கும் மன்னராட்சியோடு தான் பேச வேண்டும். அந்த மன்னர் ஆட்சியின் முடிவு தான் இறுதியானது. அதனால் அந்த மன்னர் ஆட்சி மீது எப்படிப்பட்ட ராஜதந்திரச் செல்வாக்கை, தார்மீக அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம் என்றுதான் சிந்திக்க வேண்டும். முதலில் அனோஜனை தூக்குக் கயிற்றில் இருந்து காப்பாற்ற வேண்டும். அவருடைய தண்டனையின் கடுமையை ஆகக்கூடிய அளவு குறைக்க வேண்டும்.

இரண்டாவதாக அது இலங்கைத் தீவில் ஏற்கனவே முரண்பட்டுக் கொண்டிருக்கும் இரண்டு சமூக பிரிவினருக்கு இடையிலான உறவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக்கூடிய ஒரு விவகாரமாக வளரக்கூடிய ஆபத்து தெரிகிறது. எனவே அந்த நோக்குக் கோணத்தில் இருந்தும் அதனை அணுகவேண்டும்.

மூன்றாவது அனோஜனின் விடயம் சமூக ஊடக வலைத்தளப் பயனாளிகளுக்கு ஒரு பாடத்தைக் கற்றுத் தருகிறது. உங்களிடம் ஒரு கைபேசி அல்லது கணினி இருக்கிறது என்பதற்காக, அதில் இன்டர்நெட் இணைப்பு இருக்கிறது என்பதற்காக, நீங்கள் முகநூலில் எல்லாவற்றையும் எழுத முடியாது.எழுதும் எல்லாவற்றிற்கும் பொறுப்புக்கூற வேண்டும்.

கண்ணியமின்றி மற்றவர்களை விமர்சிக்கின்ற ஒரு சமூகத்தை, ஒரு மதத்தை, ஒரு இனத்தை ஒரு மொழியை ஒரு பால் பிரிவை, ஒரு சாதியை, ஒரு ஊரை, ஒரு பிராந்தியத்தை, ஒரு சமூகப் பொது அடையாளத்தை, நம்பிக்கையை...... சிறுமைப்படுத்தி எழுதுகின்ற ஒருவருடைய அந்தரங்கத்தை பொதுவெளியில் விமர்சிக்கின்ற எல்லாருக்கும் இது பொருந்தும். பொது வெளியில் தாங்கள் எழுதும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொருவரும் பொறுப்புக்கூற வேண்டும். பொது வெளியை கழிப்பறையாகவோ கழிப்பறைச் சுவராகவோக் கருதி அங்கே கழிந்து விட்டுப் போக முடியாது.

அனோஜன் சவுதியில் இருப்பதனால் அந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டிருக்கிறார். அதேசமயம் ஐரோப்பாவில் அமெரிக்காவில், ஒஸ்திரேலியாவில் வசிக்கும் சில தமிழ் வெறுப்பர்கள் இப்பொழுதும் சமூக ஊடகவலைத் தளங்களில் சுதந்திரமாக விஷத்தைக் கக்கிக் கொண்டிருக்கிறார்கள். கழிந்து கொண்டிருக்கிறார்கள். மைத்திரேயி ராமகிருஷ்ணனுக்கு எதிராக கக்கப்படும் விஷமும் வன்மமும் அரசியல் தூஷணமும் ஆகப்பிந்திய உதாரணங்கள்.

மதத்தை இறைதூதரை இனத்தை மொழியை பாலினத்தை ஊரை, சாதியை, பிராந்தியத்தை, ஒருவருடைய அந்தரங்கத்தை இன்ன பிறவை சிறுமைப்படுத்தி எழுதும் ஒவ்வொருவரும் தமது வார்த்தைகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டும். தனது சகோதரிக்கு தாய்க்கு மனைவிக்கு எதிராக மற்றொருவர் எதை எழுதக்கூடாது என்று ஒருவர் எதிர்பார்க்கிறாரோ, அதையே அவர் மற்றவரின் சகோதரிக்கும் தாய்க்கும் மனைவிக்கும் எழுதக்கூடாது. தனது மதத்தை ஒருவன் சிறுமைப்படுத்தும் போது கோபப்படும் ஒருவர், பதிலுக்கு தானும் மற்றவர்களின் மதத்தை சிறுமைப்படுத்த கூடாது. ஒருவர் பொதுவெளியில் எழுதுதை அவருடைய தாயும் சகோதரியும் பொது வெளியில் பகிரங்கமாக வாசித்துக் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அங்கே எங்கேயோ வக்கிரம் இருக்கிறது என்று பொருள்.(18ம் பக்கம் பார்க்க)

# மழைக்காக மந்திர நீரைத் தெளிக்கும் நாட்டில் சோதிடர்கள்!

கடந்த வாரம் ஒரு பௌத்த மத குரு விமானப்படை ஹெலிகாப்டரில் பறந்த படி நாட்டின் மீது மந்திரித்த நீரைத் தெளித்தார். பருவ மழைக்காக காத்தி ருந்த நாட்களில் நாட்டில் நிலவிய வறட்சியை நீக்கி மழையை வர்ஷிக்கு மாறு வேண்டி மந்திரித்து அந்த நீர் தெளிக்கப்பட்டதாக செய்திகள் தெரி விக்கின்றன.நீர் தெளிக்கப்படுவதற்கு முதல் நாளே கிளிநொச்சியில் மழை பெய்து விட்டது. அடுத்த அடுத்த நாட்களில் யாழ்ப்பாணத்திலும் பொழிந் தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் மந்திர நீர் தெளிக்கப்படவில்லை.

நாட்டில் இப்பொழுது ஆட்சியில் இரு ப்பது சீன சார்பு இடது சாரி மரபில் வந்த ஜேவிபியை அடித்தளமாகக் கொண்ட தேசியமக்கள் சக்தி அரசாங் கம் தான். ஜனாதிபதி கலந்து கொள் ளும் எல்லாப் பொது நிகழ்வுகளிலும் பௌத்த மத குருக்களின் கால்களில் விழுகிறார். முழந்தாழட்டு அவர்களு டைய மந்திரித்த நூலை கைகளில் கட்டிக்கொள்கிறார். அவருக்கு கடவுள் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். நாட்டு மக்களின் நம்பிக்கையை பிரதி பலிப்பதற்காக அவர் நடிப்பதாகவும் இருக்கலாம்.

ஆனால் அவருடைய முதிய எளிமை யான தாயாருக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. அனுர சிறுவனாக இருக்கும் பொழுது அவரை மகா சங்கத்தில் சேர்க்குமாறு கேட்கப்பட்டிருக்கிறது. அக்கால கட்டத்தில் தாயார் ஒரு சோதிடரை கண்டிருக்கிறார். ஜோதிடர் சொல்லியிருக்கிறார், உங்களுடைய




மகன் எதிர்காலத்தில் நாட்டின் தலை வராக வருவார் என்று.

எனது நண்பர் ஒருவர் கேட்டார், அந்த ஜோதிடர் இப்பொழுதும் உயிரு டன் இருக்கிறாரா? அவரைப் போய்க் காணலாமா? என்று. ஆனால் அந்த ஜோதிடரும் ராஜபக்சக்களுக்கு நெரு க்கமாக இருந்த ஞானக்கா என்ற ஜோதிடரும் ஒருவர் அல்ல. பல தசாப்தங்களுக்கு முன்னரே அனுர ஜனாதிபதியாக வருவார் என்று அவர் மிகச் சரியாக சாத்திரம் சொல்லியிரு க்கிறார்.

அனுரவின் தாயார் மட்டுமல்ல, இலங் கைத் தீவை ஆட்சி செய்த பண்டார நாயக்கா குடும்பத்துக்கும் ஜோதிடத் தில் நம்பிக்கை உண்டு. அந்தக் குடும் பத்துக்கு நெருக்கமாக இருந்த வரும், வி.பொன்னம்பலத்தின் கட்சியில் செயலாளராக இருந்தவருமான சிவா. சுப்பிரமணியம் 1991இல்ஒரு தனிப் பட்ட உரையாடலில் பண்டாரநாயக்கா குடும்பத்தின் ஜோதிட நம்பிக்கை தொடர்பாக ஒரு விடயத்தைச் சொன் னார்.

ஒரு முறை யாழ்தேவி புகையிரதத்தில் சிவா.சுப்பிரமணியம் பயணம் செய்தி ருக்கிறார். அவரோடு கைலாசநாதர் குருக்களும் பயணம் செய்திருக்கிறார். குருக்கள் நன்றாக ஜாதகம் பார்ப்பார். பயண வழியில் இருவரும் நெருக்க மாக உரையாடிய போது குருக்கள், பண்டாரநாயக்கா குடும்பத்தின் சாதகங் களை தான் பார்த்தது பற்றிக் கூறியிரு க்கிறார். அவர் அந்தச் சாதகங்களைப் பார்த்தது கிட்டத்தட்ட 1970களில்.

அந்தச் சாதகங்களின்படி அக்குடும்பத் தின் ஆண் வாரிசு ஆகிய அனுரா பண்டாரநாயக்க என்றைக்குமே தலை வராக வர மாட்டார்ம் என்றும், மூத்த மகள் சுனித்திரா பெருமளவுக்கு அரசிய லில் ஈடுபடமாட்டார் என்றும், இரண்டாவது மகளாகிய சந்திரிகா தான் அரசியலில் வெற்றி பெறுவார், தலைவியாக வருவார் என்றும் குருக்கள் கூறியிருக்கிறார்.

இதை சிவா.சுப்பிரமணியம் எனக்கு நினைவூட்டியது 1991இல் அப் பொழுது சந்திரிக்கா முதலமைச்ச ராகவும் வந்திருக்கவில்லை. சிவா சுப்பிரமணியம் இடதுசாரி மரபில் வந்தவர். ஆனால் மக்களின் பண் பாட்டு நம்பிக்கைகளை மதிப்பவர். ஜோதிடத்தில் அவருக்கு பெரிய அளவு நம்பிக்கை இல்லை. எனினும் சில தசாப்தங்களுக்கு முன் கைலாசநாத குருக்கள் பண்டாரநாயக்கா குடும்ப சாதகங்களை எப்படிக் கணித்திருக் கிறார் என்று கூறினார்.

அனுரவின் தாயார் பண்டாரநாயக்கா குடும்பம் போன்றவர்கள் மட்டுமல்ல. சிங்கள பௌத்த அரசியலில் மேட்டுக் குடிகளை பிரதிபலித்த பெரும்பாலான தலைவர்கள் கடவுள் நம்பிக்கை உடையவர்களாக, மந்திரம் தந்திரம் ஜோதிடம் பில்லி சூனியம் போன்ற வற்றை நம்புகின்றவர்களாக இருந்திரு க்கிறார்கள்.

உதாரணமாக மஹிந்த ராஜபக்ச. கடந்த 12ம் திகதி அவர் அனுராத புரத்தில் ஒரு பொதுக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். அந்தக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தியது நாமல். ஆனால் கூட்டம் நடப்பதற்கு முன்னரே அரசாங்கம் அவரைத் தூக்கி உள்ளே போட்டு விட்டது. அதனால் அந்தக் கூட்டத்துக்கு மகிந்த தலைமை தாங்க வேண்டி வந்தது.அ ந்தக் கூட்டத்தில் மஹிந்த பேச வில்லை. ஆனால் மக்களை நோக்கி கைகளை அசைக்கும் பொழுது அவருடைய ஒரு உள்ளங்கைக்குள் ஏதோ ஒரு பொருளை அவர் இறுக்கிப் பிடித்திருப்பது தெரிகிறது. அந்தப் பொருள் என்ன என்பதைக் குறித்து சமூகவலைத்தளங்களில் ஆரா ய்ச்சி நடந்தது.

அந்தப் பொருள் மகிந்தவின் கைக்குள் காணப்படுவது அது தான் முதல் தடவை அல்ல. அவர் ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு வரும் போதெல் லாம் அந்தப் பொருளை கைக்குள் வைத்திருப்பார். உதாரணமாக பல தசாப்தங்களின் பின் யாழ்தேவி புகை யிரதம் யாழ்ப்பாணத்துக்கு வந்த பொழுது அந்த விழாவில் மஹிந்த காணப்பட்டார். அதில் அவர் கைகளை உயர்த்தி அசைக்கும் பொழுது மேற்படி பொருள் அவரு டைய கைக்குள் காணப்பட்டது. அதை அப்பொழுது எடுத்த ஒளிப் படங்களில் காணலாம்.

அது என்ன பொருள்? அது ஒரு மந்திரித்த வஜ்ராயுதம் என்று கூறு கிறார்கள். அதை வைத்திருப்பவரை அது ஆபத்துகளில் இருந்தும், பில்லி சூ னியம், ஏவல் போன்றவற்றில் இருந் தும் பாதுகாக்கும் என்று நம்பப்படு கிறது.

இலங்கைத்தீவின் சிங்கள பௌத்த அரசியல்வாதிகளில் அதிகம் ஆபத்துக் குள்ளாகக்கூடிய ஒருவர் அவர். ஏனென்றால் போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர். எனினும் போர் வெற்றிகளைக் கொண்டாடிய பின்ன ரும் அவர் தனக்குப் பாதுகாப்பு இல்லை என்று உணர்கிறார். யாரிட மிருந்து தன்னைப் பாதுகாப்பதற்காக அந்த மந்திரித்த வஸ்துவை கைக்குள் கொண்டு திரிகிறார்? தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து 17 ஆண்டுகள் ஆன பின்னரும் சிங்களமக்கள் மத்தியில் வெற்றி நாயக ராகக் கொண்டாடப்படும் ஒருவர் பயத்திலிருந்து விடுபடவில்லை என்ப தனை அது குறிக்கிறதா?

மஹிந்த ராஜபக்ஷ போன்ற சிங்கள பௌத்தர்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவ ராகிய ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அப்படிப்பட்ட நம்பிக்கைகள் உண்டு. அவர் பதவிப் பொறுப்புகளில் இருந்த காலகட்டங்களில் இந்தியாவுக்கு குறிப்பாக ஸ்ரீரங்கம் கோவிலுக்கு போவார்.அ ங்கே ஒரு தராசில் அவரு டைய மொத்த எடைக்கு சமமான நேர்த்திப்பொருளை வைத்து தனது நேர்த்திக் கடனை நிறைவேற்றிக் கொள்வார் என்று செய்திகள் தெரிவித் தன. எனவே சிங்கள பௌத்த அரசாட்சியின் மத நம்பிக்கைகளின் பிரிக்கப்படவையில்லாத பகுதியாக ஜோதிடம், மந்திரம், தந்திரம், பில்லி சூனியம் போன்றவை காணப்படு கின்றன. தோழர்களின் ஆட்சியும் அதற்கு விதிவிலக்கல்ல.

மேற்கண்டவை யாவும் தென்னிலங்கை உதாரணங்கள். அது போல தமிழ் அரசியலிலும் வருங்காலத்தை உரை த்த சோதிடர்கள் உண்டா? சோதிடம், மந்திரம், தந்திரம், பில்லி சூனியம் போன்றவற்றை நம்பும் அரசியல்வாதி கள் உண்டா?

ஆயுதப் போராட்டத்தில் நிகழ்ந்த சில தாக்குதல்கள் எண் சோதிட முறைப் படி நாட் குறித்து நடத்தப்பட்டவை என்ற ஒரு நம்பிக்கை பரவலாக இருந்தது. அவ்வாறு வெற்றி பெற்ற தாக்குதல்கள் பலவற்றின் திகதிகள் ஐந்தாம் இலக்கத்துக்குரியவை என் றும் கருதப்பட்டது. இதைவிட வித்தி யாசமான அதே சமயம் நம்பக் கடினமான ஓர் உதாரணத்தை இங்கே கூறலாம்.

இறுதிக் கட்டப் போர்க்காலத்தில் கிளிநொச்சியில் அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு பொறுப் பாக ஓர் இத்தாலியர் இருந்தார். இவருக்கு தமிழ் நண்பர்கள் உண்டு. இவரும் விரும்பித் தமிழைக் கற்றார். 2007 ஆம் ஆண்டு இவர் தனது தமிழ் ஆசிரியரிடம் கேட்டார், இங்கே யாரா வது நல்ல ஜோதிடர்கள் உண்டா என்று. ஏன் என்று கேட்டபோது,அவர் சொன்னார்,



பல ஆண்டுகளுக்கு முன் தாய்லாந்தில் ஒரு பெண் பௌத்த மதகுருவிடம் எனது கையைக் காட்டினேன். அவர் எனது கையைப் பார்த்து விட்டுச் சொன்னார், தீவாக உள்ள ஒரு நாட்டில் வேறு இன அல்லது வேறு மதப் பெண்ணை திருமணம் செய்யும் வாய்ப்பு உண்டு என்று அது உண்மை தானா என்பதனை மீள உறுதிப்படுத்துவதற்குத் தான் இங்கே யாராவது ஜோதிடர்கள் கிடைப்பார் களா என்று தேடுகிறேன் என்று அந்த இத்தாலியர் சொன்னார்.

அவருடைய நண்பர் அப்பொழுது புதுக்குடியிருப்பில் பிரபல்யமாக இரு ந்த ஒரு ஜோதிடரிடம் அவரை அழைத்துச் சென்றார். அந்த ஜோதிடர் பல ஆண்டுகளுக்கு முன் பௌத்த பிக்குணி சொன்னதை மீள உறுதிப் படுத்தினார். அதன்பின் அவரை அழை த்துச் சென்ற ஆசிரியரிடம் கேட்டார் நீங்கள் எதையாவது கேளுங்கள் என்று. ஆசிரியர் தனிப்பட்ட முறையில் எதை யும் (18ம் பக்கம் பார்க்க)

# பிறிக்ஸ்:- தவறிப் போன வாய்ப்புகள்!




செப்டெம்பர் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் புதுடில்லியில் 18ஆவது பிறிக்ஸ் (BRICS) உச்சிமாநாடு இடம் பெற்றது.

இந்த மாநாட்டில் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், தென் ஆபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோச, இந்தியப் பிரதமர் மோடி உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டிற்கு இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்படாதமைஇராஜதந்திர மற்றும் அரசியல் வட்டாரங்களில் பேசபொருளாக மாறியுள்ளது.

அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் இரண்டாவது ஆண்டை கொண்டாடுகின்ற சூழலில் இந்தியாவில் நடந்த உலகின் மிக முக்கியமான உச்சி மாநாட்டிற்கு, இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்படாதமை, பரவலான விமர்சனங்களுக்கு வழி வகுத்துள்ளது.

இது அரசாங்கத்தின் இராஜதந்திர தோல்விகளில் ஒன்றாக, வெளியுறவுக் கொள்கையின் இயலாமையாக குற்றம் சாட்டப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் புறக்கணிக்கத்தக்கவை அல்ல.

2024ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ரஷ்யாவில் நடந்த பிறிக்ஸ் மாநாட்டின் போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அந்த அழைப்பை தனிப்பட்ட முறையில் அனுப்பியிருந்தார்.

அநுரகுமார திசாநாயக்க பதவியேற்று ஒரு மாதமே ஆகியிருந்த சூழலில், அந்த அழைப்பை ஏற்று ரஷ்யாவுக்குச் செல்லவில்லை. வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்தை தனது பிரதிநிதியாக அனுப்பியிருந்தார்.

புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்று மிக குறுகிய காலத்தில் உலகின் சக்திவாய்ந்த நாடுகளின் தலைவர்களை ஒரே இடத்தில் சந்திக்கும் வாய்ப்பு அநுரவுக்கு கிட்டாமல் போனது.

அந்த வாய்ப்பை பயன்படுத்தியிருந்தால் புட்டின், ஸீ ஜின்பிங், நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்களை சந்தித்திருக்கலாம். அதை விட பிறிக்ஸ் அமைப்பில் இணைந்து கொள்வதற்கான கதவையும் இலகுவாகத் திறந்திருக்கலாம்.

ரஷ்ய ஜனாதிபதியின் அழைப்பை ஜனாதிபதி அநுர ஏற்றுக் கொள்ளாமல் தவிர்த்தமை மொஸ்கோவுக்கு எரிச்சலூட்டும் இராஜதந்திரமாக அமைந்தது. புதிய அரசாங்கம் அமெரிக்கா, இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளாத இராஜதந்திரத்தை முன்னெடுக்க முயன்றது.

அதனால் தான் ரஷ்யாவின் அழைப்பை அநுர ஏற்காமல் தவிர்த்தார். அதன் விளைவைத் தான் இன்று வரை இலங்கை அனுபவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

2024 ஒக்டோபர் மாதம், பிறிக்ஸ் அமைப்பில் இணைந்து கொள்ள இலங்கை விண்ணப்பித்தது.

அதற்குப் பின்னர் இரண்டு மாநாடுகள் நடந்து விட்ட போதும் இலங்கையை அதில் இணைக்கும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. அது மாத்திரமன்றி, இந்த முறை இலங்கைக்கு அழைப்புக் கூட அனுப்பப்படவில்லை.

இலங்கையின் அயல் நாடான இந்தியாவில் இந்த மாநாடு நடந்திருக்கிறது. பிறிக்ஸ் அமைப்பில் இணைந்து கொள்ள, இந்தியா உதவ வேண்டும் என இராஜதந்திர ரீதியான கோரிக்கையை கொழும்பு முன்னர் விடுத்திருந்தது அப்படியிருந்தும் புதுடில்லியில் இருந்து அழைப்பு விடுக்கப்படாமல் போனது தான், இராஜதந்திர மட்டங்களில் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. 2016இல் இந்தியாவில் நடந்த பிறிக்ஸ் மாநாட்டிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அழைத்திருந்தது இந்தியா.

ஆனால், இந்த முறை அநுரகுமார திசாநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்படாமை, பிறிக்ஸ் மற்றும் இந்தியாவுடனான அரசாங்கத்தின் உறவுகளை கேள்விக்குட்படுத்த வைத்திருக்கிறது.

இலங்கையின் அண்டை நாடுகளான மலேசியா, தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடுகள் பிறிக்ஸ் அமைப்பில் இணைவதற்குத் தீவிரமான இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டு முன்னேறி வரும் வேளையில், இலங்கை இந்த மாபெரும் பொருளாதார மற்றும் இராஜதந்திர வாய்ப்பைத் தவறவிட்டுள்ளது. பிறிக்ஸ் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் பொறுப்பு, அந்த மாநாட்டை நடத்தும் நாட்டிடமே இருக்கும்.

பிறிக்ஸ் அமைப்பின் உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கு, மாநாட்டை நடத்தும் நாடு முறையான அழைப்பை அனுப்பும். இது ஒரு வழக்கமான இராஜதந்திர நடைமுறையாகும்

உறுப்பு நாடுகள் தவிர, பிற நாடுகளையோ அல்லது சர்வதேச அமைப்புகளையோ சிறப்பு விருந்தினர்களாக மாநாட்டிற்கு அழைப்பதற்கு சில வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

பிறிக்ஸ் அமைப்பில் எந்தவொரு புதிய முடிவும், பங்காளிகளை தேர்ந்தெடுப்பதும் அனைத்து உறுப்பு நாடுகளின் ஒருமனதான சம்மதத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. மாநாட்டை நடத்தும் தலைமை நாடு, பிறிக்ஸ் அமைப்பின் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு தனது பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளையோ அல்லது முக்கிய சர்வதேச அமைப்புகளின் தலைவர்களையோ சிறப்பு விருந்தினர்களாக அழைக்க அதிகாரம் பெற்றுள்ளது. புதுடில்லியில் நடந்த பிறிக்ஸ் மாநாட்டிற்கு இலங்கைக்கு இந்தியா முறையான அழைப்பை விடுக்காததற்கு இராஜதந்திர மற்றும் அரசியல் காரணங்கள் இருந்ததான கருத்து நிலவுகிறது.

2024ஆம் ஆண்டில் பிறிக்ஸ் அமைப்பில் இணைய விண்ணப்பித்திருந்த இலங்கை, அதற்குப் பின்னர், பிறிக்ஸ் கூட்டணிக்கான தீவிரமான இராஜதந்திர நகர்வுகளையோ அல்லது முறையான தொடர் நடவடிக்கைகளையோ மேற்கொள்ளவில்லை.

இந்த செயலற்றதன்மையே இந்தியா போன்ற உறுப்பு நாடுகள் இலங்கையை முக்கிய பட்டியலில் சேர்க்காததற்கு முதன்மைக் காரணமாகக் கருதப்படுகிறது.

இலங்கையில் புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர், இந்திய அரசுடன் ஏற்கெனவே எட்டப்பட்ட பல முக்கியமான இரு தரப்புத் திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு ஒப்பந்தங்களை செயல்படுத்துவதில் தேக்க நிலை நீடித்து வருகிறது.

இந்த மந்தநிலை, புதுடில்லிக்கு இராஜதந்திர ரீதியாக அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

அதேவேளை, இம்முறை மாநாட்டை நடத்திய இந்தியா, தனது பிராந்திய திட்டத்தின் கீழ் தனிப்பட்ட நாடுகளை விட பிம்ஸ்டெக் போன்ற பிராந்திய கூட்டமைப்புகளின் தலைமைகளுக்கு முக்கியத்துவம் அளித்தது.

இதனால் மலேசியா, தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடுகள் தங்களின் தீவிரமான பிரசார முயற்சிகள் மூலம் கூட்டாளிகளாக முன்னேறிய போதும், இலங்கை முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறவில்லை.

இந்தியா நினைத்திருந்தால், பிறிக்ஸ் மாநாட்டை நடத்தும் தலைமை நாடு என்ற தார்மீக அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கையை ஒரு சிறப்பு விருந்தினராக அழைத்திருக்க முடியும்.

2016இல் கோவாவில் நடைபெற்ற பிறிக்ஸ் மாநாட்டின் போது, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இந்தியா சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தது.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின்படி, அண்டை நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவதே அதன் முதன்மை இலக்காகும். அந்த வகையில், பிறிக்ஸ் அமைப்பில் இணைய அதிகாரப்பூர்வமாக விண்ணப்பித்திருந்த இலங்கைக்கு, ஒரு நட்பு நாடாக ஆதரவளித்து இந்தியா இந்த மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திருக்கலாம். ஆனால், இந்தியா அழைக்கவில்லை.

பிறிக்ஸ் அமைப்பில் உள்ள அனைத்து உறுப்பு நாடுகளின் ஒருமனதான சம்மதம் தேவைப்பட்டதே இதற்குக் காரணமாக சொல்லப்படுகிறது.

பிறிக்ஸ் அமைப்பின் புதிய பங்காளி நாடுகளை தேர்ந்தெடுப்பதற்கான நெறிமுறைகள் மிகவும் கடுமையானவை. இலங்கை கடந்த காலங்களில் காட்டிய இராஜதந்திர மந்தநிலை மற்றும் விண்ணப்பித்த பின்னர், புதுடில்லியுடன் போதுமான இராஜதந்திர தொடர்பாடல்களைச் செய்யத் தவறியது போன்ற காரணங்களால், இறுதிப் பட்டியலில் இலங்கையைச் சேர்ப்பதற்கான வலுவான காரணம் இந்தியாவிடம் இல்லாமல் போனது.

இராஜதந்திர ரீதியாக இலங்கையை அழைக்க இந்தியாவுக்கு முழு உரிமை இருந்த போதும், இரு நாடுகளுக்கும் இடையே நிலவிய சில அரசியல் தேக்கநிலைகள் மற்றும் பிறிக்ஸ் அமைப்பின் கடுமையான கூட்டு விதிகள் காரணமாக அந்த வாய்ப்பு அது பயன்படுத்தவில்லை.

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ரஷ்யாவில் நடந்த பிறிக்ஸ் மாநாட்டில் ஜனாதிபதி அநுர பங்கேற்காததற்கும், அதன் பங்காளி நாடு என்ற தகுதியைப் பெறத் தவறியதற்கும் அமெரிக்க சார்பு அல்லது அமெரிக்காவின் அழுத்தம் ஒரு மறைமுகக் காரணியாக இருப்பதான கருத்தும் உள்ளது.

இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றுமதி சந்தையின் 23 வீதம் அமெரிக்காவிடம் உள்ளது. ஆடைத் தொழில் துறை அமெரிக்காவின் வரிச் சலுகைகளை பெரிதும் நம்பியுள்ளது.

அமெரிக்க டொலரின் ஆதிக்கத்திற்கு எதிராகவும், மேற்கத்திய நிதி நிறுவனங்களுக்கு மாற்றாகவும் பிறிக்ஸ் கூட்டமைப்பு செயல்படுவதால், அதில் தீவிரமாக இணைவது, அமெரிக்காவுடனான வர்த்தக உறவைப் பாதிக்கலாம் என்ற அச்சத்தை கொழும்புக்கு ஏற்படுத்தியது.

அமெரிக்காவை அதிருப்திக்குள்ளாக்காமல் இருக்க, பிறிக்ஸ் அமைப்பில் இணைந்த பிற நாடுகளைப் போல இலங்கை உயர்மட்ட அரசியல் இராஜதந்திர அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை.

ஆனால் அமெரிக்காவின் நேரடி அழுத்தங்கள் ஏதும் இலங்கைக்கு இருந்ததாக தெரியவில்லை. இலங்கையே தனக்குத் தானே ஒரு கற்பனைக் கோட்டை வரைந்து கொண்டு அதற்குள் நிற்க முனைந்தது.

பிறிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க முடியாமல் போனதாலும், பங்காளி நாடு அந்தஸ்தைப் பெறத் தவறியதாலும் இலங்கைக்கு பொருளாதார மற்றும் இராஜதந்திர ரீதியாக சில முக்கிய இழப்புகள் மற்றும் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வரும் இலங்கைக்கு உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நீண்டகால வளர்ச்சித் திட்டங்களுக்கு கணிசமான நிதி தேவைப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தை மட்டும் நம்பியிருக்காமல், பிறிக்ஸ் அமைப்பின் புதிய அபிவிருத்தி வங்கியின் மூலம் எளிய நிபந்தனைகளுடன் கூடிய மாற்று நிதியுதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்பை இலங்கை தவறவிட்டுள்ளது. உலகப் பொருளாதாரத்தின் மிக வேகமாக வளர்ந்து வரும் சந்தைகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா மற்றும் ஏனைய புதிய உறுப்பு நாடுகளுடன் நேரடி வர்த்தக உறவுகள், ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒரு தளத்தை இலங்கை இழந்துள்ளது.(18ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தடை நீங்கும். மனசோர்வு அகலும். மன அமைதி பாதிக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவர். அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்களால் வீண் டென்ஷன் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி செயல்படுவது நன்மை தரும்.




ரிஸபராசி அன்பர்களே! மனத்துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் பேசும்போது நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. புரட்டாதி சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு தீபம் ஏற்றி வழிபடவும்.




மிதுனராசி அன்பர்களே! முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடியும். வெளியூர் பயணங்கள் உண்டாகும். அதனால் நன்மையும் ஏற்படும். வழக்குகளில் இருந்து வந்த சோதனைகள் மாறும். சொத்து சம்பந்தமான விஷயங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். நண்பர்கள் பல விதங்களிலும் ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் குறையும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.




கடகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும்.தொழில் வியாபாரத்தில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவி பிரச்னைகளை நிதானமாக பேசுவது நல்லது.




சிம்மராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கை யாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர்.




சிம்மராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். சிறப்பான வாரமாகும்.




துலாம்ராசி அன்பர்களே! நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பணதேவையை சரி கட்ட நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான வேலைகளில் அலைச்சல் இருக்கும். மேலிடத்திலிருந்து கனிவான உபசரிப்பு கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே பழைய விஷயங்களை பேசாமல் இருந்தால் நன்று




விருச்சிகராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சிக்காக பணம் செலவு செய்ய தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். வாக்கு வன்மை அதிகரிக்கும். வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.






தனுசுராசி அன்பர்களே! எந்த ஒரு காரியம் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பீர்கள். வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழில் தொடர்பான விவகாரங்களில் இருந்து வந்த வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் அனுகூலம் ஏற்படும். புதிய வேலையில் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு வரும்.




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியம் கைகூடும். கடன் விவகாரங்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். வழக்குகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கலாம். மேலதிகாரிகளால் உத்யோகஸ்தர்களுக்கு நன்மை உண்டாகும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பாராத சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்ப்புகள் நீங்கும். கவலையை விட்டு விட்டு தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம். சக ஊழியர்களிடம் பேசும் போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.




மீனராசி அன்பர்களே! வரவை போலவே செலவும் இருக்கும். பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பர். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## அரசியலில் இருக்கும் இடம் அறிந்தால் தானே

(13ம் பக்கத் தொடர்ச்சி) துரோகி என்று கூற முற்படும் போதெல்லாம், சிந்திக்கும் தரப்பு அமைதியாக இருக்க முடியுமா? ஏனெனில் இப்படியான கதைகளால் எத்தனை அறிவுஜீவிகளை, பெறுமதி யான மனிதர்களை நாங்கள் இழந்து போயிருக்கின்றோம். இவ்வாறானவர் களை கண்டிக்க வேண்டிய பொறுப்பு ள்ள சமூகமாக யார் இருக்க வேண்டும்? புத்திஜீவிகள் தானே உண்மையிலேயே நீங்கள் புத்திஜீவிகள் என்றால், ஆனால் அப்படியானவர்களை அரிதாகத் தானே காண முடிகின்றது. இன்றுள்ள சூழலில் எதனடிப்படையில் பயணிக்க முடியும் என்னும் கேள்வி வருகின்ற போது, புத்திஜீவிகள் என்போர் யதார்த்தத்தின் பக்கமாக அல்லவா அணிசேர வேண்டும். ஆனால் அப்படி யாரும் வெளிப்படவில்லையே ஏன்? அப்படியானால் நீங்கள் முன்னர் செய்த அதே தவறைத் தானே, இப்போதும் செய்து கொண்டிருக்கின்றீர்கள். முன்னர் அமைதியாக இருந்து, விடுதலைப் புலிகளை ஆதரிப்பதாகக் கூறி, அவர்களை அழிவுப் பாதையில் வீழ்த்தினீர்கள். இப்போதும் போக முடியாத ஊருக்கு வழி சொல்லி, மீதமிருக்கும் சமூக த்தை கையறுநிலைக்குத் தள்ளுகின்றீர்கள்.

அரசியல் என்பது வெறும் இலட்சிய வாதமல்ல வெறும் இலட்சிய வாதங்கள் ஏட்டுச் சுரைக்காய் போன்றவை அது ஒரு போதும் கறிக்கு உதவாது. அரசியல் என்பது வாய்ப்புக்களை கையாளும் ஒரு கலை. வாய்ப்புக்கள் இருக்கின்ற போது அதன் அளவிற்கு ஏற்ப அதனை கையாள வேண்டும். இல்லா விட்டால் இருப்பதைக் கொண்டு இயங்கிக் கொண்டு, புதிய வாய்ப்புக்களுக்காக காத்திருக்க வேண்டும். அரசியல் என்பது மிகவும் துல்லியமான ஒரு நேர்கோட்டுப் பயணம் அல்ல. அது ஏற்ற இறக்கங்கள் கொண்டது. ஏற்றம் சில வேளை என்றால் இறக்கம் சில வேளை. ஏற்றம் வருகின்ற போது ஏறிச் செல்வதற்கும், இறக்கம் வருகின்ற போது, முற்றிலுமாக சறுக்கி வீழ்ந்துவிடாத வகையில், எங்களை தற்காத்துக் கொள்வதற்கும்தான், ஒரு மக்கள் கூட்டத்திற்கு, அரசியல் தலைமை என்பது தேவை. அவ்வாறான தலைமைத்துவத்தை கொடுக்கக் கூடியவர்களை தமிழர்கள் அடையாளம் கண்டால் மட்டும்தான் அடுத்தது என்ன என்னும் கேள்விக்கு பதில் கிடைக்கும். ஒரு வேளை அடையாளம் காணாது போனால், கேள்வி மட்டுமே மிஞ்சும்.

## ஒரு தூக்குத் தண்டனையும் .....

(15ம் பக்கத் தொடர்ச்சி) சமூக ஊடக வலைத்தளச் சூழலானது ஒருபுறம் குரலற்ற சாதாரண மக்களுக்கு மேடையை அமைத்துக் கொடுக்கிறது. அதனால் அது அதிகம் ஜனநாயகமானது. அதேசமயம் இன்னொரு புறம், அது கும்பல் மனோநிலையைப் பிரதிபலிக்கின்றது. சாதாரணமானவர்கள் பெரும்பாலும் கும்பல் மனோநிலையோடு காணப்படுவார்கள். அது இனம் சார்ந்ததாக இருக்கலாம். மதம் சார்ந்ததாக இருக்கலாம். பால் பிரிவைச் சார்ந்ததாக இருக்கலாம். சாதி, ஊர், பிராந்தியம் சார்ந்ததாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அது இன்னொரு இனத்துக்கு அல்லது மதத்துக்கு அல்லது மொழிக்கு அல்லது ஊருக்கு அல்லது இன்ன பிறவுக்கு எதிரானதாக அமையும் போது அங்கே முரண்பாடுகள் தூண்டி விடப்படுகின்றன.

மியான்மரில், ரோஹியங்கா முஸ்லிம்களுக்கு எதிரான இன அழிப்பில் முகநூல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியது. ஐநாவின் வெறுப்புப் பேச்சுக்கு எதிரான சிறப்பு நிபுணர் ரோகிங்கா முஸ்லிம்களுக்கு எதிரான இன அழிப்பில் முகநூலுக்கும் பங்கு உண்டு என்ற பொருள்படக் குற்றச்சாட்டியிருந்தார். முகநூலில் அனோஜன் எழுதியது சாமானிய மனோ நிலையில் இருந்து எழுதப்பட்ட ஒரு வெறுப்புக் குறிப்பு. ஏற்கனவே எழுதப்பட்ட வெறுப்புக் குறிப்பு ஒன்றின் எதிர்வினை அது. அனோஜன் எழுதிய வெறுப்புக் குறிப்புக்கு அவர் மன்னிப்புக் கேட்டு விட்டார். அங்கே அவர் பொறுப்புக் கூறத் தொடங்குகிறார். அதற்குப் பிறகும் அவருடைய தலையை வெட்ட வேண்டுமா? சாதாரண மனிதர்கள் வெறுப்பை வெறுப்பினால் தான் எதிர் கொள்வார்கள். மனிதர்களுள் மகத்தான வர்கள் வெறுப்பை அன்பினால், மன்னிப்பால் எதிர்கொள்வார்கள். மனிதர்கள் மன்னிக் கத் தவறியவற்றை இறை தூதர்கள் மன்னிப்பார்கள். மனிதகுல வரலாற்றில் மன்னிப்புத் தான் இறை தூதர்களின், அவதாரங்களின், சமய ஸ்தாபகர்களின் மகிமையைப் பிரதிபலித்திருக்கிறது. தண்டனை அல்ல.

## பிறிக்ஸ்:- தவறிப் போன வாய்ப்புகள்!

(17ம் பக்கத் தொடர்ச்சி) அதிகாரப் பூர்வ உச்சி மாநாட்டிற்கு அப்பால், தலைவர்களை நேரில் சந்தித்து இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் மூலம் நாட்டின் கடன் மறுசீரமைப்பு மற்றும் அவசரத் தேவைகளுக்கு ஆதரவு கோரும் இராஜதந்திர வாய்ப்பு இலங்கைக்குக் கிடைக்காமல் போயுள்ளது. இருப்பினும், இலங்கை யின் விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படவில்லை. வருங்காலத்தில் முறையான இராஜதந்திர நகர்வுகள் மற்றும் உயர் மட்டத் தொடர்புகளை சரியாக கையாண்டால் மாத்திரமே, இந்த இழப்புகளைச் சரி செய்ய முடியும்.

## மழைக்காக மந்திர நீரைத் தெளிக்கும்...

(16ம் பக்கத் தொடர்ச்சி) கேட்பதற்கு மறுத்து விட்டார். எனினும், ஜோதிடர் வற்புறுத்திக் கேட்டார் எதையாவது கேளுங்கள் என்று. முடிவில் ஆசிரியர் இப்பொழுது நடக்கும் யுத்தத்தின் எதிர்காலத்தைப் பற்றிக் கூறுங்கள் என்று பொதுவாகக் கேட்டார். அதற்கு அந்த ஜோதிடர் சொன்னார், 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஐந்தாம் திகதியோடு வன்னிப் பெருநிலப் பரப்பில் உள்ள பெரும் பாலானவர்கள் இடம்பெயர வேண்டி வரும். அந்த ஆண்டு மே மாதம் நடுப் பகுதியோடு போர் முடிவுக்கு வந்துவிடும். அதே ஆண்டு ஐப்பசி மாதம் எல்லாமே முடிவுக்கு வந்து விடும் என்று.2009 நடுப்பகுதியளவில் போர் முடிவுக்கு வரும் என்பதனை அந்த ஜோதிடர் 2007ஆம் ஆண்டிலேயே கூறினார். 2009 ஐப்பசி மாதம் என்று அவர் எதைக் கருதினாரோ தெரியவில்லை. ஆனால் அது மிகத்துல்லியமான கணிப்பு. அந்த ஆசிரியரும் வெள்ளைக்காரரும் அதை இப் பொழுதும் வியப்போடு நினைவு கூர்வார்கள். ஜோதிடத்தை நம்புகிறவர்களுக்கு இது ஆர்வமூட்டலாம். அரசியலை ஜோதிடத்துக்கூடாக அணுக விரும்பாதவர்கள் இதை நிராகரிக்கலாம். ஆனால் மந்திரித்த நீரைத் தெளித்தால் மழை வரும் என்று நம்பும் மக்கள் அதிகளவு வாழும் ஒரு நாட்டில் வஜ்ராயுதத்தைக் கையில் வைத்திருந்தால் பகைவர் தன்னை நெருங்க முடியாது என்று தலைவர்கள் நம்பும் ஒரு நாட்டில் ஜோதிடத்துக்கும் ஜோதிடர்களுக்கும் எப்பொழுதும் மதிப்பு இருக்கும். முக்கியத்துவமும் இருக்கும். சில ஜோதிடர்கள் அரச போகத்தை அனுபவிக்கும் அளவுக்கு தலைவர்களுக்குக் கிட்டவாக இருப்பார்கள். அதனால் தான் சில ஆண்டுகளுக்கு முன் தென்னிலங்கையில் நடந்த நடந்த தன்னெழுச்சிப் போராட்டங்களின் போது தலைவர்களைத் துரத்திய சிங்கள மக்கள், அனுராதபுரத்தில் ராஜபக்சங்களுக்கு நெருக்கமானவர் என்று நம்பப்பட்ட ஞானக்கா என்ற ஜோதிடரையும் துரத்தினார்கள்.

# திலீபன் நினைவிடம்:- 1988 முதல் 2026 வரை தொடரும் ஒரு வரலாறு

1987 ஜீலை மாதம் கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் சூழலில், இந்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்திய ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து, இராசையா பார்த்திபன் எனும் இயற்பெயரைக் கொண்ட திலீபன் 1987 செப்டெம்பர் 15ஆம் திகதி நல்லூரில் உணவு மற்றும் நீர் அருந்தாத உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். பன்னிரண்டு நாட்கள் நீடித்த அந்தப் போராட்டத்தின் முடிவில் அவர் செப்டெம்பர் 26ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது மரணத்துக்குப் பின்னர், உண்ணாவிரதம் நடைபெற்ற நல்லூர் பகுதியில் நினைவிடம் ஒன்று அமைக்கப்பட்டது. பல வரலாற்றுப் பதிவுகள் இதனை 1988இல் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி எனக் குறிப்பிடுகின்றன. ஆனால் அப்போது யாழ்ப்பாண மாநகர ஆணையாளராக இருந்த சி.வி.கே.சிவஞானம் 2023ஆம் ஆண்டு அளித்த விளக்கத்தில், தனது சொந்த நிதியில் 1988ஆம் ஆண்டு நினைவிடத்தை நிர்மாணிக்க ஆரம்பித்து, 1989ஆம் ஆண்டு அதனை அங்குரார்ப்பணம் செய்ததாக கூறியுள்ளார். 1988 ஆம் ஆண்டில் ஜே ஆரும், 1989 இல் பிரேமதாசவும் ஜனாதிபதிகளாக இருந்துள்ளனர்.

நினைவிடத்தை உருவாக்குவதில் சி.வி.கே. சிவஞானம் முக்கிய பங்கு வகித்ததாக அவரும் பிற பதிவுகளும் கூறுகின்றன. நினைவிடம் அமைக்கப்பட்ட சில நாட்களில் அவர் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகி உயிர் தப்பியதாகவும் சில வாய்மொழி மற்றும் சமூக ஊடகப் பதிவுகளில் கூறப்படுகிறது.

1989இல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட திலீபன் நினைவுத்தூபி

இந்த முதல் நினைவிடம் இன்றையதைப் போன்ற முழு உருவ வெண்கலச் சிலை அல்ல. கிடைக்கக்கூடிய பழைய படங்களும் விளக்கங்களும் காட்டுவது, அது திலீபனின் உருவப் படத்தை உள்ளடக்கிய உயரமான நினைவுத்தூபி அல்லது நினைவுக் கோபுரம் என்பதாகும். 1996ஆம் ஆண்டு அரசுப் படைகள் யாழ்ப்பாணத்தை மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் அந்த நினைவிடம் அழிக்கப்பட்டதாக TamilNet உள்ளிட்ட பல பதிவுகள் கூறுகின்றன. அப்போது நாட்டின் ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இருந்தார்.

2002ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையால் உருவான சமாதானச் சூழலில் நினைவிடத்தை மீளமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. மீளக்கட்டப்பட்ட நினைவிடம் 25 ஆகஸ்ட் 2003 அன்று நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வுக்கு முன்னாள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் தலைமை தாங்கியதாக அக்கால செய்திப் பதிவு குறிப்பிடுகிறது. அப்போது சந்திரிகா குமாரதுங்கவே ஜனாதிபதியாக இருந்தார்.

ஆனால் அந்த நினைவிடம் நீண்ட காலம் சேதமின்றி நிலைக்கவில்லை. மகிந்த ராஜபக்ச 19 நவம்பர் 2005 அன்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், 2006 அக்டோபரில் நினைவிடத்தில் இருந்த திலீபனின் படம் மற்றும் அலங்கார விளக்குகள் சேதப்படுத்தப்பட்டதாகப் பதிவுகள் கூறுகின்றன.

பின்னர் 18 நவம்பர் 2007 அன்று ஊரடங்கு நேரத்தில் வந்ததாகக் கூறப்பட்ட அடையாளம் தெரியாத ஆயுததாரிகள் நினைவிடத்தின் பெரும் பகுதியை இடித்து அழித்தனர். இந்தச் சம்பவத்தைப் பற்றிய அக்காலச் செய்திகளில் தாக்குதலாளர்கள் “unidentified armed men” என்றே குறிப்பிடப்பட்டனர்.



அதன் பின்னரும் எஞ்சியிருந்த தூண்களும் கட்டுமானப் பகுதிகளும் அழிக்கப்பட்டன. மார்ச் 2010இல் எஞ்சியிருந்த முக்கிய நினைவுத்தூண் இடிக்கப்பட்டதாகவும் 2012இல் மேலும் எஞ்சிய பகுதிகள் அழிக்கப்பட்டதாகவும் பதிவுகள் உள்ளன. 2005–2015 வரை மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் பல ஆண்டுகளாக நல்லூரில் முழுமையான நினைவிடம் இல்லாமல் அதன் சிதைவுகளே நினைவுகூரலுக்கான இடமாக பயன்படுத்தப்பட்டன.

2015இல் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் வடக்கு கிழக்கில் நினைவுகூரல் நிகழ்வுகளுக்கான அரசியல் சூழல் ஓரளவு மாறியது. ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டிருந்த பல நினைவுகூரல்கள் 2015க்குப் பின்னர் பொதுவெளியில் அதிகமாக நடைபெறத் தொடங்கியதாக மனித உரிமை மற்றும் கல்வியியல் ஆய்வுகள் பதிவு செய்கின்றன.

தமிழ்த் தேசியக் கட்சிகள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி அமைப்புகள் மற்றும் சிவில் சமூகத்தினர் இந்த நிகழ்வுகளில் தீவிரமாகப் பங்கேற்றனர். ஆனால் இது எல்லா வகையான LTTE தொடர்பான நிகழ்வுகளுக்கும் அரசு வழங்கிய முழுமையான சட்ட அனுமதி என்று பொருள் கொள்ள முடியாது. இதில் தான் இன்றும் முக்கியமான சட்ட வேறுபாடு இருக்கிறது.

போரில் உயிரிழந்தவர்களையோ குடும்ப உறுப்பினர்களையோ அமைதியாக நினைவு கூருவது ஒரு விஷயம் தடைசெய்யப்பட்ட அமைப்பின் கொடி சின்னங்கள் அல்லது பிரச்சார அம்சங்களைப் பயன்படுத்துவது இன்னொரு விஷயம். 2018இல் ஒரு நீதவான் நீதிமன்றத் தீர்ப்பைப் பற்றிய பதிவில், LTTE கொடி, சின்னங்கள் போன்றவற்றுக்கு தடை விதிக்கப்பட்ட போதும், விளக்கேற்றி உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு தடை இல்லை என்ற வேறுபாடு குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2025இல், அமைதியான நினைவுகூரல் நிகழ்வுகள் தொடர்பாக ஐஊஊீசு சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக காவல் துறைக்கு எழுதியிருந்தது. மறுபுறம், அரசாங்கம் LTTE இன்னமும் தடை செய்யப்பட்ட அமைப்பு என்பதால் அதன் சின்னங்கள், சீருடைகள் அல்லது அமைப்பை மகிமைப்படுத்தும் நிகழ்வுகள் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும், ஆனால் போரில் உயிரிழந்த உறவினர்களை நினைவு கூர்வதற்கு தடை இல்லை என்றும் தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளது.

இந்த வரலாற்றுப் பின்னணியில் தான் 2026ஆம் ஆண்டின் புதிய சர்ச்சையைப் பார்க்க வேண்டும்.

15 செப்டெம்பர் 2026 அன்று, முந்தைய நினைவுத்தூபிகளைப் போல அல்லாமல் முதன்முறையாக தெளிவாக ஆவணப்படுத்தப்பட்ட ஒரு முழு உருவ வெண்கலச் சிலை (?) நல்லூர் நினைவிடத்தில் நிறுவப்பட்டது. அமர்ந்த நிலையில் ஒலிவாங்கியுடன் காணப்படும் திலீபனின் உருவச்சிலை இது. 39ஆவது ஆண்டு நினைவு கூரல்கள் செப்டெம்பர் 26ஆம் திகதி நிறைவடைந்த மறுநாள், 27 செப்டெம்பர் 2026 அன்று காவல்துறையினர் அந்தச் சிலையை அகற்றினர்.

காவல்துறை ஊடகப் பேச்சாளரின் விளக்கத்தின்படி கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பவம் தொடர்பான விடயங்கள் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டதாகவும், பொது ஒழுங்கு மற்றும் சட்ட அமுலாக்கம் தொடர்பான தண்டனைச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் சிலை அகற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கு தொடர்பான மேலதிக நீதிமன்ற நடவடிக்கைகளும் உள்ளதால், இந்தச் சம்பவத்தின் இறுதியான சட்டப்பூர்வ நிலையை நீதிமன்ற நடவடிக்கைகள் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

இதனால் திலீபன் நினைவிடத்தின் கதை என்பது ஒரு நினைவுத்தூபி பல தடவைகள் கட்டப்பட்டதும் இடிக்கப்பட்டதும் பற்றிய வரலாறு மட்டும் அல்ல. அது இலங்கையின் கடந்த நாற்பது ஆண்டுகால அரசியல் மாற்றங்கள், போர், சமாதான முயற்சிகள், நினைவுகூரலுக்கான உரிமை, தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கான சட்டக் கட்டுப்பாடுகள் மற்றும் வடக்கு—தெற்கு அரசியல் பார்வைகளுக்கிடையேயான முரண்பாடுகள் ஆகிய அனைத்தும் சந்திக்கும் ஒரு இடமாகவும் மாறியுள்ளது.

1988–89 நினைவுத்தூபி சிவிகே சிவஞானத்தின் சொந்த நிதியில் கட்டப்பட்டது.

1996 அழிப்பு.

2003 மீள்கட்டுமானம் – சிவிகே சிவஞானம் தலைமையில் அங்குரார்ப்பணம்.

2006 சேதப்படுத்தல்.

2007 மீண்டும் அழிப்பு.

2010 மற்றும் 2012 எஞ்சிய பகுதிகளின் அழிப்பு.

2015க்குப் பின்னர் பொதுவெளி நினைவு கூரல்கள் மீண்டும் அதிகரிப்பு.

2026 புதிய வெண்கல உருவச்சிலை பன்னிரண்டு நாட்களுக்குள் காவல் துறையால் அகற்றம்.

ஆகவே இன்றைய சர்ச்சையை தனித்த ஒரு சம்பவமாக மட்டும் பார்க்க முடியாது. நல்லூரில் உள்ள இந்தச் சிறிய இடம் கடந்த நான்கு தசாப்தங்களாக இலங்கையில் இறந்தவர்களை எவ்வாறு நினைவு கூரலாம், நினைவுகூரலுக்கும் அரசியல் மகிமைப்படுத்தலுக்கும் எல்லை எங்கே? என்ற இன்னும் தீராத அரசியல் மற்றும் சட்டக் கேள்வையின் அடையாளமாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.



# வர்ண.ராமேஸ்வரனின் குரல் என்றும் ஓயாது!




ஈழத்து இசை வானில் தனக்கென ஓர் இடத்தைப் பதித்த இசைவேந்தன் வர்ண. இராமேஸ்வரன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு கடந்த செப்டெம்பர் 27ஆம் நாள் கனடா ஸ்காபரோவில் கனடா கந்தசாமி கோவில் அரங்கில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது. அவரது குடும்பத்தினரும், அவரது இசை மாணவர்களும், அவரை நேசித்தவர்களும் ஒன்றிணைந்து நடத்திய இந்நிகழ்வில் அரங்கமே நிறையும் அளவுக்கு மக்கள் கலந்து கொண்டமை, அவர் மக்கள் மனங்களில் எத்துணை ஆழமாகப் பதிந்திருக்கின்றார் என்பதற்கான சான்றாக அமைந்தது.

ஈழத்துத் தமிழ் மண்ணானது இசைக்கு அத்தனையோ சங்கீத வித்துவான்களையும், சங்கீத பூஷணங்களையும், சங்கீத வித்துவ சிரோன்மணிகளையும் ஈன்றெடுத்த மண். அவர்களின் குரல்கள் தமிழிசையின் பெருமையை உலகறியச் செய்தன. ஆனால் அந்த இசை மரபுக்குள் வர்ண. இராமேஸ்வரன் அவர்கள் பயணித்த பாதை தனித்துவமானது. ஏனெனில் அவரது குரலில் வெறுமனே இராகங்கள் ஒலிக்கவில்லை. தூய தமிழ் ஒலித்தது.

அவரது இசையில் வெறுமனே சங்கீத ஓசை நயம் திகழவில்லை தமிழ்த் தேசிய உணர்வு தழைத்தது. அவரது பாடல்களில் வெறுமனே கலை நயம் இருக்கவில்லை. விடுதலை வேட்கையின் நெருப்பும் கனன்றது.

அதனால் தான் வர்ண. இராமேஸ்வரன் அவர்கள் ஒரு பாடகராக மட்டும் பார்க்கப்பட வேண்டியவர் அல்லர். இசையை ஓர் ஆயுதமாகவும், இசையை ஓர் ஊடகமாகவும், இசையை ஓர் இனத்தின் உணர்வுக் குரலாகவும் பயன்படுத்திய ஒப்பற்ற கலைஞர் அவர்.

ஈழத் தமிழரின் துயரமும், தாகமும், தாயகப் பற்றும், தன்மானமும், விடுதலைக் கனவும் அவரது குரல்வழியாக மக்கள் மனங்களுக்குள் சென்று சேர்ந்தன. இசை அரங்குகளில் மட்டுமல்ல. மக்கள் நெஞ்சங்களிலும் அவரது குரல் ஒலித்தது.

அதன் உச்ச அடையாளமாகவே மாவீரர் நினைவு நாளில் அவரது பாடல்கள் ஒலிப்பது அமைந்தது. விடுதலைப் போரில் வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களை நினைவுகூரும் அந்தப் புனிதமான நினைவு நாளில், அவரது குரல் மக்களின் நெஞ்சங்களைத் தொட்டது. மாவீரர்களின் நினைவுகளைச் சுமந்து நிற்கும் பாடல்களோடு வர்ண. இராமேஸ்வரனின் குரலும் ஒன்றாகக் கலந்தது. அதனால் அவர் பாடிய பாடல்கள் வெறும் பாடல்களாக இருக்கவில்லை. அவை நினைவுகளாயின! அவை உணர்வுகளாயின! அவை தாயகத்தின் குரலாயின! அவை ஒரு தலை முறையின் உள்ளக் குமுறலாகின.

ஒரு கலைஞனின் வாழ்வில் இதைவிடப் பெரிய அங்கீகாரம் வேறென்ன இருக்க முடியும்? ஒருவர் மறைந்த பின்னரும் அவரது குரல் காலம் கடந்து ஒலித்துக் கொண்டிருந்தால் அவர் உடலால் மட்டுமே மறைந்தவர் மக்கள் நினைவிலிருந்து மறைந்தவர் அல்லர். வர்ண. இராமேஸ்வரனும் அத்தகையவர் தான்.

தமிழ் இனத்தின் வரலாற்றோடும், அதன் வலியோடும், அதன் கனவுகளோடும் பின்னிப் பிணைந்த வர்ண ராமேஸ்வரனது குரல் காலத்தால் அழிக்கப்படுவதில்லை. மாவீரர்களை நினைவுகூரும் நினைவுகள் இருக்கும் வரையில் தமிழ்த்தேசிய உணர்வுகள் உயிரோடு இருக்கும் வரையில், வர்ண. இராமேஸ்வரனின் குரலும் தமிழர் நெஞ்சங்களில் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. அவர் விட்டுச் சென்ற இசை, அவரை அறிந்தவர்களின் நினைவாக மட்டும் இல்லாமல், ஒரு காலத்தின் உணர்வுப் பதிவாகவும் நிலைத்து நிற்கின்றது. கனடாவில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வில் அரங்கத்தில் மக்கள் கூடியிருந்த காட்சி, வர்ண. இராமேஸ்வரன் அவர்களுக்கு மக்கள் வழங்கிய உண்மையான மரியாதையின் வெளிப்பாடாகும்.



குடும்பத்தினர், மாணவர்கள், இசைத் துறையினர், அவரை நேசித்தவர்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து அவரை நினைவு கூர்ந்திருந்தாலும் குறிப்பாக அவரது மாணவர்கள் – அவர் விதைத்த இசை விதைகள் இன்னும் பல உள்ளங்களில் முளைத்துக் கொண்டிருக்கின்றன என்பதைச் சான்றாகி நிற்கின்றது. அதுவே ஒரு உண்மையான இசைக் கலைஞனுக்குக் கிடைக்கும் அழியாத வாழ்வு. இசைவேந்தன் வர்ண. இராமேஸ்வரன் அவர்களின் நினைவு என்றும் நிலைக்கட்டும்!

அன்புடன்

T.K.பரமேஸ்வரன் – ஆசிரியர் ஈழநாடு

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# இலங்கையராக இருத்தலும் இலங்கையராக உணர்தலும் ஒன்றாகுமா?

இலங்கைப் பெற்றோருக்குப் பிறந்த கனடியக் குடிமகளும் கலைஞருமான மைத்திரேயி ராமகிருஷ்ணனின், தான் யார் அல்லது தனது அடையாளம் எது என்ற அவரது வெளிப்பாடு இன்று சமூக ஊடகங்களில் சூடான விவாதப் பொருளாக மாறியுள்ளதைக் காணமுடிகிறது.

நான் கனடியக் குடிமகள், அதேநேரம் தமிழீழப் பெண்ணாக உணர்கிறேன், எனது பெற்றோரின் பாரம்பரியம், பண்பாட்டை நேசிக்கிறேன் என்ற அவரது கூற்றில் வெளிப்பட்ட தமிழீழப் பெண்ணென்ற அவரது இயல்பான உணர்வே இன்று பல சிங்களவர்களின் எதிர்மறையான விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கும் உள்ளாகி வருவதுடன் அவர் மீது தனிப்பட்ட வகையில் தமது வன்மங்களை கொட்டுவதற்கும் வழி வகுத்துள்ளது.

இதுபோன்ற பதிவுகளினூடாக இவர்கள் அனைவரும் சொல்லவரும் விடயம் என்னவெனில் மைத்திரேயி மட்டுமன்றி அவர் போல உலக அரங்கில் பிரகாசிக்கும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட எவரும் தங்களின் தனி இன அடையாளங்களை விடுத்து தங்களை இலங்கையராகவே அடையாளப்படுத்த வேண்டும் என்பதாகும். இது அவர்களின் பணிவான வேண்டுகோளாகவன்றி ஒருவகையில் மேலான கட்டளை போலவே தென்படுகிறது.

உண்மையில் மைத்திரேயி போன்றவர்கள் மட்டும் தான் தம்மை இலங்கையராக உணரவில்லையா? அல்லது அதேபோல இலங்கைத் தமிழர்கள், அவர்கள் உள்நாட்டில் இருந்தாலென்ன, புலம் பெயர்ந்திருந்தாலென்ன தம்மை இலங்கையர்களாக உணர்வதில்லையா?

அதாவது இலங்கை எமது நாடு, இங்குள்ள அரசாங்கம் எமது அரசாங்கம் என தமிழ் மக்கள் பொதுவில் கருதுவதில்லையா? இல்லையெனில், இலங்கையராக இருந்தும் அவர்கள் ஏன் அவ்வாறு கருதுவதில்லை? என்பது போன்ற பல கேள்விகள் எழுவது இயல்பானதே. இந்த கேள்விகளுக்கான விடைகளைத் தேடுவதற்கு முதலில் 'இலங்கையராக இருத்தல்' 'இலங்கையராக உணர்தல்' என்ற இரண்டும் ஒன்றானவையா அல்லது வேறானவையா என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் இவ்விரு எண்ணக் கருக்களும் வேறானவையாகும். இலங்கையராக இருத்தல் (அல்லது ஒரு நாட்டின் குடிமகனாக இருத்தல்) என்பது சட்டம் மற்றும் அதற்கமைந்த ஆவணங்களுடன் தொடர்புபட்ட புறநிலை சார்ந்ததொரு விடயம். குடிமகன் என்ற வகையில் அவனுக்கான: அவளுக்கான உரிமைகள் மற்றும் கடமைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. ஆனால் இலங்கையராக (அல்லது குறித்ததொரு நாட்டினராக) உணர்தல் என்பது சட்டத்திற்கு அப்பாற்பட்ட அகநிலை சார்ந்ததொன்று. எனது நாடு, எனது மக்கள் என்ற நாட்டின்மீதான பற்று, நாட்டின் பண்பாடு மற்றும் சாதனைகளையிட்டு பெருமை கொள்ளுதல், அபோல நாட்டுக்கு ஏற்படும் பாதிப்பு மற்றும் தோல்விகளின் போது கவலை கொள்ளுதல், நாட்டுக்காக வாழ்தல் போன்ற உள்ளார்ந்த மனப்பூர்வமானதொரு உணர்வுநிலையே இலங்கையராக உணர்தல் ஆகும்.

இலங்கைக் குடியுரிமைக்கான தகுதி கொண்ட அனைவரும் இலங்கையராக இருக்க முடியும். ஆனால் அவ்வனைவரும் தம்மை இலங்கையராக உணர்வார்களென எதிர்பார்க்க முடியாது. மாறாக இலங்கையராக இருக்காத ஒருவர் கூட இலங்கையராக உணரும் நிலையில் இருக்கக்கூடும். இந்த வரையறைகளின் அடிப்படையில் நோக்கும் போது இலங்கைத் தமிழர்களில் மட்டுமன்றி இலங்கை குடியுரிமை பெற்ற தமிழர்களில்கூட எத்தனைபேர் தம்மை இலங்கையராக உணர்கிறார்கள் என்பது கேள்விக்குரியதொன்றாகும். புறநடைகள் ஒரு போதும் சமூக விதிகளாக்க் கொள்ளப்படுவதில்லை. சிங்களவர்கள் தம்மை இலங்கையர் என்று சொல்வது போல தமிழர்கள் தம்மை இலங்கையர் என்று சொல்வதற்குப் பதிலாக இலங்கைத் தமிழர் என்று சொல்வதற்கே முன்னுரிமை அளிக்கின்றனர்.

சிங்களவர் இலங்கையர் என்றவகையில் தமது மொழி, தமது கலாச்சாரம், சாதனைகள் எனபவை தொடர்பில் பெருமை கொள்வது போல இங்குள்ள ஏனைய இனங்களின் மொழி ,கலாச்சாரம், சாதனைகளை இலங்கையரது என்றெண்ணி பெருமை கொள்வது அரிது. அதே போலவே தமிழர்களும் சிங்களவர்களின் பெருமைகளை இலங்கையராக தமது பெருமைகளாகக் கொண்டாடுவது குறைவு. மறுபுறத்தில் தமிழர்களின் தோல்விகள் சிங்களவர்க்கு மகிழச்சியளிக்கின்றன. சிங்களவர்களின் தோல்விகள் தமிழர்க்கு மகிழ்ச்சியளிக்கின்றன.

இங்குள்ள அனைவரும் இலங்கையராகத் தம்மை உணர வேண்டும் எனவிரும்பும் பெரும்பாலான சிங்களவர்கள் இலங்கையின் பன்மைத்துவத்தையோ அன்றி ஏனைய இனங்களும் தம்மைப்போன்று உரிமைக்குரியவர் என்பதையோ ஒருபோதும் மனதார விரும்பியதில்லை. அவ்வினங்களின் வரலாற்று எச்சங்களும் இலங்கையுடையது தன் என எண்ணியதில்லை.

பொலன்றுவை, அனுராதபுரம் உட்பட நாட்டின் எல்லாத் திசைகளிலும் விரவியிருந்த இருந்த தமிழ் சைவப் பண்பாடு எச்சங்களின் இன்றைய நிலை இதற்குச் சான்றாகும். தமிழர்களும் இலங்கையர்கள் என்று எண்ணியிருந்தால் சிங்களம் மட்டும் சட்டம் எவ்வாறு உருவாகியிருக்க முடியும்? தமிழர்களும் இலங்கையர் தான் என்றால் அவர்களின் வீட்டுக் கோடியில் யாருக்காக விகாரைகள் கட்டப்படுகின்றன? தாமும் இலங்கையர் தான் என்ற உணர்வு தமிழர்க்கு ஏற்பட்டிருந்தால் அவ்விகாரைகளை ஏன் அவர்கள் எதிர்க்க வேண்டும்? மற்றவர்களும் இலங்கையர் தான் என்பதை ஏற்கமுடியாத ஒருவனுக்கு அவர்கள் இலங்கையராகத் தம்மை உணரவில்லை அல்லது வெளிப்படுத்தவில்லை எனக் குற்றஞ்சாட்டும் தகுதி உள்ளதா?

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தின் பிற்கூறிலிருந்து இலங்கையின் அரசியல்,பொருளாதார, சமூக வரலாற்றை மதிப்பிடும் ஒருவர் இலங்கையராகத் தம்மை எண்ணியிருந்த தமிழ்மக்களின் உணர்வு எவ்வாறு படிப் படியாக சிதைக்கப்பட்டது என்ற உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான நிலைப்பாடு இருந்த போது இந்நாட்டில் அனைத்து இன மக்களும் இலங்கையர்களாகவே தம்மை உணர்ந்திருந்தனர். ஆனால் நாட்டின் ஆட்சி நிர்வாகம் பிரித்தானியர்களின் கைகளிலிருந்து படிப்படிப் படியாக உள்நாட்டவர்க்கு மாற்றுவதற்கான அரசியல் நிர்வாகச் செயல்முறை எப்போது தொடங்கியதோ அப்போதிருந்தே தமிழ்மக்களின் இலங்கையர் என்ற உணர்வும் படிப் படியாக மறையத் தொடங்கியதை வரலாறு எடுத்துக்காட்டும். நாட்டின் ஆட்சியதிகாரம் இலங்கையர்கள் எவரிடமும் இல்லாதிருந்தபோது அனைவரும் இலங்கையர்கள். ஆனால் அந்த ஆட்சியதிகாரம் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் கைகளுக்கு மாறியபோது சிங்களவர்கள் தான் இலங்கையர்கள்.



இலங்கை பல்லின மக்கள் கொண்ட நாடு என்ற உண்மை இருந்தபோது நாட்டு மக்கள் அனைவரும் இலங்கையர்கள். ஆனால் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற போலிப் புனைவு முனைப்புப் பெற்றபோது இலங்கையர் என்ற உணர்வும் தமிழர்களிடம் தானாக மறையத் தொடங்கி விட்டது என்பது தான் யதார்த்தம்.

அரசியலமைப்பில் இந்நாட்டுக்கு சிறிலங்கா என்றும் இலங்கை என்றும் இரண்டு பெயர்கள் இருப்பது எதை உணர்த்துகிறது? நாட்டின் ஆட்சியதிகாரம் மட்டுமன்றி மதம், மொழி போன்றனவும் அரசியலமைப்பிலனூடாக ஒரு இனத்துக்குரியதாக மாறும் போது ஏனைய இனத்தவர் எவ்வாறு தம்மை இலங்கையராக உணரமுடியும்? சிலோனாக இருந்த போது அனைவரும் இலங்கையர்கள். ஆனால் சிறிலங்கா என்றான போது இலங்கையர் என்பது இலங்கைத் தமிழராகவும் பின் அதுவே தமிழீழத் தவராகவும் அந்நியப்பட்டுப் போனது என்பதுதானே வரலாறு.

இலங்கையராக உணர்ந்த போது சமஷ்டியே வேண்டாம் என்ற தமிழர்களை பின்னர் தமிழீழமே தீர்வு என்ற கையறு நிலைக்குத் தள்ளியது யார் அல்லது எது? சிங்களவர்கள் சிங்களவராகச் சிந்தித்த போது இலங்கையராகச் சிந்தித்ததே தாம் விட்ட மாபெரும் தவறு என்று இன்றுவரை தமிழர்களை எண்ணும் நிலைக்கு தள்ளியது யார்? இரு மொழி ஒருநாடு, ஒருமொழி இரு நாடு என்றுரைத்த முற்போக்கு வாதியே பின்னர் சிறிலங்கா என்ற பெயரில் பௌத்த சிங்கள அரசியலமைப்பொன்றுக்கு மாறியபோது, இலங்கையராக இருந்த தமிழர்கள் தமிழீழத்தவராக மாறியது எவ்வாறு தவறாக இருக்கமுடியும்?

தமிழர்களையும் இலங்கையராகக் கருதியிருந்தால் அவர்கள் பல்கலைக் கழகத்தினுள் நுழைவதற்கு கூடுதல் புள்ளிகளைப் பெற வேண்டுமென்ற சட்டம் ஏன் வந்தது? இந்நாட்டில் புத்தகம் பிடித்திருந்த கைகளைத் துப்பாக்கி தூக்க வைத்தது யார்? ஊதுகுழல் சத்தத்தில் மகிழ்ந்திருந்த

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**-க. அருந்தவபாலன் -**



சிறுவர்களை பல்குழல் பீரங்கிகளின் சத்தத்துக்குள் தள்ளியவர்கள் யார்? பௌத்த சிங்களக் கோட்பாடு தமிழர்களை மட்டுமல்ல இந்த நாட்டையே படுகுழிக்குள் தள்ளி விட்டுள்ளது என்பதை இன்னும் உணராதிருப்போரை என்னவென்று அழைப்பது? அத்தனை அழிவுகளையும் அவலங்ளையும் தமிழர்க்கு தந்து விட்டு இலங்கையராக அவர்கள் தம்மை வெளிப்படுத்தவில்லை எனத் திட்டுவதில் என்ன நியாயம் இருக்கமுடியும்? செய்த தவறுகளுக்கு பரிகாரங்களைத் தேடி தமிழர்களை அணைப்பதன் மூலமாகவன்றி முன்னைய ஆதிக்க நிலையிலிருந்து கொண்டே அவர்களை இலங்கையராக மாற்ற முனைவது எவ்வளவு மடைத்தனமானது?

தாமும் இலங்கையரே என்ற உணர்விலிருந்து தமிழ்மக்களை அந்நியப் படுத்தியது மட்டுமன்றி அதனைத் துருவநிலைக்குத் தள்ளியதற்கான பெரும்பங்கு சிங்கள மகாஜனங்களுக்கும் அவர்தம் தலைவர்களுக்குமே உரியது. தன்னைப் பாதுகாப்பதற்காக திருப்பித் தாக்குவது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றே. அதனைத் தவறு என்பது ஆதிக்க மனப்பாங்கு. நான் அடிக்கும் போது நீ அடங்கிப்போக வேண்டும் என எண்ணுவதன் மூலமோ அன்றி பௌத்த சிங்களக் கற்பனைக்குள் கரைக்க முயற்சிப்பதன் மூலமோ தமிழர்களை மட்டுமன்றி இந்நாட்டிலுள்ள ஏனைய தேசிய இனங்களைக் கூட இலங்கையராக உணரச் செய்ய முடியாது என்ற உண்மை பெரும்பான்மையான சிங்கள மக்களால் உணரப்படவேண்டும். அதனை அரசியல், சமூக,சமயத் தலைவர்கள் ஒற்றுபட்டு உணர்த்தவேண்டும். அந்நியப் படுத்தியவர்களே அதற்கான பரிகாரங்களையும் தேடவேண்டும்.

சுட்ட மண்ணையும் பச்சை மண்ணையும் ஒட்டுவதென்பது இலகுவான விடயமன்று. அதற்கு நெடுந்தூரம் பயணிக்க வேண்டும். ஆனால் அப்பயணத்துக்கு யாரும் தயாராகவில்லை என்பதே யதார்த்த நிலை. மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று வந்தவர்களே எந்த மாற்றத்தையும் தமிழர்க்கு வழங்கத் தயாராக இல்லாதபோது மற்றவர்கள் எம்மாத்திரம்? மகாவம்ச மனநிலையிலிருந்து பெரும்பான்மை சிங்கள மக்கள் எப்போது வெளியில் வரத் தொடங்குகிறார்களோ அப்போதே அனைவரும் இலங்கையராக உணரும்நிலை துளிர்விடத் தொடங்கும். அதுவரை நாட்டில் இலங்கைத் தமிழராக இருத்தல் மட்டுமே தொடரும்.

(நன்றி:தினக்குரல்– 27 செப் ஞாயிறு)

# ஐக்கிய நாடுகள் சபையின் மேடையில் நின்று அதன் சாசனத்தின் பிரதியை கிழித்து வீசிய கேணல் கடாபி!

ஐக்கிய நாடுகள் சபையின் மேடையில் நின்று, அதன் சாசனத்தின் பிரதியைக் கிழித்துத் தரையில் வீசியவர் ஐக்கிய நாடுகள் சபையிலேயே நின்று கொண்டு அதன் பாதுகாப்பு கவுன்சிலை 'பயங்கர வாத கவுன்சில்' என்று அழைத்தவர் ஐக்கிய நாடுகள் சபையை 'ஹைட் பார்க் ஸ்பீக்கர்ஸ் கார்னர்' போன்றது என்று ஒப்பிட்டு, இங்கே பிரதிநிதிகள் வந்து பேசி விட்டுப் போகிறார்கள் உருப்படியாக எதுவும் நடப்ப தில்லை என்று சாடியவர் ஐக்கிய நாடுகள் பாது காப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர் களை நோக்கி, அணுசக்தி கொண்ட நாடுகளிடம் இத்தகைய அதிகாரம் இருப்பதே ஒரு வகையான பயங்கர வாதம் என்று கேள்வி எழுப்பியவர் அவர் தான் லிபியாவின் முன்னாள் அதிபர் முஅம்மர் கடாபி.

முஅம்மர் கடாபி ஆட்சிக்கு வந்த நாற்பது ஆண்டுகளில், ஒருமுறை கூட ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டதில்லை. ஆனால் 2009ஆம் ஆண்டு அவர் முதன்முறையாக நியூயார்க்கில் கால்பதித்த போது ஏதோ ஒரு அதிரடியான சம்பவம் நிகழப் போகிறது என்பதை உலகம் உணர்ந் தது. அதுதான் நடந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் நடை முறையின்படி, ஒவ்வொரு நாட்டுத் தலைவருக்கும் உரையாற்றுவதற்காக குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப் படும். ஆனால் கடாபி மேடையேறிய தும், நேரக் கட்டுப்பாட்டைப் பொருட்படுத்தாமல் சரளமாக அரபு மொழியில் பேசத் தொடங்கினார்.

பத்து நிமிடங்கள் கடந்தன, இருபது நிமிடங்கள் கடந்தன, முப்பது நிமிடங் களும் கடந்தன. ஆனால் அவரது உரை தொடர்ந்து கொண்டே இருந் தது. இறுதியில், தொண்ணூறு நிமிட ங்களுக்கும் மேலாக அவர் உரையாற்றி னார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரப் பூர்வ லிபிய மொழிபெயர்ப்பாளர் ஹுதா ஜலீல் கடாபியின் நீண்டதும் தீவிர மானதுமான உரையை இடைவிடாது மொழி பெயர்த்து மிகவும் களைப் படைந்தார். உரையின் எண்பதாவது நிமிடத்தை எட்டியபோது, நேரலை ஒலி வாங்கியிலேயே தன்னால் இதற்கு மேலும் தொடர முடியாது என்பதை வெளிப்படுத்தும் அளவுக்கு அவர் சோர்வடைந்தார். அதன் பின்னர் மற் றொரு மொழிபெயர்ப்பாளர் வந்து, மீதமிருந்த உரையைச் சமாளித்தார்.

கடாபியின் முக்கியமான கோபம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சி லின் நிரந்தர உறுப்பினர்களான அமெ ரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷியா மற்றும் சீனா ஆகிய ஐந்து வல்லரசு நாடுகளின் ஏகபோக வீட்டோ அதிகார த்தின் மீதுதான் இருந்தது. அவர் அந்த வல்லரசு நாடுகளை நேரடி யாகவே சாடினார்.

1945முதல் இன்றுவரை இந்த பாது காப்பு கவுன்சில் சிறிய நாடுகளுக்கு எந்தப் பாதுகாப்பையும் வழங்க வில்லை. அவர்களுக்கு வழங்கியது போர்களையும், தாக்குதல்களையும், தடைகளையும் மட்டுமே என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

அதன் பின்னர் அவர் இன்னும் கடுமை யாகக் கூறினார்: இதனைப் பாதுகாப்பு கவுன்சில் என்று அழைப்பது தவறு இது உண்மையில் ஒரு பயங்கரவாத கவுன்சில். இதிலும் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை.

அமெரிக்காவை நோக்கி விரல் நீட்டிய கடாபி, முன்னாள் அமெரிக்க அதிபர் ஜான் எஃப். கென்னடியின் படுகொலை மற்றும் 2003ஆம் ஆண்டு நடை




பெற்ற ஈராக் போர் தொடர்பாக சர்வ தேச விசாரணை நடத்தப்பட வேண் டும் என்று வலியுறுத்தினார்.

அதேவேளை, அப்போது உலகம் முழுவதும் பரவியிருந்த 'ஸ்வைன் ஃபுளூ' (Swine Flu) வைரஸ், ஏதேனும் ஆய்வகத்தில் உருவாக்கப் பட்ட இராணுவ உயிரியல் ஆயுதமாக இருக்கக்கூடுமா என்ற சந்தேகத்தை யும் அவர் எழுப்பினார்.

உரையின் ஒரு கட்டத்தில், கடாபி தனது கையில் இருந்த ஐக்கிய நாடுகள் சாசனத்தின் அதிகாரப்பூர்வப் பிரதியை உயர்த்திப் பிடித்தார்.

இந்த சாசனத்தின் முன்னுரையில் உலகின் அனைத்து நாடுகளுக்கும் சம உரிமை உண்டு என்று குறிப் பிடப்பட்டுள்ளது. ஆனால் நடை முறையில், வல்லரசு நாடுகளின் முன்னிலையில் சிறிய நாடுகளுக்கு ஒரு பைசா கூட மதிப்பில்லை என்று அவர் சாடினார்.

இதைச் சொல்லிக் கொண்டிருந்த போதே, மிகுந்த ஆத்திரத்துடன் உலகத் தலைவர்களின் முன்னிலையில் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் பக்கங் களைக் கிழித்தெறிந்தார்.

பின்னர், கிழிக்கப்பட்ட அந்தக் காகிதத் துண்டுகளை முன்னால் அமர்ந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் மற்றும் அதிகாரிகளின் மேசை நோக்கி எறிந்தார். அந்தக் காட்சி அரங்கையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

சில கணங்களுக்கு அந்த அரங்கம் முழுவதும் நிசப்தம் நிலவியது.

கடாபியின் அந்த உரை சர்வதேச இராஜதந்திர நெறிமுறைகளுக்குள் அடங்காத ஒன்றாக இருக்கலாம். அவரது நடவடிக்கைகளை பலர் பிடிவாதம் என்றும், சிலர் அவரது வழக்கத்திற்கு மாறான தன்மையின் வெளிப்பாடு என்றும் விமர்சிக்கலாம்.

ஆனால், வல்லரசு நாடுகளின் இரட்டை நிலைப்பாடுகள் குறித்தும், ஐக்கிய நாடுகள் சபையின் செயலற்ற தன்மை குறித்தும் அவர் அன்றைய தினம் தொண்ணூறு நிமிடங்களுக்கும் மேலாக முன்வைத்த கடுமையான கேள்விகள், பல ஆண்டுகள் கடந்த பின்னரும் சர்வதேச அரசியலில் தொடர்ந்து விவாதிக்கப்படும் கேள்வி களாகவே உள்ளன.

ஒரு நாட்டின் தலைவர் ஐக்கிய நாடு கள் சபையின் மேடையில் நின்று கொண்டு, அதே அமைப்பின் சாசனத் தையே கிழித்தெறிந்து, அதன் பாது காப்பு கவுன்சிலையே 'பயங்கரவாத கவுன்சில்' என்று சாடிய அந்தக் காட்சி ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றில் மறக்க முடியாத அதிரடி தருணங் களில் ஒன்றாகப் பதிவாகியுள்ளது.

## ஐ.நா.பேரவையில் நெதன்யாகுவின் ஆவேச உரை! பிரதிநிதிகளை நேர்மையற்ற கோழைகள் என விமர்சித்தார்

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, காஸா, ஈரான் மற்றும் மத்திய கிழக்கில் தனது நாடு மேற் கொண்டு வரும் இராணுவ நடவடி க்கைகளைத் தீவிரமாக நியாயப்படுத்தி உரையாற்றியுள்ளார்.

நெதன்யாகு மேடையேறியதும் பல நாட்டுப் பிரதிநிதிகள் கூட்டரங்கை விட்டு வெளிநடப்பு செய்த நிலையில்,

நாங்கள் வெற்றி பெறுவோம், அதைத் தவிர வேறு வழியில்லை. அரங்கில் இருக்கும் எஞ்சிய நேர்மையற்ற கோழைகளும் விருப்பமிருந்தால் வெளியேறலாம்' என நெதன்யாகு ஆவேசமாகத் தெரிவித்துள்ளார்.

காஸாவில் இஸ்ரேல் இனப்படுகொலை செய்வதாகச் சுமத்தப்படும் குற்றச் சாட்டுகளை முற்றாக நிராகரித்த அவர், தற்காப்புக்காகவே போரிடுவ தாகக் குறிப்பிட்டுள்ளார்.

காலனித்துவக் குற்றச்சாட்டைச் சுமத் தும் ஐரோப்பிய நாடுகளான பிரித் தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடு களை நோக்கி 'காலனித்துவம் என்ற வார்த்தையைக் கண்டு பிடித்தவர்களே அவர்கள் தான்' என விமர்சித்துள் ளார்.

துருக்கி ஜனாதிபதி ரசெப் தாயிப் எர்டோகனை 'சர்வாதிகாரி' என விமர் சித்ததுடன் அவர் ஹமாஸுக்கு ஆதர வளிப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

நியூயோர்க் மேயர் சோஹ்ரான் மம் தானியை கடுமையாக விமர்சித்த நெதன்யாகு அவர் பதவியேற்றது முதல் நியூயோர்க்கில் யூதர்களுக்குப் பாதுகாப்பு உணர்வு குறைந்துள்ள தாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் ஈரான் மீது





மேற் கொள்ளப்பட்ட கூட்டு வான் வழித் தாக்குதல்களுக்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் துணிச்சலான தலைமைத்துவத் திற்கு' நெதன்யாகு நன்றி தெரிவித்து ள்ளார்.

நெதன்யாகுவின் உரைக்குச் சில மணி நேரங்களுக்கு முன்பாக, அமெ ரிக்க நுழைவு இசைவு மறுக்கப் பட்டதால் காணொளி மூலம் உரை யாற்றிய பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், சமீபத்திய செய்தி களை படியுங்கள்

மேற்குக்கரையில் இஸ்ரேலியக் குடி யிருப்புகளின் சட்டவிரோத விரிவாக் கம் பாலஸ்தீன மக்களின் வாழ்வா தாரத்தையும், இரு-நாடு தீர்வையும் முற்றாகப் அழித்து வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளார். காஸாவில் பாலஸ்தீன மக்கள் மீதான கொலை கள், அழிவுகள் மற்றும் பட்டினிப் போர் நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். நெதன்யாகுவின் ஐ.நா வருகைக்கு எதிராக நியூயோர்க் நகரில் வீதிகளை மறித்துப் பாரிய போராட்டங்கள் நடைபெற்றன. இப் போராட்டத்தில் பங்கேற்ற ஒஸ்கார் விருது பெற்ற பிரபல ஹொலிவூ நடிகை சூசன் சரண்டன், நடிகை ஹனா என்பிண்டர் மற்றும் நியூயோர்க் நகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் இஸ்ரேலில் முக்கிய பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், உள்நாட்டு வாக்குகளை ஈர்க்கவும் சர்வதேச அளவில் ஆதரவைத் திரட்டவுமே நெதன்யாகு இத்தகைய காரசாரமான உரையை ஆற்றியதாக அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# குறுகிய சிந்தனை கொண்ட “குதிரை” கஜேந்திரனின் கீழ்த்தரமான அரசியல்!

சில நேரங்களில் சில விடயங்களை வெளிப்படையாக பேசத்தான் வேண்டும், எங்களை கேட்க யாரும் இல்லை என்ற மன நிலை மாற வேண்டும்!

27 செப் 2026 யாழில் சிலை அகற்றப்பட்ட விவகாரம், தமிழர்களை கொதிப்படைய செய்தது, அதே நேரம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவர்கள் இந்த விவகாரம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது, தமிழரசுக் கட்சியும் இந்த சதிக்கு பின்னால் இருந்தது, அனுர அரசும் தமிழரசுக் கட்சியும் கூட்டு, பொலிசாரை ஏவி விட்டது தமிழரசுக் கட்சி என்கின்ற அடிப்படையிலும், சி.வி.கே சிவஞானமும் இதற்கு காரணம் என குற்றம் சாட்டியிருந்தார்.

அதே வேளை தமிழரசுக்கட்சியை சேர்ந்த யாழ் மாநகர முதல்வர், யாழ் மாநகர சபை உறுப்பினர் ஆகியோர் இந்த குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளிக்கும் போது, அங்கு சிலையை வைத்து விட்டு பிரச்சினை வரப் போகுது என்றவுடன் தான் யாழ் மாநகர சபையை நாடினார்கள்,

நாங்கள் தற்துணிவில் கடந்த 26ம் திகதி வரை தற்காலிகமாக சிலை வைக்க அனுமதி வழங்கியிருந்தோம், இதனால் நாங்கள் பொலிஸ் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரது விசாரணைகளுக்கு முகம் கொடுத்திருந்தோம், எப்போது தற்காலிக அனுமதித் திகதி முடிவடையும் என்று காத்துக் கொண்டிருந்து இன்று 27ம் திகதி சிலையை பொலிசார் அகற்றியுள்ளனர், இதற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, நாங்கள் சட்டப்படி அங்கு ஒரு நினைவுத்தூபியை அமைப்போம் என்று கூறியிருந்தார்கள்.

இதே வேளை இது தொடர்பாக அமைச்சர் சந்திரசேகர் கருத்து தெரிவிக்கும் போது, இந்த சம்பவத்திற்கும் அனுர அரசிற்கும் எந்த தொடர்பும் இல்லை, இது யாழ் மாநகர சபை மற்றும் யாழ் பொலிசார் சார்ந்த விடயம் என கஜேந்திரனின் கருத்தை தங்களுக்கு சாதகமாக்கி ஒரு பதிலை குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை இன்று 27ம் திகதி மாலை சிலை அகற்றப்பட்டமை தொடர்பில் நல்லூரில் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது விடயம் என்னவென்றால், சரியாக சட்டப்படி சொல்ல வேண்டுமென்றால், அனுமதி கொடுக்கப்பட்ட திகதி முடிந்ததும் பொலிசார் அவர்களது கடமையை செய்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

இந்த சம்பவம் நடந்ததும் கஜேந்திரன் என்ன செய்திருக்க வேண்டும்,



பொலிசார் தமிழர்களின் உணர்வு சார்ந்த விடயத்தை இப்படி அணுகியிருக்கக் கூடாது, சில சந்தர்ப்பங்களில் தமிழர்களுக்கு ஆதரவான (சட்டத்தின் படி) நீதிமன்ற உத்தரவுகளை கூட நடைமுறைப்படுத்தாத இந்த பொலிசார், சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட தையிட்டி விகாரையை அகற்ற துணிவில்லாத பொலிசார், பிக்குகள் தமிழர் பகுதியில் அடாவடியில் ஈடுபடும் போது தடுக்க முடியாமல் வேடிக்கை பார்க்கும் பொலிசார், வெசாக் காலங்களில் இடம் பெறும் சட்ட மீறல்களை வேடிக்கை பார்க்கும் பொலிசார் மற்றும் இவற்றையெல்லாம் மேலிருந்து வேடிக்கை பார்க்கும் அனுர அரசு, இந்த விடயத்தில் மட்டும் கால அவகாசம் கொடுக்காமல், கண்ணியமான முறையில் நடந்து கொள்ளாமல், இவ்வாறு செயற்பட்டதை கண்டிக்கிறோம் என கூறியிருக்க வேண்டும்.

ஆனால் ஆயிரம் பிரச்சினை, ஆயிரம் அரசியல், கட்சிகளுக்குள் இருந்தாலும், இந்த சந்தர்ப்பத்தில் தமிழரசுக் கட்சியை இதற்குள் இழுத்து விட்டு இந்த பிரச்சினையை திசை திருப்பி விட்டிருக்கிறார் கஜேந்திரன், தமிழர்களின் நலனுக்கு மாறாக செயற்படும் பொது எதிரியான சிங்கள அரசை எதிர்ப்பதை தாண்டி தங்களின் அரசியலுக்காக, தங்களின் அரசியல் எதிரியான தமிழரசுக் கட்சியையும் இதற்குள் கோர்த்து விட்டு ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் செயலை கஜேந்திரன் செய்ய முயன்றிருக்கிறாரா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுகின்றது. (தமிழரசுக் கட்சி இதில் தவறு விட்டிருந்தால் அதனை பிறிதொரு சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டியிருக்கலாம்). ஆனால் இதன் விளைவாக இறுதியில் என்ன நடந்தது? பொது எதிரியும், இந்த பிரச்சினைக்கு காரணமான பொலிசாரும், அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கும் அனுர அரசும், இந்த விடயத்தில் பொறுப்புக் கூறும் இடத்தில் இருந்து தப்பித்து விட்டார்கள், மேலும் 27ம் திகதி




மாலை நடந்த போராட்டத்தில் தமிழரசுக் கட்சியினர் மற்றும் அவர்களின் ஆதரவு பெற்ற கட்சிகளை சார்ந்தவர்கள் பெரியளவில் பங்கு பெறவில்லை, ஒரு கட்சி மற்றும் அந்த கட்சியின் ஆதரவு பெற்றவர்களின் போராட்டமாக மாறியிருந்தது, ஒட்டுமொத்த தமிழர்களும் இணைந்திருக்க வேண்டிய சூழல் இவ்வாறு பலவீனமாக மாறியிருக்கிறது.

இறுதியில் இவர்களுக்குள் அடிபட்டுக் கொண்டு அற்ப அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள், இது எங்களை பலவீனப்படுத்தும், மலினப்படுத்தும்.

இதற்கு பதில் சொல்ல வேண்டிய, பொறுப்புக்கூற வேண்டிய அனுர அரசின் அமைச்சரானா சந்திரசேகர், இது யாழ் மாநகர சபை மற்றும் பொலிசாருக்கு இடையேயான பிரச்சினை என்பதைப் போல சொல்லுகின்ற அளவிற்கு கொண்டுவந்து விட்டிருக்கிறது.

இவ்வாறான சம்பவங்களின் எதிரொலி தான் கடந்த கால தேர்தல் முடிவுகள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நன்றி -நடராசா ஜெயகாந்தன்.

## பொலிஸ் தரப்பு தகவல்

திலீபனின் சிலை சம்பந்தமாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமையவே அது அகற்றப்பட்ட என பொலிஸ் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யூ வுட்லர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் ஒருவரை நினைவு கூரும் வகையில், ‘எல்லாளன் படை’ என்ற குழுவொன்று செயற்படுவதாக கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதற்கும், யுத்த மன நிலையை உருவாக்கக்கூடிய சூழ்நிலைகளைத் தடுப்பதற்கும் திலீபனின் உருவச்சிலை அகற்றப்பட்டது. மேலும் குறித்த விடயம் தொடர்பில் யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் ஏற்கனவே விளக்கமளித்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.






# யாழ்ப்பாணம் வரப் பயந்த கோத்தபாய கொழும்பு நீதிமன்றத்தில் முன்னிலையானார்! வெளியே பெரும் கவனயீர்ப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணத்தில் ஏற்பாட்டாளர்களான லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் போனது தொடர்பான வழக்கில் சாட்சியமளிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 29 செப்டம்பர் 2026 கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலை யானார்.

2011ஆம் ஆண்டில் இரு ஏற்பாட்டா ளர்கள் காணாமல் போனது தொடர் பான வழக்கில், செப்டம்பர் 29-அன்று கொழும்பு தலைமை நீதி வான் நீதிமன்றத்திலிருந்து காணொளி வாயிலாக சாட்சியம் அளிக்குமாறு கோட்டபாய ராஜபக்ஷ வுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் ஆகஸ்ட் மாதத்தில் உத்தரவிட்டது.

ஆட்கள் காணாமல் போன சம்பவங் கள் நிகழ்ந்த காலத்தில் பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய கோட்ட பாய ராஜபக்ஷ அந்த விசாரணை தொடர்பாக சாட்சியமளிப்பதற்காக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத் தால் முதலில் 2019 செப்டம்பர் 27 அன்று அழைக்கப்பட்டார்.

பாதுகாப்பு காரணங்களைக் குறிப் பிட்டு, மின்னணு ஒலி-ஒளி வழி முறைகள் மூலம் முன்னிலையாக அனுமதிக்குமாறு கோட்டாபய ராஜ பக்ஷ கோரியிருந்த நிலையில், இந்த ஆண்டின் தொடக்கத்தில் அவர் தொலைதூரத்திலிருந்து சாட்சிய மளிக்க நீதிமன்றம் அனுமதி அளித் தது.

முன்னாள் ஜனாதிபதியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அவரது சட்டத்தரணிகள் குறிப்பிட்டதையடு த்து, கடந்த ஆண்டு டிசம்பரில் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாக வில்லை என்று நீதிமன்ற ஆவண ங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அனைவரினதும் நிலைமை தொடர்பான உண்மை களை வெளிப்படுத்துமாறும் லலித் குமார் வீரராஜு மற்றும் குகன் முருகானந்தன் உள்ளிட்ட அரசியல் படுகொலைகளுடன் தொடர்புடைய சம்பவங்களுக்கு நீதி வழங்குமாறும் வலியுறுத்தி முன்னிலை சோசலிசக் கட்சியினர் கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்கு அருகில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.



இதன்போது 'வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அனைவரையும் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்துங்கள்', 'அரசியல் படுகொலைகளுக்கு நீதி வழங்குங்கள்', 'வெள்ளைவேன் குற்ற வாளிகளுக்குத் தண்டனை வழங்கு ங்கள் உண்மையை வெளிப்படுத்து ங்கள்', 'லலித் - குகன் காணாமல் ஆக்கப்பட்டு 16 ஆண்டுகள் நீதி எங்கே?' ஆகிய வாசகங்கள் பொறிக் கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செய லாளர் புபுது ஜயகொட தெரிவிக்கை யில், லலித் குமார் வீரராஜு மற்றும் குகன் முருகானந்தன் ஆகிய இரு தோழர்களும் 2010 டிசெம்பர் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த உயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். அதனைத் தொடர் ந்து, அடுத்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பில் அப்போதைய அமைச்சர வைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவர்கள் இருவரும் தடுப்புக்காவலில் இருப்பதாகவும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் படுவார்கள் என்றும் தெரிவித்திருந் தார். எனினும், 16 ஆண்டுகள் கடந் துள்ள நிலையிலும் அவர்கள் தொடர் பான உண்மைகள் வெளிப்படுத்தப் படவில்லை.

2011ஆம் ஆண்டு அவர்கள் இரு வரும் எங்கு இருக்கின்றனர் என்பதை வெளிப்படுத்துமாறு கோரி மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்தோம். பின்னர், அந்த மனு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் முன்னெடுத்தது. அங்கு சாட்சிய மளித்த கெஹெலிய ரம்புக்வெல்ல, அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய அறிவுறுத்தலின் அடிப் படையிலேயே தான் அவ்வாறு தெரி வித்ததாகக் குறிப்பிட்டார்

இதனடிப்படையில் 2019ஏப்ரல் மாதம் இந்த விவகாரம் தொடர்பில் சாட்சி




யமளிப்பதற்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உத்தரவிடப்பட்டது. எனினும், அவர் நீண்டகாலமாக நீதி மன்றத்தில் முன்னிலையாகவில்லை. முன்னிலை சோசலிசக் கட்சி தொட ர்ச்சியாக முன்னெடுத்த போராட்டங் களின் விளைவாக, தற்போது அவர் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரம் 16 ஆண்டுகளின் பின்னரும் நீதிக்கான போராட்டம் தொடர்வதை வெளிப்படுத்துகிறது. லலித் - குகன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மாத்திரமன்றி, நாட்டில் இடம்பெற்ற ஏனைய வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் அரசியல் படுகொலைகள் தொடர்பான உண்மைகளும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ராஜபக்ஷ அரசாங்கத்தினால் நியமிக் கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையில் காணாமல் ஆக்கப்பட்ட 25,000 பேரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டு ள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்ட 30,000 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு ள்ளன. எனினும், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. குறைந்த பட்சம் உரிய சட்ட நடவடிக்கைகள் கூட முன்னெடுக்கப்படவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான உண்மைகளை வெளிப் படுத்துதல், இத்தகைய சம்பவங்களு க்குப் பொறுப்பானவர்களைக் கண்ட றிந்து தண்டனை வழங்குதல் மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறு வதைத் தடுத்தல் ஆகியவை அவசிய மானவை. இதற்காகச் சட்டரீதியான நடவடிக்கைகளுடன் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் போராட்ட ங்கள், பிரசாரங்கள் மற்றும் அரசியல் நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளோம். என ஜய கொட மேலும் சுட்டிக்காட்டினார்.

# செய்யறிவு உலகில் செம்மொழி தமிழும் தமிழரும்! மாநாடு 2026 தொடர்பான ஊடகச் சந்திப்பு!

மனிதன் தனது அறிவாற்றலால் உருவாக்கிய கணனி உலகம் இன்று மனித அறிவையே பிரதிபலிக்கும் செய்யறிவு எனப்படும் செயற்கை நுண்ணறிவு உலகமாகப் பரிணமித்திருக்கின்றது.

இந்தப் புதிய உலகத்தின் கதவுகள் திறக்கப்படும் வேளையில் ஆயிரமாயிரம் ஆண்டுகள் பழைமையான எமது தாய் மொழி தமிழும் அந்தத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழரும் புதிய சவால்களையும் புதிய வாய்ப்புக்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

இந்தக் காலத்தின் மிக முக்கியமான தேவை கருதி செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும் என்ற மாநாடு ரொறன்ரோவில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை தமிழ்ச் சமூகத்தின் கவனத்துக்குரிய விடயமாகும்.

இந்த நிகழ்வுகளை முன்னிட்டு செப்டெம்பர் 24ஆம் திகதி மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் பேராசிரியர் பாலசுந்தரம் பேராசிரியர் சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் கலந்து கொண்டு மாநாட்டுக்குக் கிடைக்கப் பெற்ற ஆய்வுக் கட்டுரைகள் தொடர்பாக கருத்துக்களைத் தெரிவித்தனர்.

மாநாட்டுக்காக 497 ஆய்வுக் கட்டுரைகள் கிடைக்கப் பெற்றதாகவும் அவற்றுள் 97 கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. சில ஆய்வுக் கட்டுரைகள் செய்யறிவின் துணையுடன் எழுதப்பட்டுள்ளன என்பதையும் அவர்கள் நகைச்சுவையாகக் குறிப்பிட்டனர்.

இது வெறுமனே நகைச்சுவைக்குரிய விடயம் மட்டுமல்ல. செய்யறிவு ஏற்கனவே எமது அறிவியல் கல்வி மற்றும் ஆய்வுலகிற்குள் நுழைந்து விட்டது என்பதையும் மனிதனின் அறிவையும் மூளைத் திறனையும் கேளவிக்குள்ளாக்கி விட்டன என்பதற்கான ஓர் அடையாளமுமாகும்.

எதிர்வரும் ஒக்டோபர் 15 முதல் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வு 3 பகுதிகளாக நடைபெறவுள்ளது. முதல் இரண்டு நாட்களும் ஆய்வு மாநாடு. இந்த நிகழ்வில் அறிவியல் மற்றும் அறிவுசார் ஆய்வுகள் இடம்பெறும்.

497 ஆய்வுக் கட்டுரைகள் கிடைக்கப் பெற்ற நிலையில் அவற்றுள் 97 ஆய்வுகள் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த எண்ணிக்கை உலகெங்கும் வாழும் தமிழர்களிடையே தமிழ் மொழி இலக்கியம் வரலாறு பண்பாடு மற்றும் நவீன அறிவியல் தொடர்பான ஆய்வார்வம் தொடர்ந்தும் உயிர்ப்புடன் இருப்பதைக் காட்டுகின்றது.

இம்மாநாட்டின் முக்கியத்துவம் இன்னொரு பக்கமாகவும் இருக்கின்றது. தமிழ் வெறுமனே கடந்த காலத்தைப் பேசும் மொழியாக இருக்க வேண்டுமா? அல்லது எதிர்கால அறிவியலையும் பேசும் மொழியாக மாற வேண்டுமா? இதுவே இன்று நாம் கேட்க வேண்டிய அடிப்படைக் கேள்வியாகும்.

அரங்கத்திற்குள் முடங்கிப் போகும் ஆய்வும் அறிவியலும் மட்டும் தமிழின் முழுமையான முகம் அல்ல. சாதாரண பாமரத் தமிழரையும் இணைத்து தமிழின் உயிர் அதன் கலை, இசை, நடனம், நாடகம், இலக்கியம், பண்பாடு மற்றும் வாழ்வியல் மரபுகளிலும் இருக்கின்றது என்பதை உணர்த்த வேண்டும். அனைத்துத் தமிழரையும் இணைக்க வேண்டும் என்ற பெருநோக்கில் கலை இரவு தமிழரின் கலை மற்றும் பண்பாட்டு வளத்தை வெளிப்படுத்தும் நிகழ்வாக அமையவுள்ளது.

இந்நிகழ்வுத் தொடரின் மற்றுமொரு முக்கிய அம்சமாக வருடாந்த இராப்போசன விருந்து இடம்பெறவுள்ளது. ஒரு சமூகத்தின் வலிமை அதன் அறிவிலும் கலையிலும் மட்டும் இல்லை. அதன் உறவிலும் ஒன்றுகூடலிலும் இருக்கின்றது.

உலகின் பல்வேறு நாடுகளிலும் இருந்து வருகை தருகின்ற சான்றோர்கள் கலைஞர்கள் பேச்சாளர்கள் சுவைஞர்கள் ஒரே இடத்தில் சந்தித்து கருத்துக்களைப் பகிர்ந்து, நட்புறவுகளைப் புதுப்பித்து புதிய தலைமுறையினர் ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக் கொள்ளும் ஒரு வாய்ப்பாக இந்த வருடாந்த இராப்போசன விருந்து அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

ஒரு காலத்தில் கணனி தமிழருக்கு முற்றிலும் புதிய உலகமாக இருந்தது. ஆனால் கணனித் துறை வளர்ச்சியடைந்த போது தமிழ் அதனைப் புறக்கணிக்கவில்லை. தமிழ் எழுத்துருக்கள் உருவாகின. தமிழ் தட்டச்சு முறைகள் வந்தன. தமிழ் இணையத் தளங்கள் தோன்றின. மின்னஞ்சல சமூக ஊடகம் இணையவழிக் கல்வி என்று தமிழ் புதிய தொழில்நுட்ப உலகத்திற்குள் படிப்படியாகத் தன்னைப் பொருத்திக் கொண்டது.

அதேபோன்று இன்று செய்யறிவையும் தமிழர் கற்றுக் கொண்டு தமிழின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. செய்யறிவு தமிழுக்குப் பகை அல்ல. அது பயன்பாடு என்பதை நன்கு விளங்கி திரு நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெறும் விழா சிறப்பானது. பாராட்டுக்குரியது.

அன்பர்களே! செய்யறிவு அறிவைத் தரலாம். தமிழின் ஆன்மாவைத் தமிழரே காப்பாற்ற வேண்டும். எனவே செய்யறிவை நம்பி எல்லாவற்றையும் ஒப்படைத்து விட்டு தமிழர் ஒதுங்கி விடக் கூடாது.

செய்யறிவை நாம் பயன்படுத்துவோம். ஆனால் தமிழின் அறிவைச் செய்யறிவுக்குள் நாமே கொண்டு செல்வோம் என்ற நிலைப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்ற சிந்தனை மேடையாக ரொறன்ரோவில் நடைபெறவுள்ள இம்மாநாட்டு நிகழ்வுகள் அமையட்டும்.

இத்தகைய பரந்த நோக்கத்துடன் ஆய்வு மாநாடு, கலை இரவு, வருடாந்த இராப்போசன விருந்து ஆகிய நிகழ்வுகளை ஒருங்கிணைத்து நடத்துகின்ற திரு. நிமால் விநாயகமூர்த்தி அவர்களின் தலைமையிலான சான்றோர் குழுவினரை மீண்டும் பாராட்டுகின்றோம்.

கணனி வந்த போது தமிழ் அதனை உள்வாங்கியது. இணையம் வந்த போது தமிழ் இணையத்திற்குச் சென்றது. இப்போது செய்யறிவு வந்திருக்கின்றது. அடுத்த பயணத்திற்கும் அன்னை தமிழ் தயாராகி விட்டடாள்.

புலம்பெயர்ந்து வாழும் என் இளைய தலைமுறையே! தமிழை கற்றுக் கொள்வாயா? தமிழுக்காக நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? செய்யறிவு உலகம் கதவைத் திறந்து விட்டது. அதற்குள் தமிழை அழைத்துக் கொண்டு செல்வதற்கு தயாராகுங்கள்! நாளை நமதே! நன்றும் தீதும் பிறர் தர வாரா -2000 ஆண்டுகளுக்கு முன் தொல்காப்பியன் கூறிய வார்த்தைகள்.

T.K.பரமேஸ்வரன் - ஆசிரியர் ஈழநாடு

நன்றி:- புகைப்படம் ரவி அச்சுதன்










